பக்கங்கள்: 16
விலை: 30.00
# தீம்புனல்
THEEMPUNAL
வாராந்தப் பத்திரிகை
தீ : 01 புனல்:26 23.10.2021 சனிக்கிழமை வள்ளுவர் ஆண்டு 2052



சமூக கூட்டு மனநிலை பெண்களை அரசியலிலிருந்து புறந்தள்ளுகிறது

பக்கம் 11



மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடிய போராட்ட வடிவங்கள் தேவை

பக்கம் 08

யாதுமானவன்



# இலங்கையில் தமிழர்களின் அரசியல் உறுதிப்பாடு
## ஏன் கேள்விக்குள்ளாகியிருக்கின்றது?

இலங்கைத் தமிழர்களின் அரசியல்நிலை மிக மோசமான எல்லைக்குத் தள்ளிவிடப்பட்டிருக்கும் காலம் இது. கடந்த காலத் தமிழர் அரசியல் வரலாற்று நீட்சியுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது மிகவும் நலிவான, மீளவும் கட்டியமைப்பதில் கடினமான எல்லைகளைத் தொட்டுக் கொண்டு இருப்பதாகத் தோன்றுகின்றது. இலங்கை பிரிட்டிஸ் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றதனைத் தொடர்ந்து, அதுவரை இலங்கையை அந்நியர்களிடமிருந்து விடுவிப்பதற்கு இலங்கையின் அனைத்து இனத்தவரின் ஒத்துழைப்பினையும் வேண்டி நின்ற சிங்களப் பெரும்பான்மையினத் தலைவர்கள், சுதந்திரத்துக்குப் பின்னைய காலங்களில் சிறுபான்மை இனத்தவரைத் தங்களது ஆதிக்கத்தின் கீழ் நிலைப்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டனர். இது சிறுபான்மை இனங்களுக்கிடையே பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தியதனைத் தொடர்ந்து, தனித்த அரசியல் தலைமைகள் உருவாகவும் தனித்த அரசியல் கட்சிகள் தோற்றம் பெறவும் காரணமாகியது என்பது வரலாற்றின் தொடர்பில் அறிந்து கொள்ளத் தக்கதாகும்.

இலங்கையின் சுதந்திரப்போராட்டத்தில் சிங்களத் தலைவர்களின் பங்களிப்புக்கு ஈடாகவே ஏனைய இனத் தலைவர்களின் பங்களிப்புக்கள் இருந்த போதும், சிங்களத் தலைமைகள் இலங்கை நாட்டின் பெரும்பான்மைக் குடிகளாக தாங்கள் இருப்பதனைக் கொண்டும், புத்தமதத்தின் செல்வாக்கு நிலையினை அல்லது புத்த மதத்துக் கென்றவொரு ஆதிக்க நாட்டினை உருவாக்கும் நோக்கிலும் அதிகாரத்தினை தங்கள் வசம் வைத்திருக்கும் நோக்கத்தின் தீவிரத்தினை வெளிப்படுத்துவதாகவே சுதந்திரத்திற்குப் பின்னான அவர்களின் செயற்பாடு இருந்து வந்திருக்கின்றது. இது இன்றுவரை மிகத் தீவிரத்துடன்தான் இயங்கியும் வருகின்றது.

▶15





# 13 ஆவது திருத்தம்
## அரசியல் தீர்வின் ஆரம்பப் புள்ளியா?


சி.அ.யோதிலிங்கம்

13 ஆவது திருத்தம் பற்றிய வாதப் பிரதிவாதங்கள் மீளவும் தொடங்கியிருக்கின்றன. இந்திய வெளிஉறவுச் செயலரின் வருகையும், இலங்கை அரசின் மாகாணசபைத் தேர்தல் பற்றிய அறிவிப்பும் இந்த வாதங்களைத் தூண்டியுள்ளன. இந்திய வெளிஉறவுச் செயலர் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நிறைவேற்றும்படி தமிழ்க்கட்சிகள் ஒருங்கிணைந்து குரல் கொடுக்க வேண்டும் என்ற வேண்டுகோளையும் விடுத்துச் சென்றிருக்கின்றார். 13 ஆவது திருத்தம் தமிழ் மக்களிற்கான அரசியல் தீர்வாக ஏற்றுக் கொள்ள முடியாது என்பதில் அனைத்து தமிழ்த்தேசியக் கட்சிகளுக்கும் உடன்பாடு இருந்தாலும் அது அரசியல் தீர்வின் ஆரம்பப் புள்ளியாக இருக்குமா? என்பது தொடர்பாகவே வாதப் பிரதிவாதங்கள் கிழப்பப்பட்டுள்ளன. இதனை ஆரம்பப் புள்ளியாகக் கொள்ளலாம் என்பது ஒரு தரப்பின் வாதம். ஒற்றையாட்சிக்குட்பட்ட ஒரு பொறிமுறை ஆரம்பப்புள்ளியாகக்கூட இருக்கமாட்டாது என்பது மறு தரப்பின் வாதம்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஆரம்பப்புள்ளியாகக் கொள்ளலாம் என்ற கருத்தையே கொண்டுள்ளது. விக்கினேஸ்வரனின் கட்சியிடமும் அந்தக் கருத்தே இருப்பது போலத் தெரிகின்றது. எனினும் அவரது கூட்டணியிலுள்ள சிவாஜிலிங்கம் ஆரம்பப்புள்ளியாகக் கூட இருக்கத் தகுதியற்றது என்றே கூறி வருகின்றார். தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி ஆரம்பப் புள்ளியாகக் கூட இருக்கத் தகுதியற்றது எனக் கூறி மொத்தமாகவே நிராகரிக்கின்றது.

▶15









‘பேசாப் பொருளையும் பேசும் குரல்’



ஐ.வி.மகாசேனன்

# வடகொரியாவின் தொடர் ஏவுகணைப் பரிசோதனைகள்

## உலகளாவிய அரசியலின் மூலோபாய நகர்வா?

சர்வதேச அரசியலில் ஏவுகணைப் பரிசோதனைகள் கனதியான அரசியலாய் நிலைபெற்று வந்துள்ளது. குறிப்பாக கொரோனா வைரஸிற்குப் பின்னர் உலக ஒழுங்கில் ஏற்பட்டுள்ள பனிப்போர் தோற்றம் ஏவுகணை அரசியலையும் முதன்மைப்படுத்திவருகிறது. ஆக்கஸ் ஒப்பந்தம், ரஷ்யாவின் ஹைப்பர்சொனிக் ஏவுகணைப் பரிசோதனை, தாய்வான் நீரிணை பதட்டம் எனும் ஒழுங்கினிலே வடகொரியாவும் தொடர்ச்சியாய் நவீனரக ஏவுகணைப் பரிசோதனைகள் மூலம் மாறிவரும் உலக ஒழுங்கில் தனக்கான நிலையை உறுதிப்படுத்துவதில் மும்மரமாக உள்ளது. இக்கட்டுரை வடகொரியாவின் ஏவுகணைப் பரிசோதனைகளின் உலகளாவிய அரசியலை தேடுவதாக உருவாக்கப்பட்டுள்ளது.

செப்ரெம்பர் (2021) மாதத்தின் ஆரம்பத்திலிருந்து வடகொரியா ஏவுகணைச் சோதனைகளை தீவிரப்படுத்தி உள்ளது. செப்ரெம்பர் முன்னரைப் பகுதியில் வடகொரியா மேற்கொண்ட க்ரூஸ் ஏவுகணைப் பரிசோதனை தொடர்பில் கடந்த இதழ்களில் இப்பகுதியில் ஆழமாக உரையாடப்பட்டது. தொடர்ச்சியாகவும் வடகொரியா பல நவீனரக ஏவுகணைப் பரிசோதனைகளை முன்னிலைப்படுத்தியுள்ளது. அதன்படி சில வாரங்களுக்கு முன்பு ரெயிலில் இருந்து ஏவுகணைப் பரிசோதனை நடத்தப்பட்டது. இந்த நிலையில் ஒக்ரோபர்-19அன்று வடகொரியா மற்றொரு புதிய ஏவுகணைச் சோதனையை நடத்தி இருக்கிறது. இம்முறை நீர்மூழ்கிக்கப்பலில் இருந்து ஏவுகணையைச் செலுத்தி பரிசோதனை நடத்தியிருக்கிறது. இந்த ஏவுகணை நீண்ட தூரம் சென்று இலக்கைத் தாக்கி அழிக்கும் திறன் கொண்டதாகும். இந்த சோதனை இரண்டு ஆண்டுகளில் அதன் முதல் நீர்மூழ்கிக் கப்பலில் ஏவப்பட்ட பாலிஸ்டிக் ஏவுகணையாகத் தெரிகிறது. இச்சோதனையுடன் வடகொரியாவின் வெளியிடப்பட்ட தகவல்களின் அடிப்படையில் இந்த ஆண்டின் எட்டாவது ஏவுகணைப் பரிசோதனையை வடகொரியா மேற்கொண்டுள்ளது. இது செப்ரெம்பர் முதல் ஐந்தாவது ஆகும்.

இந்த ஆண்டு (2021) ஜனவரியில் அமெரிக்க ஜனாதிபதி பைடன் பதவியேற்பதற்கு சில நாட்களுக்கு முன்பு வடகொரியா இராணுவ அணிவகுப்பில் புதிய நீர்மூழ்கிக் கப்பலில் இருந்து ஏவப்படக்கூடிய ஏவுகணையை வெளியிட்டது. எனினும் இந்த ஆயுதத்தின் உண்மையான திறன்கள் தெளிவாக அடையாளப்படுத்தப்பட்டிருக்கவில்லை. ஏனெனில் அது அன்றைய காலப்பகுதியில் சோதிக்கப்பட்டிருக்கவில்லை. இதனை, உலகின் மிகசக்தி வாய்ந்த ஆயுதமாக வடகொரியா தெரிவித்திருந்தது. அண்மையில் ஆக்கஸ் ஒப்பந்தம் மற்றும் ரஷ்யாவின் ஹைப்பர்சொனிக் ஏவுகணைப் பரிசோதனைகளில் நீர்மூழ்கிக் கப்பலில் ஏவுகணைப் பரிசோதனைகள் முன்னிலைப்படுத்தப்படும் நிலையில் வடகொரியா தனது புதிய பாலிஸ்டிக் ஏவுகணையை நீர்மூழ்கிக் கப்பலிலிருந்து வெற்றிகரமாக சோதித்ததாக வடகொரிய அரச செய்தி நிறுவனமான கே.சி.என்.ஏ-இனூடாக ஒக்ரோபர்-20 அன்று தெரிவித்துள்ளது.

நீர்மூழ்கிக்கப்பலில் ஏவப்பட்ட பாலிஸ்டிக் ஏவுகணை (எஸ்.எல்.பி.எம்) 2016 இல் வடகொரியாவின் முதல் எஸ்.எல்.பி.எம் சோதனைக்கு பயன்படுத்தப்பட்ட அதே கப்பலான '8.24 யோங்குங்' (8.24 Yongung) துணைப்பகுதியில் இருந்து ஏவப்பட்டதாக கே.சி.என்.ஏ கூறியது. மேலும், "அந்த ஏவுகணையில் பல மேம்பட்ட கட்டுப்பாட்டு வழிகாட்டுதல் தொழில்நுட்பங்கள் சேர்க்கப்பட்டுள்ளதுடன், இது நாட்டின் பாதுகாப்பு தொழில்நுட்பத்தை உயர் மட்டத்தில் கொண்டு செல்வதற்கும், நமது கடற்படையின் நீருக்கடியில் செயல்படும் திறனை மேம்படுத்துவதற்கும் பெரிதும் பங்களிக்கும்" என்று குறிப்பிட்டுள்ளது.

வடகொரிய இயல்பினில் அதிகம், போருக்கு முக்கியத்துவம் அளிக்கும் தேசமாகக் காணப்படுகின்ற போதிலும் கடந்த இரண்டு மாதங்களாக அதிகரிக்கப்பட்டுள்ள தொடர்ச்சியான ஏவுகணைப் பரிசோதனையின் அரசியலை சாதாரணமாக கடந்துவிட முடியாது. கிம் ஜோங் உன்னின் தலைமையிலான வடகொரிய அரசியல் சர்வதேச அரசியல் ஒழுங்கில் தனித்துவமான நிலையைப் பெற்றுள்ளது. எனவே இவ் ஏவுகணைப் பரிசோதனையை உரிய முக்கியத்துவம் கொடுத்து ஆராய வேண்டிய தேவை காணப்படுகிறது.


> **"தீபகற்பத்தில் உள்ள உறுதியற்ற தன்மையின் அரசியல் பரிமாணத்தை நிவர்த்தி செய்ய சியோல் வாசிங்டனுடன் தொடர்ச்சியாக சமதான முன்னெடுப்புக்களை நகர்த்தி வரும் சூழலிலேயே வடகொரியா தொடர்ச்சியான ஏவுகணைப் பரிசோதனை மூலம் தன் பலத்தை வெளிப்படுத்தி சமாதான உரையாடலில் வடகொரியாவின் உயரிய இலக்கு அடையப்பட வேண்டுமென்ற சமிக்ஞையை வழுங்குவதாக அவதானிக்கப்படுகிறது."**

ஒன்று, கொரிய தீபகற்பத்தில் அமெரிக்காவின் பாதுகாப்பு சார்ந்த சந்தேகம் எழுந்துள்ளது. இந்த சூழலை தனக்கு சாதகமானதொரு களமாக மாற்றும் முயற்சியில் வடகொரியா இறங்கியுள்ளது. குறிப்பாக ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்க வெளியேற்றம் கொரிய தீபகற்கத்தின் தென்கொரிய பாதுகாப்பிலிருந்தும் அமெரிக்கா திடீர் வெளியேற்றத்தை ஏற்படுத்துமா? என்ற அச்சத்தை உருவாக்கியுள்ளது. வடகொரியாவின் தேசிய புலனாய்வு இயக்குநர் அலுவலகத்தில் தேசிய உளவுத்துறை அதிகாரியான சிட்னி சீலர் சமீபத்தில் வடக்கிற்கு எதிராக மூலோபாய மற்றும் சர்வதேச ஆய்வுகள் மையம் நடத்திய நிகழ்வில், "அமெரிக்கா மட்டுமே தீபகற்பத்தில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்கு உத்தரவாதம் அளிக்க முடியும். தென் கொரியா உட்பட வேறு எந்த சக்தியாலும் கொரிய தீபகற்பத்தை போரிலிருந்து பாதுகாக்க முடியாது." எனத்தெரிவித்துள்ளார். இந்த மனநிலைக்கு தென் கொரியாவில் நிரந்தர அமெரிக்க இராணுவ இருப்பு தேவை மற்றும் தன்னை தற்காத்துக் கொள்ளும் தெற்கின் திறனையும் கேள்விக்குட்படுத்துகின்றார். இக்கருத்து நிலை கொரிய தீபகற்பத்திலிருந்து அமெரிக்க இராணுவம் வெளியேறக்கூடிய எதிர்பார்க்கையாகவே மதிப்பிடப்படுகிறது. இந்தப் பயம் சார்ந்த கதை அரசுசாரா பிரச்சாரங்களிலும் பிரதிபலிக்கிறது. செப்ரெம்பர் மாதம், புதிய குழு ஒன்றான One Korea Network மற்றும் Korean Conservative Political Action Conference (KCPAC) உடன் இணைந்து அமெரிக்காவின் வோல் ஸ்ட்ரீட் ஜர்னலில் (Wall Street Journal) ஒரு முழுப் பக்க விளம்பரத்தைப் பிரசுரித்தது. அதில், "கொரியப் போருக்கு முன்மொழியப்பட்டபடி முன்மொழியப்பட்டுள்ள அமெரிக்க காங்கிரஸ் மசோதாவில், சாத்தியமான அமெரிக்க-தென்கொரியா கூட்டணியைக் குறைத்து, போரின் சாத்தியத்தை அதிகரிக்கிறது." எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் KCPAC-இன் ஒரு அறிக்கையில், ஆப்கானிஸ்தான் மற்றும் வியட்நாமிலிருந்து அமெரிக்கா வெளியேறுவதை 'பொறுப்பற்றது' என்று விவரிக்கிறது. இப்பயத்தை வடகொரியா தமக்கு சாதகமாக பயன்படுத்திக்கொள்ளும் மூலோபய நகர்வாக வடகொரியாவின் தொடர் ஏவுகணைப் பரிசோதனைகள் அவதானிக்கப்படுகிறது.

இரண்டு, அமெரிக்க-தென்கொரியாவின் சமாதான முயற்சியில் வடகொரியா தனது உயரிய விருப்பை அடைவதற்கான முன் நிபந்தனைகளை உறுதிப்படுத்துவதற்கான உத்தியாக தொடர்ச்சியான ஏவுகணைப் பரிசோதனைகள் நிபுணர்களால் அவதானிக்கப்படுகிறது. வடகொரியா பரப்பில் ஏவுகணைப் பரிசோதனை செய்திபிடல்கள் பிரதான நிலை பெறும் மறுதளத்தில் தென்கொரியா-அமெரிக்க கூட்டில் வடகொரியா உடனான சமாதான களத்தினை திறப்பதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. 1950-1953 கொரியப் போரை முறையாக முடிவுக்கு கொண்டுவருவதற்கான ஜனாதிபதி மூன் ஜே-இன் முன்மொழிவைப் பற்றி விவாதிக்க தென் கொரியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சுஹ் ஹூன் கடந்த வாரம் வாசிங்டனில் இருந்தார். இந்த வாரம், வடகொரியா கொள்கைக்கான அமெரிக்க சிறப்புப் பிரதிநிதி சங் கிம் சியோலில் தனது தென்கொரிய மற்றும் ஜப்பானிய சகாக்களுடனான முத்தரப்புச் சந்திப்பிற்கு முன், அவரது தென்கொரிய சகாவான நோ க்யு-டுக்குடன் இதர பிரச்சினைகளை ஆராய இருந்தார். தீபகற்பத்தில் உள்ள உறுதியற்ற தன்மையின் அரசியல் பரிமாணத்தை நிவர்த்தி செய்ய சியோல் வாசிங்டனுடன் தொடர்ச்சியாக சமதான முன்னெடுப்புக்களை நகர்த்தி வரும் சூழலிலேயே வடகொரியா தொடர்ச்சியான ஏவுகணைப் பரிசோதனை மூலம் தன் பலத்தை வெளிப்படுத்தி சமாதான உரையாடலில் வடகொரியாவின் உயரிய இலக்கு அடையப்பட வேண்டுமென்ற சமிக்ஞையை வழங்குவதாக அவதானிக்கப்படுகிறது. தென்கொரியாவுடனான உறவை மேம்படுத்துவதில் வடகொரியாவின் உள்நோக்கம் இறுதியில் அதை ஆக்கிரமிப்பதாக வாதிடுவது கொரியாக்களுக்கு இடையே அமைதியான சகவாழ்வுக்கான சாத்தியத்தை புறக்கணிப்பதாக நிபுணர்களிடையே முரணான வாதங்கள் காணப்பட்டாலும் வடகொரியாவின் செயற்பாடுகள் ஆக்கிரமிப்பே சமாதான உரையாடலிலும் முதன்மைபெற வேண்டும் என்ற அடிப்படையிலேயே அமைகிறது.

மூன்று, வடகொரியாவின் நடவடிக்கை பைடன் நிர்வாகத்திற்கான எச்சரிக்கையாகவும் அவதானிக்கப்படுகிறது. புதிய ஏவுகணைகளை வெளியிட்டது வடகொரியாவின் வளர்ந்து வரும் இராணுவ வலிமையினை பைடன் நிர்வாகத்திற்கு ஒரு செய்தியாக வழங்குவதாக தோன்றுகின்றது. பைடன் ஜனாதிபதியாக பதவியேற்ற காலப்பகுதியிலும் வடகொரியா ஏவுகணைப் பரிசோதனையை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. மேலும் பைடன் பதவியேற்று, பத்து மாத காலப்பகுதியில் எட்டு வேறுபட்ட ஏவுகணைப் பரிசோதனை என்பது பைடன் நிர்வாகத்துக்குத் தனது பலத்தை வெளிப்படுத்தும் செயற்பாடாகவே அவதானிக்கப்படுகிறது. குறிப்பாக அண்மைய காலப்பகுதியில் வடகொரிய செய்திப்படங்களில் முதன்மைப்படுத்தப்படும் கிம் ஜாங் உன்னின் சக்திவாய்ந்த சகோதரி கிம் யோ ஜாங் இவ்வாறான கடினமான தெரிவுகளை மேற்கொள்வதாகவும் குறிப்பிடப்படுகிறது. சியோலில் உள்ள சில நிபுணர்களும் ஜனவரி மாதம் எட்டாவது கட்சி மாநாட்டின் போது வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் கூறியதன் அடிப்படையில் வடக்கில் ஏவுகணைகளைச் சோதனை செய்வதாகக் கூறியுள்ளனர். அதன் வெளிப்பாடகவே இது காணப்படுவதாக சுட்டிக் காட்டுகின்றனர்.

நான்கு, புதிய உலக ஒழுங்கில் சீனாவிற்கு எதிராகக் கட்டமைக்கப்படும் அமெரிக்கத் தலைமையிலான குவாட் அணியினருக்குப் பதிலாக சீனாவின் இராணுவ பாதுகாப்பு அணியின் அங்கமாக வடகொரியா அடையாளப்படுத்தப்படுவதாகவும் அவதானிக்கப்படுகிறது. சீனா அதிகம் தனது மென்வலுவினையே பொதுவெளியில் அடையாளப்படுத்தி வருகிறது. எனினும் அமெரிக்கா தலைமையிலான அணி இராணுவ பாதுகாப்பு உத்திகளை பலப்படுத்துவதனூடாக சீனாவிற்கெதிராக வன்வலு அணியைக் கட்டமைத்து வருகிறது. ஆக்கஸ் பாதுகாப்பு ஒப்பந்தம் அவ்வாறானதொரு நடவடிக்கையேயாகும். அதற்குப் பதிலீடாக பெய்ஜிங் குளிர்கால ஒலிம்பிக்கை அடுத்த திருப்புமுனையாக மாற்றுவதன் மூலம் அணு ஆயுதமயமாக்கல் செயல்முறையில் சீனா தனது விரிவாக்கத்தை விரிவுபடுத்த விரும்புகிறதாகவும் அதற்கு முன்நகர்வாக வடகொரியா ஊடாக தனது வன்வலுவை அடையாளப்படுத்தும் உத்தியை மேற்கொள்வதாக நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.



வடகொரியா, முறையான இராணுவ அபிலாசைகளைக் கொண்ட நாடாகும். அதன் இராணுவ உத்திகளை எளிதில் சாதாரணமாகக் கடந்து செல்வது சர்வதேச அரசியல் மாற்றங்களை புரிந்து கொள்வதில் கடினத் தன்மையை ஏற்படுத்தக்கூடியதாகும். அண்மைய தொடர்ச்சியான ஏவுகணைப் பரிசோதனைகள் வடகொரியாவின் தேசிய நலன் சார்ந்த மூலோபாய நடவடிக்கையாக அமைவதுடன் சர்வதேசரீதியான அரசியலிலும் அமெரிக்க-சீன அரசியல் போட்டியின் களத்தைப் பிரதிபலிக்கும் உத்தியாகவுமே அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

"அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்"

கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 2564
www.theempunal.lk
news@theempunal.com

தீம்புனல் THEEMPUNAL

# வடக்கு மக்களின் தேவைகளை இவராவது நிவர்த்திப்பாரா?

வடமாகாணத்தின் உடனடித் தேவைகளை நிறைவேற்றத் தயார், அத் தேவைகளை எழுத்து மூலமாக உடனடியாகத் தாருங்கள் என்று புதிதாக நியமிக்கப்பட்ட வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிடம் கோரிக்கையினை முன்வைத்துள்ளார். பொதுவாக தமிழர் தாயகப் பகுதிகளில் நியமிக்கப்படும் மேன்நிலை அதிகாரிகள் இவ்வாறு தமிழர் பிரதிநிதிகளைச் சந்தித்து சம்பிரதாய பூர்வமான வார்த்தைகளைப் பேசுவது வழமையான ஒன்றுதான். ஆனாலும் பொறுப்புவாய்ந்தவர்கள் குறித்த பிரதேசத்தின் பிரச்சினைகளை இனம் கண்டு அதற்கான தீர்வுகளை முன்னெடுக்க வேண்டிய பொறுப்புக்குரியவர்கள் என்பது மறுப்பதற்குரியதல்ல. இருந்தாலும் வடக்கு மாகாணத்தில் ஆளுநராக நியமனம் பெற்று வந்த அனைவரும் புதிதில் வடக்கு மாகாணப்பகுதியில் தீவிரம் பெற்றுவரும் பிரச்சினைகளுக்கான தீர்வினை உடனடியாகப் பெற்றுத் தரமுடியும் என்று சினிமாப் படக் கதாநாயகர்கள் போல அறிக்கை விடுவதும் கருத்துக்களை வெளிவிடுவதும் சர்வசாதாரணமான விடயம்தான். ஆனால் தொடர்ந்து வந்த காலங்களில் அவர்களின் செயற்பாடுகள் என்னவாக இருந்தன?, இறுதியில் அவர்கள் வடக்கு மாகாணத்தில் தீர்த்துவைத்த பிரச்சினைகள் என்ன? என்பதனை வந்துபோன ஆளுநர்களின் அனுபவத்திலிருந்து அறிந்து கொள்ள முடியும்.

இலங்கையைப் பொறுத்தவரையில் அனைத்து அதிகாரமும் பெரும்பான்மை இனத் தலைவர்களிடமே இருந்து வருகின்றது. அது வடக்காக இருந்தால் என்ன? தெற்காக இருந்தால் என்ன?. இத்தகைய நிலையில் அவர்களின் விருப்பு எதுவோ அதுவேதான் அனைத்துப் பகுதியிலும் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. வடக்கு மாகாணத்துக்கென்று ஒரு தமிழர்களின் அரசு இருந்த காலத்திலும் கூட சுதந்திரமாக இயங்கக் கூடிய சக்தியை, ஒத்துழைப்பினை கொழும்பு மைய அரசியல் அதிகாரம் வழங்கியிருக்கவில்லை. இந்நிலையில் புதிதாய் வந்த ஆளுநர் எவ்வாறு சுதந்திரமாக வடக்கின் பிரச்சினைகளை உடனடியாகத் தீர்ப்பதற்கு தன்னால் முடியும் என்று நம்புகின்றார்? என்று தெரியவில்லை. எந்தவொரு பிரச்சினையையும் அவர் கொழும்பு மைய அரசியல் அதிகாரத்திடமே கொண்டு சேர்க்க வேண்டும். அவ் அதிகார மையம் தலையசைத்தால் மட்டுமே வடக்கில் எந்தவொரு நல்ல காரியங்களையும் செய்ய முடியும் என்பதனைத் தெரியாமல் ஆளுநர் வாக்குக் கொடுத்திருக்கின்றாரா? அல்லது வந்தவாக்கில் அதைச் செய்கிறேன், இதைச் செய்கிறேன் என்று கதை அளந்து விட்டு செய்யாது போனாலும் தமிழ் அரசியல்வாதிகள் அல்லது தமிழ் மக்கள் எதனையும் கேட்கமாட்டார்கள் என்று நம்பிக் கொள்கிறாரா? என்பதும் தெரியவில்லை.

வடக்கைப் பொறுத்தவரை எண்ணிலடங்காத பிரச்சினைகளை மக்கள் நாளாந்தம் எதிர் நோக்கி வருகின்றார்கள். அரசியல் ரீதியிலான பிரச்சினையிலிருந்து, வாழ்வாதாரப்பிரச்சினை, மீளக் குடியேற முடியாத பிரச்சினை, சமூகச் சீரழிவு எனப் பல்வேறு பிரச்சினைகளைச் சொல்லிக் கொண்டு போகலாம். அதில் அரசியல் ரீதியான பிரச்சினைகளை விட்டு விடலாம் அது ஆளுநரின் அதிகாரத்துக்கு உட்பட்டதில்லை. ஆனால் வடக்கில் நிகழ்ந்தேறிவரும் வன்செயல்கள் போதைப்பொருள் விற்பனையும் பாவனையும் எனத் தொடங்கி திருட்டு தொடர்பான பிரச்சினைகள் என நீண்டுகொண்டிருக்கும் சமூகப் பிரச்சினைகளுக்கு இதுவரை யாராலும் முற்றுப்புள்ளி வைக்க முடியவில்லை. வடக்கு மாகாணத்தில் பொலிஸ் தரப்பினர் தீவிரமாக போதை ஒழிப்பில் செயற்பட்டு வருவதாகச் சொல்லி வருகின்றபோதும் அதன் விற்பனை முகவர்கள் தொடர்ந்து செயற்பட்டு வருகின்றமை வெளிப்படையானவை. மக்களைப் பொறுத்தவரையில் அத்தகைய விற்பனை முகவர்களுக்கும் பொலிஸ்தரப்பினர்களுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்றே நம்புகின்றனர். இவ்வாறு சட்டத்தினைக் காப்பாற்ற வேண்டியவர்களின் இலாப நோக்க எண்ணமே தொடர்ந்தும் இப்பகுதிகளில் கீழ்நிலைச் செயல்கள் நிலைத்திருப்பதற்குக் காரணம் என்பதும் மக்களின் நீடித்த நம்பிக்கையாக இருக்கின்றது. இதற்கு முன் வந்த ஆளுநர்களாலும் இதனைக் கட்டுப்படுத்த முடியவில்லை. புதிய ஆளுநராவது இதில் கவனம் கொள்வாரா? அவற்றினை முற்றாக ஒழிப்பதற்கு முயற்சிப்பாரா? என்பது கேள்வியாக மாறிப்போயுள்ளது. ஒருவகையில் பார்த்தால் இவ்வாறு வன்செயல்கள், கீழ்நிலைச் செயல்கள் வடக்குப் பகுதியில் நிகழ்வது அரசுக்கு பல்வேறு இலாபங்கள் இருக்கின்றது. இத்தகைய இலாபங்களின் நிமிர்த்தமே இத்தகைய செயல்களைக் கட்டுப்படுத்துவதில் தாமதம் காட்டி வருகின்றது என்பது பொதுவாக தமிழர் பரப்பில் உலாவிவரும் வாய்வழிச் செய்தி. அப்படியொரு சூழல் இருக்கும் என்றால் எத்தகைய அதிகாரத்தில் உள்ளவர்களாலும் இவ்வாறான செயல்களைக் கட்டுப்படுத்த முடியாது. இது ஆளுநருக்கும் தீர்க்கமாகத் தெரிந்திருக்கும். ஆனால் பதவியைப் பொறுப்பெடுத்ததன் பிரகாரம் வடக்கு மக்களின் மனங்களைக் குளிரச் செய்யவேண்டும் என்ற எண்ணத்தில் இவ்வாறு அவர் கேட்டிருக்கலாம்.

அதேவேளை வடக்கு மாகாணத்தின் பொறுப்புமிகு அதிகாரியாக பொறுப்பெடுத்துக் கொண்ட ஒருவருக்கு அப்பகுதி மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் என்ன என்பது தெரியாமலா இருக்கும்? அவர் தனது அதிகாரத்துக்குட்பட்ட வகையில் இரகசியமாக எல்லாவற்றினையும் நிறைவேற்றி முடித்திருக்கலாம். ஆனால் தேவைகளை யாராவது எழுத்து மூலமாகத் தந்தால்தான் அதனை நிறைவேற்றுவேன் என்று அடம்பிடிப்பது எதன்பாற்பட்டது? தான் தமிழர்களின் பிரதிநிதிகளின் ஒத்துழைப்புடனும் அவர்களை அனுசரித்தும் தனது ஆளுநர் அதிகாரத்தினை செயற்படுத்தப்போகின்றேன் என்று சொல்வதற்கான கருவியாகவே இதனைப் பார்க்க முடிகின்றது.

எது எப்படியோ, தமிழர்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு தன்னுடைய அதிகாரத்திற்குட்பட்ட வகையில் என்றாலும் முயற்சி செய்து நல்லவற்றினைச் செய்தால் வடக்கு மக்கள் ஆளுநருக்கு நன்றியுடையவராக இருப்பார்கள். கொஞ்சம் பொறுத்திருந்து பார்க்கலாம். ■

# வெகுஜன போராட்டமாக மாறும் அதிபர் – ஆசிரியர் போராட்டம்

தந்திரன்

நூறு நாட்கள் கடந்தும் அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டிற்கான நீதி கோரிய தொழிற்சங்கப் போராட்டம் தொடர்ந்தவண்ணம் உள்ளது. ஆனாலும் அவர்களுக்குரிய தீர்வு கிடைத்தபாடில்லை.

ஆனாலும் தொழிற்சங்கப் போராட்டங்கள் தேவைக்குத் தகுந்தாற் போல் உருமாறி தீர்வு எட்டும் வரை தொடரும் என்பது மாத்திரம் உறுதி. அத்துணை வைராக்கியத்துடன் அதிபர், ஆசிரியர்கள் உள்ளார்கள்.

அதேவேளை போராட்டத்தினை, திசை திருப்பும் வகையில் அரச இயந்திரம் 200 இற்கும் குறைவான மாணவர்கள் எண்ணிக்கையைக் கொண்ட ஆரம்பப் பிரிவுகளைக் கொண்ட பாடசாலைகளைக் கடந்த 21 ஆம் திகதி முதல் ஆரம்பித்திருந்தது.

இதன்பொழுது 2 இலட்சத்துக்கும் அதிகமான ஆசிரியர்கள் உள்ள போதிலும் அவர்களில் மிகச் சொற்பமான அதிபர், ஆசிரியர்கள் மாத்திரமே பாடசாலைகளுக்கு சமூகமளித்திருந்தனர். அதிலும் குறிப்பாக அரசு சார்பான தொழிற்சங்கங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் புலனாய்வாளர்கள், இராணுவத்தினர், பொலிசார் என்போரின் அச்சுறுத்தலுக்கு உள்ளானவர்கள் போன்றோரே பாடசாலைக்குச் சமூகமளித்திருந்தனர் எனக் கூறப்படுகிறது.

இந்த நிலையிலேதான் அதிபர், ஆசிரியர்களின் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு மாணவர்களின் நலன் சார்ந்து சிந்தித்து தனது போராட்ட வடிவத்தினை மாற்றியமைத்துள்ளது. எதிர்வரும் 25 ஆம் திகதி முதல், பாடசாலைக்கு அதிபர், ஆசிரியர்கள் சமூகமளிப்பார்கள் என்றும் தீர்வு கிட்டும் வரை போராட்டத்தினை இன்னுமொரு பரிமாணத்திற்கு முன்னகர்த்திச் செல்லவும் தீர்மானித்திருக்கிறார்கள். இது ஒரு வரவேற்கத்தக்க செயற்பாடாகவே காணப்படுகிறது. இதனால் பெற்றோர்களுடன் சுமூகமான உறவினைக் கட்டியெழுப்பிப் போராட்டத்தினை இன்னும் வீரியத்துடன் நடாத்திச் செல்ல முடியும்.

அதிபர், ஆசிரியர்களுக்கான சம்பள முரண்பாடு எவ்வளவு தூரம் மாணவர்களின் கல்வியில் தாக்கத்தினை செலுத்தும் என்பது யாவரும் அறிந்த ஒன்று. இதனால் குறித்த போராட்டத்தினை வெகுஜன தளத்திற்குக் கொண்டு செல்வதற்கான முன் முஸ்தீபுகளில் அதிபர் - ஆசிரியர்களின் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு ஈடுபட்டுவருவதாக அறியக்கிடைக்கிறது.

இந்த அடிப்படையில் பெருமளவான பெற்றோர்கள் ஆசிரியர்களின் நியாயமான கோரிக்கைகளை விளங்கியுள்ளதோடு அவர்களுக்காக தாங்களும் போராடத் தயாராக உள்ளதனையும் தெரிவித்திருப்பதானது பெற்றோர்கள் மாணவர்களின் கல்வியில் கொண்ட அக்கறையை தெளிவாகக் காட்டுகிறது.

அதேவேளை வட மாகாணத்தினைப் பொறுத்து அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான தொழிற்சங்கமும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி போன்ற அரசியற்கட்சிகளும் இந்தப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்திருப்பதானது கூடுதல் பலமாகவே தென்படுகிறது. அதாவது வெகுஜன போராட்டத்திற்கான ஆரம்பப் புள்ளிக்கான விதைகள் ஊன்றப்படுவதனை அவதானிக்க முடிகிறது.

இங்கு இன்னோர் முக்கியமான விடயம் இதுவரை விடுமுறை நாட்களிலேயே அதிபர் - ஆசிரியர்கள் போராட்டங்களில் ஈடுபட்டார்கள். அதனால் இதனை எதிர்கொண்ட அரசாங்கத்திற்கு அது ஒரு சவாலாகத் தோன்றவில்லை. ஆனால் பாடசாலைகள் திறக்கப்பட்டு கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் அத்தகைய போராட்டங்கள் தொடருமாயின் அதன் பாதக விளைவுக்கான பொறுப்பை அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

சகல தரங்களையும் சேர்ந்த மாணவர்களுக்குமான கற்றல் செயற்பாடுகள் மீள ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் பணிப்புறக்கணிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என இலங்கை ஆசிரிய சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித் துள்ளமையானது போராட்டம் இன்னும் வீரியத்துடன் தனது வடிவத்தினை மாற்றி நடைபெறப்போகின்றது என்பதனை கோடிட்டுக் காட்டுகிறது.



எனவே வேறு அதிபர், ஆசிரியர் தொழிற்சங்கங்களில் உள்ளவர்களும், தொழிற்சங்கங்களில் இல்லாதவர்களும் அதிபர், ஆசிரியர் என்ற வகுதிக்குள் உள்வாங்கப்பட்டு அனைத்து ஜனநாயக உரிமைகளும் கொண்டவர்களே. இதனால் அனைவரும் ஒன்றுபட்டு உழைத்துத் தீர்வினை மிக விரைவில் எட்டி உருக்குலைந்து போன கல்வியை மீட்டெடுக்கப் பாடுபட வேண்டும் என இப்பத்தி மாணவர்களின் கல்வியின்பால் கொண்ட ஆதங்கத்தினை வெளிப்படுத்துகிறது. ■

# ஈஸ்டர் தாக்குதலின் சூத்திரதாரி யார்..?

## சர்வதேச சமூகத்தை நாடும் பேராயர்!

அவதானி

இலங்கையில் எது நடந்தாலும், இறுதியில் சர்வதேச சமூகத்திடம் பாதிக்கப்பட்டவர்களின் தரப்பு, முறையிட்டுவரும் காட்சிகள்தான் தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்றன.

வன்னி பெருநிலப்பரப்பில் தமிழ்மக்கள் கொன்றழிக்கப்பட்டபோதும் இந்த முறையீடு நடந்தது. இன்றுவரை இந்தக்குரல் ஓயவில்லை.

வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் தரப்பில் முன்வைக்கப்பட்ட கோரிக்கையையும் சர்வதேச சமூகம் கவனத்தில் எடுத்தல் வேண்டும் எனவும் தொடர்ச்சியாக சொல்லப்பட்டு வருகிறது.

தென்னிலங்கையில் முஸ்லிம்கள் தாக்கப்பட்ட வேளையிலும் இதுபோன்ற குரல்கள் உலக அரங்கில் இஸ்லாமிய நாடுகளை நோக்கி எழுந்தன.

இலங்கை அரசிடம் சொல்லிச் சொல்லிக் களைத்துப் போனவராக கொழும்பு கத்தோலிக்க பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, "கடந்த 2019 ஆம் ஆண்டு நடந்த ஈஸ்டர் தாக்குதலின் பின்னணியிலிருந்து செயற்பட்டவர்களை கண்டறிவதற்கு சர்வதேச சமூகம் உதவவேண்டும்" என்று தற்போது கோரிக்கை விடுத்துள்ளார்.

" ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலில் ஈடுபட்டவர்களைக் கண்டறிந்து உரிய தண்டனை வழங்கப்படும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி பெற்றுத்தரப்படும் எனச்சொல்லி, பல வாக்குறுதிகளை வழங்கியே இன்றைய ஜனாதிபதி, தேர்தலில் வெற்றி பெற்றதாகவும், அவரை ஆதரித்த மொட்டு அணியினரே அரசுப்பதவிக்கு வந்திருப்பதாகவும், ஆனால் - ஜனாதிபதியோ, இன்றைய அரசோ குற்றவாளிகளைக் கண்டறிந்து தண்டனை வழங்காமல் விசாரணை என்ற பெயரில் காலத்தை இழுத்தடித்துக்கொண்டிருப்பதனால், சர்வதேச சமூகத்தை நாடவேண்டியிருக்கிறது" என்ற தொனியே பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகையின் ஆதங்கத்தில் எதிரொலிக்கிறது.



கடந்த, மைத்திரி - ரணில் நல்லாட்சி ( ? ) காலத்தில் 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி இந்தத் தாக்குதல் சம்பவம் நடந்தது. தலைநகரம் உட்பட மூன்று நகரங்களில் மூன்று கத்தோலிக்கத் தேவாலயங்களிலும், தலைநகரில் மூன்று - ஐந்து நட்சத்திர விடுதிகளிலும் இந்தத் தொடர் தற்கொலை குண்டுத்தாக்குதல்கள் நடந்தன. இதில் வெளிநாட்டவர்கள் உட்பட 250 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். ஐநூறுக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக, சந்தேகத்தின்பேரில் பலர் கைதுசெய்யப்பட்டனர். விசாரணை இரண்டு ஆண்டுகளையும் கடந்து தொடருகின்றது.

இடையில் நாடாளுமன்றத்தின் தெரிவுக்குழுவும் தொடர் விசாரணையை நடத்தியது. ஆனால், இன்னமும் குற்றவாளிகள் யார்..? என்பது கண்டறியப்படவில்லை ! எவருக்கும் உரிய தண்டனை வழங்கப்படவில்லை..! பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியும் கிடைக்கவில்லை.

குறிப்பிட்ட 2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் நடப்பதற்கு முன்பே, புலனாய்வுப்பிரிவுக்குத் தகவல் கிடைத்திருந்தும், எதனையும் செய்யாமல் கையாலாகாத்தனமாக இருந்தவர்களையும் தாக்குதல்களின் சூத்திரதாரிகளையும் விசாரிப்பதற்காக நாடாளுமன்றத்தினால் ஒரு விசாரணை தெரிவுக்குழுவும் முன்னைய அரசில் நியமிக்கப்பட்டது.

அதிலும் பெரிய இழுபறிகள் நிகழ்ந்தன.தேசிய புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி சிசிர மெண்டிஸ் அந்த விசாரணைக்குழுவின் முன்னால் தோன்றிச் சாட்சியமளித்தார். அதனை அவதானித்தார் சம்பவங்கள் நடந்தவேளையில் நாட்டிலிருக்காத தேசத்தின் அதிபர் மைத்திரியார். உடனே என்ன செய்தார்?

" நாடாளுமன்றத் தெரிவுக்குழு முன்னிலையில் சாட்சியமளித்தவர்கள், பாதுகாப்பு துறையிலிருந்து வெளியேறியவர்கள்" என்று ஒரு பெரிய குண்டைப்போட்டார். அது தேவாலயங்களில் பாவிக்கப்பட்ட குண்டுகளை விட மிகவும் வலிமையானது.

அந்தப் பொன்னான வாக்கைக்கேட்டதும் சிசிர மெண்டிஸ் தனது ராஜினாமாக் கடிதத்தை, பாதுகாப்பு செயலாளர் ஷாந்த கோட்டேகொடவிடம் கையளித்துவிட்டு, தனக்கு சுகமில்லை எனச்சொல்லி ஓய்வுக்குச்சென்றார்.

" நாடாளுமன்றத் தெரிவுக்குழு முன்னிலையில் புலனாய்வு அதிகாரிகள் வரவழைக்கப்பட்டு, விசாரணைக்கு உட்படுத்துவதை, தான் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை" என்றும் மற்றும் ஒரு அதிரடிக்குண்டைப்போட்டார் மைத்திரியார்.

இவ்வாறெல்லாம் அவர் செய்யப்போகிறார் என்பதைத் தெரிந்துகொண்டே தெரிவுக்குழு பல வாரங்களாக விசாரணை செய்துகொண்டிருந்தது. ஊடகங்களும் அந்த விசாரணை வாக்குமூலங்களுக்காக பக்கங்களை நிரப்பிக்கொண்டிருந்தன. நாமும் படித்துத்தொலைத்(ந்)து கொண்டிருந்தோம்.

அங்கு சாட்சியமளித்த முஸ்லிம் அமைப்புகளின் பிரதிநிதிகள் பேசிய சுத்தமான சிங்கள மொழியைக் கேட்டு வியந்துபோன - எதிர்காலத்தின் பாதுகாப்பு அமைச்சர் பதவிக் கனவில் மிதந்த ஃபீல்ட் மார்ஷல் சரத்பொன்சேக்கா, " தம்மால் கூட அவ்வாறு அழகாக சிங்களம் பேசமுடியவில்லையே" என்று தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.

தேசிய பாதுகாப்புச் சபையை உரிய முறையில் ( முன்னாள் ) ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூட்டவில்லை என, பாதுகாப்பு முன்னாள் செயலாளர் ஹேமசிறி பெர்ணான்டோ நாடாளுமன்றத் தெரிவுக்குழு முன்னிலையில் சாட்சியமளித்திருந்தார்.

> "தன்னைப் பதவி விலகுமாறும், அவ்வாறு பதவி விலகினால் தனக்கு இராஜ தந்திரப் பதவியொன்றை வழங்குவதாகவும்" ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனக்கு அழுத்தங்களைப் பிரயோகித்திருந்ததாக அன்றைய பொலிஸ் மாஅதிபர் பூஜித்த ஜயசுந்தர சாட்சியமளித்திருந்தார்.

" தன்னைப் பதவி விலகுமாறும், அவ்வாறு பதவி விலகினால் தனக்கு இராஜதந்திர பதவியொன்றை வழங்குவதாகவும்" ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனக்கு அழுத்தங்களைப் பிரயோகித்திருந்ததாக அன்றைய பொலிஸ் மாஅதிபர் பூஜித்த ஜயசுந்தர சாட்சியமளித்திருந்தார்.

இறுதியில் என்ன நடந்தது...? அந்த விசாரணைக்குழுவின் அறிக்கையை மைத்திரியார் கிடப்பில் போட்டார்.

அன்றைய அரசு, மைத்திரி அணி - ரணில் அணி என்று இரண்டாகப் பிளவுபட்டு நின்றபோது, " ஊர் இரண்டுபட்டால், கூத்தாடிக்குக் கொண்டாட்டம்" என்பதுபோன்று அந்த உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலை வைத்தே மீள் புனர்நிர்மாணம் செய்துகொண்டது ராஜபக்ஷக்களின் பரம்பரை.

" தாம் பதவிக்கு வந்தால் உரிய விசாரணை நடத்தப்படும், நீடித்த ஈழப்போரை முடிவுக்குக் கொண்டுவந்தது தாங்களே, எனவே எமக்கு வாக்களியுங்கள், எமது ஆட்சியில் அனைவருக்கும் நீதி கிடைக்கும்" என்றார்கள், பெரும்பான்மை சிங்கள மக்கள் ஆதரித்தனர். இவர்களில் கத்தோலிக்கரும் அடக்கம்.

கொழும்பு பேராயர் மல்க்கம் ரஞ்சித் ஆண்டகையும் இவர்களில் நம்பிக்கை வைத்தார்.

ஆனால், அவரது நம்பிக்கையும் கானல் நீரானது. அதனால், இனி இதில் சர்வதேச சமூகம்தான் தலையிடவேண்டும் என்று குரல் எழுப்புகிறார்.

2009 முள்ளிவாய்க்கால் படுகொலைகள் நடந்து எத்தனை வருடங்களாகிவிட்டன..? அதற்கு சர்வதேச சமூகம் என்ன செய்தது..?

இந்த இலட்சணத்தில் அதன்பின்னர் பத்து ஆண்டுகள் கழித்து 2019 இல் நடந்த ஈஸ்டர் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களுக்காக இந்த, சர்வதேச சமூகம் ஏதும் உருப்படியான நீதியை பெற்றுத்தரும் என்று ஆண்டகை நம்புகிறாரா..?

பாதிக்கப்பட்டவர்கள் இனி மாற்றுவழியை கண்டறியவேண்டும். ■



# வாழ்வின் வடுக்களாய் வன்முறைகள்...



செ. எழிலன்
நான்காம் வருடம்
ஊடகக் கற்கைகள் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

மனிதனானவன் தனது அதிகாரத்தையும் ஆளுமையையும் பயன்படுத்தி தன்னைச் சார்ந்த மக்களையும் தன்னைச் சாராத மக்களையும் தனது ஆளுமைக்குள் உட்படுத்துகின்ற போது அதனையே நாம் வன்முறைகள் என்று குறிப்பிடுகின்றோம். வன்முறை என்றவுடன் வெறும் உடல் தொடர்பான புறத்தாக்கம் என்று மட்டும் நினைக்காமல் அகத்தைப் பாதிக்கக் கூடிய நீண்ட கால நிரந்தர மனக் காயங்களைத் தரக் கூடிய உளவியல் ரீதியான தாக்கங்களையும் ஏற்படுத்துகிறது.

வன்முறைகள் உடலியல் ரீதியானவை, உளவியல் ரீதியானவை என்று வகைப்படுத்தப்படும். மனைவியை அடிப்பது, மாமியார் கொடுமை, பலாத்காரம், கட்டாய உடலுறவுக்கு வற்புறுத்தல், பாலியல் துன்புறுத்தல்கள், கற்பழிப்புப் போன்றவை அடிப்படையான வன்முறைகளாகக் காணப்படுகின்றன. அத்தகைய பாதிப்புக்களின் சுவடுகள் உடல் வடுக்களையும், மாறுதல்களையும் உருவாக்கக் கூடியன. அத்தோடு மனத் தாக்கத்தையும் உருவாக்கக் கூடியன.

பொதுவாக பாலின ரீதியான வன்முறை என்பது ஆண் அல்லது பெண் என ஓர் மனிதனின் பாலினத்தை அடிப்படையாகக் கொண்டு அவர்களுக்கு எதிராக இடம்பெறும் அனைத்து வன்முறைகளையும் உள்ளடக்கியதாகவே அமைகின்றது. ஒரு தனி மனிதனின் வாழ்க்கை வட்டத்தில் அவனது ஆரம்பம் முதல் இறுதி வரையில் ஏதோ ஒரு வகையில் பாலின வன்முறைக்கு முகங்கொடுத்த கசப்பான அனுபவத்தை சுமந்த வண்ணமே பயணிக்க வேண்டி இருப்பது இரவுகளும் பகலாகிப் போன இன்றைய நவீன வாழ்க்கை முறையின் இருண்ட பகுதி என்று கூறுவது பொருத்தமானதாகவே அமையும்.

பால் நிலை வன்முறை பற்றிய முதல் உத்தியோகபூர்வ வரைவிலக்கணம் 1993 ஆம் ஆண்டின் பெண்களுக்கெதிரான வன்முறைகளை ஒழிப்பதற்கான ஐக்கிய நாடுகள் சபையின் உறுதிமொழியில் வெளியிடப்பட்டது. அதன்படி பாலின ரீதியான வன்முறை என்பது, “பாலின ரீதியான வன்முறைக்கு உள்ளாக்கக் கூடிய அச்சுறுத்தல்கள், வற்புறுத்தல்கள், தன் சுய விருப்பத்துடன் செயல்படக் கூடிய சுதந்திரத்தை இழக்க வைக்கும் எந்தவொரு உடலியல், பாலியல் மற்றும் உளவியல் ரீதியான தீங்கும் (குறிப்பாக பெண்களுக்கெதிரான) பாலின வன்முறையாகக் கருதப்படும். அவை பொது அல்லது தனியார் இடங்களில் இடம்பெற்றாலும் சரியே.

பால் அடிப்படையிலான வன்முறைகள் எந் நேரத்திலும் எவருக்கும் ஏற்படக்கூடும். எனினும் ஒருசில பெண்கள் மற்றும் சிறுமியருக்கு இவ்வாறான பாதிப்புகள் அதிக அளவில் இடம்பெறும் சாத்தியம் உள்ளது. குறிப்பாக சிறுமியர் மற்றும் வயதான பெண்கள், ஓரினச் சேர்க்கையில் ஈடுபடும் பெண்கள், திருநங்கைகள், அகதிப் பெண்கள், சுதேசியப் பெண்கள் அல்லது எச்.ஐ.வி. வைரஸ் தாக்கத்துடன் வசிக்கும் பெண்கள் மற்றும் மனிதாபிமான சிக்கல்களுடன் வசிக்கும் பெண்கள் ஆகியோர் பெண்களுக்கு எதிரான வன்முறையால் சமத்துவம், அபிவிருத்தி, சமாதானம் மற்றும் மனித உரிமைகள் போன்றவற்றை பெற்றுக்கொள்வதில் தடையாக உள்ளது.

பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை எட்டுவதற்கு பெண்கள் மற்றும் சிறுமியருக்கு எதிரான வன்முறைகளுக்கு முடிவு காண்பது கட்டாய தேவையாகவுள்ளது. பெண்களுக்கு எதிரான வன்முறை பல விரிந்த வகைப்பாடுகளில் அடங்கும். ‘தனிநபர்களால்’ நிகழ்த்தப்படுபவையும் ‘அரசுகளால்’ நிகழ்த்தப்படுபவையும் இவற்றில் அடங்கும்.



தனிநபர்களால் நிகழ்த்தப்படுபவற்றின் வகைகளில் வன்கலவி, குடும்ப வன்முறை, பாலின துன்புறுத்தல், கருத்தடுப்பு முறைகளின் கட்டாயப் பயன்பாடு, பெண் சிசுக் கொலை, பால் தெரிவு கருக்கலைப்பு, மகப்பேறு வன்முறை மற்றும் திரள் வன்முறை, மற்றும் மரபுவழி அல்லது சமூக செயல்முறைகளாக கௌரவக் கொலை, வரதட்சிணை மரணம், பெண் உறுப்பு சிதைப்பு, கடத்திக் கல்யாணம், கட்டாயக் கல்யாணம் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். அரசுகளால் நிகழ்த்தப்பெறும் அல்லது மன்னிக்கப்படும் வன்முறைகளாகப் போர்களின் போது போர் வன்புணர்வு, பாலியல் வன்முறை மற்றும் பெண்ணடிமைத்தனம், கட்டாயக் கருவளக்கேடு, கட்டாயக் கருக்கலைப்பு, காவல்துறை மற்றும் அதிகார வர்க்கத்தினால் வன்முறை, கல்லால் அடித்தல் மற்றும் சவுக்கடி ஆகியன உள்ளன. தவிரவும் பெண்களைக் கடத்துதல், கட்டாய விபச்சாரம் போன்ற பல வன்முறைகள் கட்டமைக்கப்பட்ட குற்றப் பிணையங்களால் நடத்தப்படுகின்றன.

> “பெண்களின் உரிமைக்காகச் செயற்பட்டு வரும் அமைப்புக் கள் பெண்களுக்கு எதிரான இந்த வன்முறைப் போக்கைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குரல் எழுப்பி வருகின்றன. சமூகம் பெண்களைப் பாதுகாப்பதில் அக்கறை கொண்டிருந்தாலும், திடீரென ஏற்படுகின்ற வன்முறைகளில் இருந்து பெண்கள் முதற் கட்டமாகத் தங்களைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டியது இன்று அவசியமாகியிருக்கின்றது.”

பணியில் ஆணும் பெண்ணும் சரியாகச் சமமாக நடாத்தப்படாமை பெண்கள் செய்யும் பணிகளில் குற்றங்கண்டு பிடித்தல், பெண்களின் நடத்தையைத் தூற்றுதல், ஊதியத்தில் சமமின்மை போன்ற பல தீமைகள் பெண்களுக்கு எதிராக இழைக்கப்படுகின்றன. இவை அனைத்துமே பெண்களை மன ரீதியாகப் பாதிக்கின்றன.

UNFPA ஆல் நடாத்தப்பட்ட மிக அண்மைய ஆய்வின் படி 90% பெண்கள் பொதுப் போக்குவரத்தின் போது பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாகியுள்ளனர். மேலும் இலங்கையின் 22 வயதிற்குட்பட்ட 1322 இளங்கலை பட்டதாரிகளுக்கிடையில் (41%-ஆண் : 58%-பெண்) நடாத்தப்பட்ட ஆய்வின் படி அவர்களில் 44% ஆனோர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகியுள்ளதோடு அதில் 36% ஆனோர் உடலியல் துஷ்பிரயோகத்துக்கு முகங் கொடுத்துள்ளனர்.

வன்முறைகள் பெண்களை மட்டுமன்றி முழுக் குடும்பத்தையுமே பாதித்து விடக் கூடியன. குடும்பத்தகராறுகள் அதனால் ஏற்படும் வன்முறைகள் போன்றவை முழுக் குடும்பத்தையுமே குறிப்பாக குழந்தைகளை மிகவும் பாதித்து விடக் கூடியன. பாலியல் தாக்குதல்களில் இருந்து தற்காத்துக் கொள்வதற்காக வட இலங்கையிலுள்ள பெண்களுக்குப் பயிற்சியொன்று தன்னார்வ அமைப்பால் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இலங்கையில் போருக்குப் பின்னரான காலப்பகுதியில் வடமாகாணத்தில் பெண்கள், சிறுமியர்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகள் அதிகரித்திருப்பதாகப் புள்ளிவிபரங்கள் கூறுகின்றன. பெண்கள், சிறுமிகள்- பாடசாலை மாணவிகளும் கூட மோசமான முறையில் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு கோரமாகக் கொலை செய்யப்பட்ட சம்பவங்களும் இடம்பெற்றிருக்கின்றன.

பெண்கள் மற்றும் சிறுமியர் மீதான வன்முறைகள் அவர்களது வாழ்க்கையின் அனைத்து நிலையிலும் பாரிய உளவியல், பாலியல் மற்றும் பிறப்பு, சுகாதாரம் தொடர்பான பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும். உ+ம் சிறுமியரைப் பொறுத்தவரை கல்வி கற்கும் உரிமை பாதிக்கலாம். அல்லது ஆரம்பக் கல்வியில் பாதக நிலைமைகளையும் தோற்றுவிக்கக்கூடும். இது மட்டுமன்றி அவ்வாறான பாதிப்பு அவர்களது உயர் கல்வி மற்றும் தொழில் சந்தையில் உள்ள ஓரளவு வாய்ப்புகளையும் இல்லாமற் செய்யக்கூடும்.

பெண்களின் உரிமைக்காகச் செயற்பட்டு வரும் அமைப்புக்கள் பெண்களுக்கு எதிரான இந்த வன்முறைப் போக்கைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குரல் எழுப்பி வருகின்றன. சமூகம் பெண்களைப் பாதுகாப்பதில் அக்கறை கொண்டிருந்தாலும், திடீரென ஏற்படுகின்ற வன்முறைகளில் இருந்து பெண்கள் முதற் கட்டமாகத் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டியது இன்று அவசியமாகியிருக்கின்றது,

பெண்கள் பொருளாதார சுதந்திரம் பெற வேண்டும். தங்கள் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை அவர்கள் பெற்றிருப்பது அவசியம். அவர்களுக்கு எதிராகக் குற்றங்கள் நிகழ்த்தப்படும்போது, பெண்களுக்கான அமைப்புகளும், இயக்கங்களும் பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் உரிமைகளைப் பயன்படுத்த, பக்கமாயிருந்து உதவ வேண்டும்”.

இலங்கையில் கொரோனா வைரஸ் காரணமாக ஊரடங்கு அமுலாக்கப்பட்டதில் இருந்து “1929” என்ற இலக்கத்துக்கு கிடைக்கும் சிறுவர்கள் தொடர்பான வன்முறை முறைப்பாடுகள் அதிகரித்துள்ளது என்று தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது. நோய்த்தொற்று வேகமாக பரவுவதைத் தடுக்க அரசாங்கம் ஊரடங்கு சட்டத்தை பிறப்பித்து மக்களை வீட்டுக்குள் முடக்கியுள்ள அதே நேரம் வீடுகளில் குடும்ப வன்முறைகளும் சிறுவர் துஷ்பிரயோகங்களும் வேகமாக அதிகரித்துள்ளதாகக் கணிப்புகள் தெரிவிக்கின்றன.

ஊரடங்கு அமுலாக முன்னர் தினமும் 40% முறைப்பாடுகள் கிடைத்தது. அதில் 10% மட்டுமே சிறுவர்கள் தொடர்பானது. ஆனால் இப்போது ஊரடங்கின் பின்னர் 42% முறைபாடுகள் சிறுவர்கள் தொடர்பிலேயே கிடைக்கப்பெறுகின்றது. மார்ச் 16 முதல் ஏப்ரல் 9 வரை அதிகார சபைக்கு 307 முறைப்பாடுகள் கிடைத்தன அவற்றில் 127 முறைப்பாடுகள் குழந்தைகள் மீதான கொடுமை மற்றும் வீட்டு வன்முறைகள் தொடர்பானதாகும். இவ்வாறான நிலை சமூகத்தில் இனம்புரியாத ஓர் அச்சத்தை தோற்றுவிப்பதோடு இச்சமூக அவல நிலையினை இழிவளவாக்க சமூகப் பொறுப்புணர்ச்சியும் விழிப்புணர்ச்சி செயல்முறைகளும் சட்ட வழிமுறைகளும் வலுப்படுத்தப்பட வேண்டியது காலத்தின் தேவையாக உருவெடுத்துள்ளது.

அந்த வகையில் இலங்கையானது வன்முறைகளை ஒழிப்பதை மையமாகக் கொண்டு பல ஒப்பந்தங்களில் கைச்சாத்திடுவதன் மூலமாக சர்வதேச தரத்தைப் பேணும் வகையில் பொறுப்பு மற்றும் பேணுதலில் தன் வகிபங்கை வழங்க உறுதி அளித்துள்ளது. இவற்றோடு இணைந்ததாக இலங்கையைப் பொறுத்த வரையில் பாலினம் சார்ந்த வன்முறைக்கெதிராக குரல் கொடுக்க மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக பாதுகாப்பு அமைச்சு, WIN (Women In Need)போன்ற அரச மற்றும் அரச சார்பற்ற தாபனங்கள், சிவில் சமூக அமைப்புகள் அதேபோல் சமூக குழுக்கள் முன்வந்துள்ளமையானது பாலின ரீதியான வன்முறைகளை குறைப்பதற்கான பாதையில் ஓர் நேர்மையான அறிகுறி என்றே குறிப்பிட வேண்டும். ■



வியாக்ரன்

# அறிந்தேன்... பகிர்ந்தேன்...

பன்னிரண்டு வயதுச் சிறுவன் சினிமா இயக்குநராகி கேரளாவைத் திரும்பிப் பார்க்க வைத்திருக்கிறான். பன்னிரு வயதான Ashik junu ஆறு குறும்படங்கள், இரண்டு வணிகப் படங்கள் எனப் பயணித்துக் கொண்டிருக்கிறான். “பிடிகா” என்ற நுகர்வோர் விழிப்புணர்வுப் படத்தோடு தொடங்கி “பசி” “The role of peace” முதலான குறும் படங்களை எடுத்துள்ளான். The role of peace சிறந்த ஊரங்கு சினிமாவிற்கான சர்வதேச விருதினைப் பெற்றுள்ளது. முதல் வணிகப்படமான “கொலம்பியா அக்கடமி” என்ற படத்தை முடித்து விட்டு, தமிழ், மலையாளம், ஆகிய மொழிகளில் “EVA” திரைப்படத்தினை எடுத்துக் கொண்டிருக்கிறான்.

***



a, e, i, o, u என்பன ஆங்கிலத்தில் உயிர் எழுத்துகளாக உள்ளன. உயிர் எழுத்துக்கள் இல்லாமல் சொற்கள் உருவாவதில்லை. அவ்வாறு உருவாக்கப்படும் வார்த்தைகள் பொருள் தராது. Sky (வானம்) Grwth (இசைக்கருவி) என்பன உயிர் எழுத்துகள் இல்லாமலேயே பொருள் தருகின்றன. எப்படி இது சாத்தியம் என்று யோசிக்கிறீர்களா? W, Y என்னும் இரு எழுத்துக்களும் அரை உயிராக (தமிழிலுள்ள வ்,ய் போல) அமைந்துள்ளன. எனவேதான் பொருள் தருகின்றன. a, e, i, o, u, w, y என்பன இல்லாமல் எவராலும் ஆங்கில வார்த்தை ஒன்றினை உருவாக்க முடியாது.

***

முப்பத்தி ஐந்து, இருபத்தியேழு, இருநூற்றியறுபது, தொண்ணூற்றியெட்டு என எழுதுவது தவறானதாகும். இவை குற்றியலுகர ஈற்றுப்புணர்ச்சியின் அடிப்படையில் இணைய வேண்டும். எனவே முப்பத்தைந்து, இருபத்தேழு, இருநூற்றறுபது, தொண்ணூற்றெட்டு என்றே எழுத வேண்டும். வினைத் தொகையாக அமைவதால் ஊரடங்குச் சட்டம் என எழுதுதல் தவறாகும். ஊரடங்குச் சட்டம் என்றே எழுதுதல் வேண்டும் ‘வரட்சி’ என்பதும் தவறான சொல்லாட்சியாகும். ‘வரள்’ என்ற வினையடியிலிருந்து தோன்றுவதால் வறட்சி என்றே அமைய வேண்டும். அருவெருப்பு என எழுதாமல் அருவருப்பு என்றே எழுத வேண்டும். ஒவ்வாமையினை உணர்த்துவதால் “அருவருப்பு” என்பதே ஏற்புடையது. கிருஸ்ணன், புஸ்பம், பொக்கிஸம் என்பவற்றையும் கிருஷ்ணன், புஷ்பம், பொக்கிஷம் என்றே எழுதுதல் வேண்டும். இல்லையேல் கிருட்டினன், புட்பம், பொக்கிசம் என எழுதலாம்.

***

ஒளியானது ஒளிபுகும் ஊடகத்தின் ஊடே செல்லும் போது சிதறடிக்கப்பட்டு அதன் அலை நீளத்தில் மாற்றம் நிகழ்கின்றது என்பதை சி.வி.இராமன் என்ற தமிழர் கண்டறிந்தார். கடலின் நீல நிறத்திற்கு ஆகாயமே காரணம் என ஆரம்பத்திலே நம்பினர். சூரிய ஒளி தண்ணீரில் மூலக் கூறுகள் ஊடாகச் சிதறடிக்கப்படுவதால் கடல் நீல நிறமாகத் தோன்றுவதை சி.வி.இராமன் தெளிவுபடுத்தினார்.

***

“சிகேடா” என்ற இனத்தைச் சேர்ந்த Magi cicada எனும் ஒரு வகைப்பூச்சிகள் வெப்ப மண்டலக்காடுகளில் காணப்படுகின்றன. இவை பெரும்பாலும் மண்ணுள்ளே தான் வாழும். 13 அல்லது 17 வருடங்களுக்கு ஒரு முறையே இனப் பெருக்கம் செய்ய வெளியே வரும். 13 மற்றும் 17 என்பன முதன்மை எண்கள் (Prime numbers) ஆகும். 13 என்ற எண்ணை ஒன்றும் பதின்மூன்றும் மட்டுமே வகுக்கும். பதின்மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை வெளிப்படும் மஜிசிகேடாவை இரண்டு ஆண்டு வாழ்நாள் உடைய உயிரினம் சந்திக்க 26 வருடங்கள் காத்திருக்க வேண்டும். 17 ஆண்டுகளுக்கு ஒரு முறை வெளிப்படும் மஜிசிகேடாவை இரண்டு ஆண்டு வாழ்நாள் உடைய உயிரினம் சந்திக்க 34 வருடங்கள் காத்திருக்க வேண்டும். அது சரி... மஜிசி கேடா 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை தோன்றினால் என்ன ஆகும்? 12 என்பது 2,3,4,6,12 என்பவற்றால் வகுபடும். எனவே 2,3,4,6,12 ஆண்டு வாழ்நாள் உடைய உயிரினங்களால் உண்ணப்படும். மஜிசிகேடாவின் இருப்பினைத் தக்க வைக்கும் இயற்கையின் கணிதம் அதிசயம் வாய்ந்ததாகவுள்ளது.

***

திரைப்பிரபலங்கள் சார்ந்த விடயங்களை சினிமாப் பாடல்களுக்குள் புகுத்தி விடும் பண்பினை கவிஞர் வாலியிடம் அதிகமாக இனங்காணலாம். எம்.ஜி.ஆரின் பாடல்களில் மட்டுமின்றி பின்னரும் இந்நுட்பத்தினைத் தொடர்ந்துள்ளார். இளையராஜாவின் தாயின் பெயர் சின்னத்தாய் ஆகும். ‘தளபதி’ திரைப்படப் பாடலொன்றை “சின்னத் தாயவள் தந்த ராசாவே” எனத் தொடங்கியுள்ளார். கமல்ஹாசனின் தாயின் பெயர் ராஜலட்சுமி, தந்தையின் பெயர் ஸ்ரீநிவாசன். “தசாவதாரம்” திரைப்படத்தின் “கல்லை மட்டும் கண்டால்” என்ற பாடலில் “ராஜலட்சுமி ராகவன் ஸ்ரீநிவாசன் தான்” என எழுதியுள்ளார். கமல்ஹாசன் இளவயதில் டி.கே.சண்முகத்தின் நாடகக் குழுவில் நடிப்பினைக் கற்றுக் கொண்டார். “அவ்வை சண்முகி” திரைப்படப் பாடலில் “சண்முகா...! உனது படைப்பில் உயர்ந்து விளங்கும் பெண் ஐயா” என எழுதியுள்ளார். ரஜினிகாந்தின் அரசியல் பிரவேசம் இருமைத் தன்மையோடு காணப்பட்டதை “ராஜ்யமா இல்லை இமையமா” என்றும் “கட்சிகளைப் பதவிகளை நான் விரும்ப மாட்டேன். காலத்தின் கட்டளையை நான் மறக்க மாட்டேன்” எனவும் குறிப்பிட்டுள்ளார். கே.பாக்யராஜ் அவர்கள் எம்.ஜி.ஆரின் கலையுலக வாரிசாக அறிவிக்கப்பட்டார். “நினைத்ததை யார் முடிப்பவன் சொல் அவரிடம் நான் படித்தவன் தான்” என தாவணிக் கனவுகள் திரைப்படத்திலே எழுதியுள்ளார். A.R.ரகுமான் ஒஸ்கார் விருது மேடையில் குறிப்பிட்ட தமிழ்வாசகத்தைப் பிரதிபலிக்கும் முகமாக “எல்லாப்புகழும் இறைவன் ஒருவனுக்கே” என்றும் எழுதியுள்ளார். இவ்வாறு எண்ணற்ற உதாரணங்கள் உள்ளன.

***

“ஆயிரம் புத்தகங்கள் வாசித்தவன் ஒருவன் இருந்தால் அவனைக் காட்டுங்கள். அவனே எனது வழிகாட்டி” என்று ஜூலியஸ் சீசர் கூறியுள்ளார். தொடர் வாசிப்பும், தகவல்களை விரல்நுனியிலே வைத்திருப்பதும் சிலரின் அடையாளங்களாகும். ஈழத்தில் பேராசிரியர் செ.யோகராசா, விமர்சகர் அ.யேசுராசா போன்ற பலரைக் குறிப்பிடலாம். இளையவர்களில் சி.ரமேஷ் விரல் நுனித்தகவல்களோடு திகழ்கிறார். இல்லத்திலே நூலகம் ஒன்றை அமைத்துள்ளார். இலக்கியத்தில் புள்ளி விவரப்புலியாகவே இனங்காணப்படுகின்றார். இலக்கியம் சார்ந்த எந்த விடயத்தினைக் கேட்டாலும், தேடி எடுத்தேனும் தருகின்ற வல்லமை மிகுந்தவர். இத்தகையவர்களால் ஈழத்து இலக்கியச் சூழல் பெருமையடைகின்றது.

அற்புதமான அனுபவத்தொற்றலை நிகழ்த்துகின்ற பிரமிளின் “காவியம்” என்ற கவிதையோடு இவ்வாரத்திற்கான பதிவினை நிறைவு செய்கிறேன்.

“சிறகிலிருந்து பிரிந்த
இறகு ஒன்று
காற்றின்
தீராத பக்கங்களில்
ஒரு பறவையின் வாழ்வை
எழுதிச் செல்கிறது”

# நிலைக்கண்ணாடி

தரிசனன்




## குழந்தைகளுடன் உரையாடுதலும் அவர்களைக் கையாளுதல்

குழந்தைகளை வளர்க்கின்ற பெற்றோரும் மூத்தவர்களும் அவர்களைக் கையாளும் பொழுதோ அவர்களோடு உரையாடும் பொழுதோ தாம் வளர்ந்து வருகின்ற குழந்தைகளோடு பேசுகிறோம் அவர்களைக் கையாளுகிறோம் என்கின்ற பிரக்ஞையோடு நடந்து கொள்வது மிகவும் அரிதாகவே பார்க்கக் கிடைக்கின்றது.

பிஞ்சுகளாகிய குழந்தைகள் வளர் பருவ நிலையில் இருக்கிறார்கள். அவர்களது உடலும் அறிவும் நாளுக்கு நாள் வளர்ந்து வருகின்ற விஷயங்கள். அவர்களின் உடல் வளர்ச்சிக்கான ஊட்டச் சத்துக்கள் உணவினூடாக வழங்கப்படுவது போல உளம் சார்ந்த வளர்ச்சிக்கான பங்களிப்புக்களும் வளர்ந்தோரால் வழங்கப்படுவது அவசியம் என்பதைப் பலரும் மனங்கொள்வதில்லை.

எப்போதுமே மூத்தவர்கள், தம்மைச் சார்ந்த குழந்தைகள் நல்ல பிள்ளைகளாக வளர்ந்து வர வேண்டும் என்பதை எதிர்பார்க்கிறார்கள். வளர்ந்தோரின் மனப்பாங்கு, விருப்பு வெறுப்புகள் போன்றவற்றைக் குழந்தைகள் நன்கு அவதானிக்கிறார்கள். முடியுமானவரை மூத்தோரைப் பின்பற்றிக் கதைக்கவோ நடந்து கொள்ளவோ எதிர்வினை புரியவோ முயலுகிறார்கள். எனவே அவர்களை வளர்த்தெடுக்கின்ற மூத்தவர்கள் குழந்தைகள் பின்பற்றத்தக்க முன்னுதாரணங்களான நடத்தைகளைக் குழந்தைகள் அவதானிக்கும் படி செய்தல் அவசியம். உதாரணமாகக் குழந்தைகள் மூத்தோரிடம் பேசும் போது நீ, வா, போ என ஒருமையில் பேசாமல் நீங்கள், வாங்கோ, போங்கோ எனப் பேச வேண்டும் என எதிர்பார்க்கிறோம். இந்த விஷயத்தை பழக்கத்தில் கொண்டு வர விரும்புவோமெனில் குழந்தைகளின் முன்னிலையில் ஏனையோரை நாமும் மரியாதையாகப் பன்மையில் அழைத்தல் (வாங்கோ, போங்கோ) அவசியமாகிறது. அண்ணனை வாடா என்று அழைப்பதை பார்க்க நேரிடும் ஒரு குழந்தை தானும் அவ்வாறே அழைக்க முற்படும். வேறொரு சந்தர்ப்பத்தில் அப்பாவையோ அல்லது இன்னொரு மூத்தவரையோ வாடா என அழைக்க முற்படும். குழந்தையின் பார்வையில் தர்க்க ரீதியான மரியாதைப் பன்மை வேறுபாடுகள் புரிந்துகொள்ளப்படுவதில்லை. பார்த்தும் கேட்டும் பழகிய ஒரு விடயத்தைத் தானும் அவ்வாறே பிரயோகிக்க முற்படும் குழந்தையை நாம் குறை கூற முடியாது. குழந்தைகள் பயிலும் பருவத்தில் உள்ளனர் என்பதையும் அதன் முன்னிலையில் எது உதாரணத்துக்கு பயன்படுகிறதோ அதனையே குழந்தையும் பின்பற்றும் என்பதையும் மூத்தோராகிய நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

குழந்தைகள் கண்டு கற்கும் பருவத்தினர் என்பதை நாம் மறந்து விடக் கூடாது. குழந்தைகளுக்கு முன்னால் நாம் எவற்றைப் பார்வைக்குத் தருகிறோமோ அவற்றையே குழந்தைகள் பின்பற்றுகின்றன என்ற அடிப்படைப் புரிதலை நாம் உணரத்தவறி விடக் கூடாது. எனவே குழந்தைகளோடு உரையாடும் போதோ அவர்களுடன் பழகும் போதோ மரியாதையான வார்த்தைகளை நாம் உபயோகிப்போமெனில் குழந்தைகளும் அவ்வாறே பின்பற்றுவதற்கான எத்தனங்களைக் கொண்டு செயற்படும். அறியாப் பருவக் குழந்தைகள் செய்யும் பல காரியங்களைப் பல பெற்றோர் ‘குழப்படி’ என வரைவிலக்கணப்படுத்துகிறார்கள். சுறுசுறுப்பும் அடிப்படை அறிவு கூர்மையும் உடைய குழந்தைகள் ஆச்சரியப்படும் வரையில் எதிர்வினை புரியும் ஆற்றலைக் கொண்டிருக்கும். நமது பெற்றோர் அவ்வாறான ஆற்றலின் விளைவாக எப்போதும் எதையாவது செய்யும் குழந்தைகளைக் குழப்படிப் பிள்ளை என முடிவெடுக்கிறார்கள். இது தவறு...




# நீதி கோரிய போராட்டங்கள்: விம்ப அரசியல்

செல்வழகன்

அதிகாரத்தை நிலைநிறுத்த விளைவோர் தம்மைக் கட்டமைத்து, மக்கள் மத்தியில் ஒரு நாயக விம்பத்தைக் கட்டியெழுப்புவர் என்கிறார் பின்நவீனத்துவவாதியான மிஷேல் பூக்கோ. அரசியல் தலைவர்கள் நாளும் தம்மைப் பேசுபொருளாக்கி, மக்கள் மத்தியில் தமது விம்பத்தைக் கட்டியெழுப்பவே முயல்வர். நாட்டின் ஜனாதிபதிகள், பிரதமர்கள், எதிர்க் கட்சித் தலைவர்கள் எனப் பலரும் தமது எதிர்காலத்துக்கான விம்பங்களைக் கட்டியெழுப்புவது வழமையாகும். பத்திரிகையாளர் சந்திப்புக்கள் அடிக்கடி இடம்பெறுவதும் இந்த அடிப்படையில்தான்.

தமிழ்நாட்டு அரசியலிலும் இத்தகைய நாயக விம்பங்கள் தாராளம். தமிழ்நாட்டின் ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர்கள் பலரும் சினிமாவின் மூலம் தமக்கான விம்பங்களைக் கட்டியெழுப்பி, அரசியலில் கோலோச்சியவர்கள்தான்.

அண்மைக் காலத்தில் இந்த நாயக விம்பத்தைக் கட்டியெழுப்புவதில் சம்பந்தன், சிறிதரன் எல்லோரையும் பின்தள்ளிப் பாராளுமன்ற உறுப்பினரும், தமிழரசுக் கட்சியின் உப தலைவர்களுள் ஒருவருமான மதியாபரணம் ஏபிரகாம் சுமந்திரன் முன்னணியில் திகழ்கிறார் என்கின்றனர் நோக்கர்கள்.

அவர் அடிக்கடி பத்திரிகையாளர்களைச் சந்திப்பதும், அந்தச் சந்திப்புக்களில் தமிழ்த்தேசியப் பரப்பில் சலசலப்புக்களை உண்டு பண்ணும் கருத்துக்களைக் கூறுவதும் ஒரு வகையில் நாயக விம்பத்தைக் கட்டியெழுப்புவதற்கானதாகும். அத்துடன் அவரைப் பிரதிபலித்து, அவரை முன்னரங்குக்குக் கொண்டு வரத் தக்க வகையில் ஊடகம் ஒன்று இருப்பதும் முக்கியமானதாகும்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நன்றாகத் தளர்ந்து விட்டார். மூப்புக் காரணமாக அவரால் சரிவர இயங்க முடியவில்லை. இந்த நிலைமை, கொழும்பில் இருக்கும் சம்பந்தனோடு ஊடாடும், ஆங்கில மற்றும் சட்டப் புலமையுள்ள சுமந்திரனுக்கு ஏனையோரை விடச் சாதகமாக உள்ளது.

**“விவசாயிகளின் போராட்டத்தை முக்கிய எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கையிலெடுத்து, பல பகுதிகளிலும் போராட்டங்களை நடத்தி வருகின்றது. ஜே.வி.பியும் பல பகுதிகளில் விவசாயிகளின் போராட்டங்களை நடத்தி வருகிறது. தமிழ்ப் பகுதிகளில் குறிப்பாக, மலையகத்தில் ஐக்கிய மக்கள் சக்தியுடன் நெருக்கமாக உள்ள தமிழ் முற்போக்குக் கூட்டணி இந்தப் போராட்டங்களை நடத்தியுள்ளது. வடக்கு, கிழக்கில் நேரடியாக தமிழ்க் கட்சிகள் இப்போராட்டத்தை நடத்தவில்லை. ஐக்கிய மக்கள் சக்தியும் நடத்தவில்லை. பதிலாக சுமந்திரனின் அழைப்பில் இந்தப் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது.”**

கூட்டமைப்புக்கான பேச்சாளராக உத்தியோகபூர்வமாக நியமிக்கப்படா விட்டாலும் சுமந்திரனே அந்தப் பொறுப்பைக் கையிலெடுத்து, ஊடகங்களிலும் அந்தப் பதவியால் அறியப்படுபவராகக் காட்டிக் கொண்டே அந்த ஊடகச் சந்திப்புக்களை நடத்தி வருகிறார்.

“அண்ணை எப்போ போவார் திண்ணை எப்போ காலியாகும்” என்று எதிர்பார்த்து, சம்பந்தனின் பின்னர் மாவை சேனாதிராசாவை கூட்டமைப்பின் தலைவராக்கி விட்டு, தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவியைக் குறி வைத்திருப்பவர்கள் வயிற்றில் புளியைக் கரைக்கும் வண்ணம் சுமந்திரன் அண்மையில் ஒரு கருத்தைத் தெரிவித்திருந்தார். ‘தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குத் தலைமை தாங்கும் தகுதி உங்களுக்கு இருக்கிறதா?’ என்று ஊடகர் ஒருவர் கேட்ட போது ‘என்னைக் கேட்டால் ‘ஆம்’ என்று தான் பதிலளிப்பேன்’ என்று சொல்லி இருக்கிறார்.

அதன் பின்னர் பண்படுத்தப்படாத நிலத்தில் விதையெறிந்தும், பாவனையில் ஒய்வு பெற்ற கலப்பையொன்றை எடுத்து, கயிற்றால் கட்டி தொத்துப் போட்டு உழுவதும், பனையோலைப் பிளாவில் உண்பதுமான ஒளிப் படங்கள் ஊடகங்களில் வெளியாகின. ஒரு மேட்டுக்குடி விம்பத்தையுடைய சுமந்திரனை சாமானிய மக்களின், பாட்டாளிகளின் தோழன் எனக் காட்டுகின்ற முயற்சியாகவே இந்த சூட்டிங்கை அரங்கேற்றி இருந்ததாக விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. அதற்கு முன்னர் தானே தோளில் சுமந்து சென்று கொரோனா நிவாரணங்களை வழங்கிய படங்களும் முன்னர் ஊடகங்களில் வெளிவந்திருந்தமையும் சுட்டிக் காட்டத்தக்கது.

அவரது அண்மைய இன்னொரு முயற்சி கடந்த வாரத்தில் அரங்கேறியது. ஒக்ரோபர் 17, 18 ஆம் திகதிகளில் மீனவர்கள் மற்றும் விவசாயிகளின் பிரச்சினைக்கு நீதி கோரிய இரண்டு போராட்டங்களை அவர் அறிவித்தார். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்களுக்கோ, தமிழரசுக் கட்சித் தலைமைக்கோ தெரியாமல் - தெரிவிக்கப்படாமல் - தன்னிச்சையாக இந்தப் போராட்டத்தை அறிவித்தார்.
போராட்டத்துக்கு முதல்நாள் மாவை சேனாதிராசாவின் தலைமையிலேயே போராட்டம் நடக்கும் என்று சுமந்திரனை முன்னிலைப்படுத்தும் பத்திரிகை அறிவித்தது. எனினும், பங்காளிக் கட்சிகளோ, தமிழரசுக் கட்சியின் தலைவரான மாவை சேனாதிராசாவோ கட்சியின் முக்கிய பிரமுகர்களோ இல்லாமலே நூற்றுக் கணக்கானோருடன் இந்தப் போராட்டங்களை நடத்தி முடித்துள்ளார். தமக்கான ஆதரவை நாடிப் பிடிக்கும் செயற்பாடாக இந்தப் போராட்டத்தை அவர் கருதியிருக்கலாம் என்கின்றனர் நோக்கர்கள்.

விவசாயிகளின் போராட்டத்தை முக்கிய எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கையிலெடுத்து, பல பகுதிகளிலும் போராட்டங்களை நடத்தி வருகின்றது. ஜே.வி.பியும் பல பகுதிகளில் விவசாயிகளின் போராட்டங்களை நடத்தி வருகிறது. தமிழ்ப் பகுதிகளில் குறிப்பாக, மலையகத்தில் ஐக்கிய மக்கள் சக்தியுடன் நெருக்கமாக உள்ள தமிழ் முற்போக்குக் கூட்டணி இந்தப் போராட்டங்களை நடத்தியுள்ளது. வடக்கு, கிழக்கில் நேரடியாக தமிழ்க் கட்சிகள் இப்போராட்டத்தை நடத்தவில்லை. ஐக்கிய மக்கள் சக்தியும் நடத்தவில்லை. பதிலாக சுமந்திரனின் அழைப்பில் இந்தப் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது. இந்தப் போராட்டங்களில் சுமந்திரனை ஆதரிக்கும் தரப்புகளோடு இணைந்து உணர்ச்சிகர அரசியலை முன்னெடுக்கும் பிரமுகர்கள் சிலரும் ஈடுபட்டிருந்தனர். பல இடங்களிலும், சிறு சிறு குழுக்களாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

வடக்கு மீனவர்களுக்கு நீதி கோரி முல்லைத்தீவில் இருந்து காங்கேசன்துறை வரை கடல்வழிப் போராட்டம் ஒன்று கடந்த 17ஆம் திகதி நடைபெற்றது. சில பத்துப் படகுகளுடன் ஆரம்பமான இப்போராட்டத்தில் அந்தந்தப் பிரதேச மீனவர்களும் பங்குபற்றினர் என போராட்ட நிறைவில் தெரிவிக்கப்பட்டது. எரிபொருளை வழங்கி மேற்கொள்ளப்பட்ட ஒரு படகுச் சவாரியே இது என இணையத்தளமொன்று இந்தச் செயற்பாட்டைக் கிண்டலடித்தது.

இந்தப் போராட்டத்தை ஏற்பாடு செய்தவர்கள், பேசியவர்கள் இந்திய மீனவர்களுக்கு எதிராகப் பேசுவதைத் தவிர்த்துக் கொண்டதையும், கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைத் தாக்கிப் பேசியதையும் அவதானிக்க முடிந்தது. அதாவது பிரச்சினையை மடை மாற்றி, இழுவை மடித் தொழிலுக்கு எதிராக, சுமந்திரன் எம்.பி. நல்லாட்சி அரசாங்கத்தில் சட்டமூலத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றிய போதும் டக்ளஸ் தேவானந்தா அதைப் பிரயோகிக்கவில்லை என்றும், அவர் இந்திய மீனவர்களைப் பாதுகாக்க முயற்சிக்கிறார் என்றும் பேசினார்கள். இந்திய மீனவர்களுக்கு எதிராகக் கோசமெழுப்பவோ, தமிழக, இந்திய அரசாங்கங்களுக்கு எதிராகப் பேசவோ முயற்சிக்காது தவிர்த்துக் கொண்டனர்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கடந்த ஆட்சியில் - 2017 இல் தாம் கொண்டு வந்ததாகக் கூறும் சட்டத்தைப் பயன்படுத்தி அக்காலத்தில் சுமந்திரன் போன்றவர்கள் ஏன் இந்திய மீனவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவில்லை? எனப் பதிற் கேள்வி எழுப்பியிருந்தார். எல்லை தாண்டும் இந்திய மீனவர்களைக் கடுமையாகத் தண்டிக்கும் குறித்த சட்டத்தின் வரிகளைப் பார்த்து தான் அதிர்ந்து போனதாக இலங்கை சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தன் தெரிவித்தார்.
இந்தியாவைச் சீண்டியவாறே தமிழரசுக் கட்சி இந்தியாவிடம் அரசியல் ஆதரவை எந்த முகத்துடன் கேட்கிறது? என்றும் அவர் கேள்வி எழுப்பியிருந்தார்.

இழுவைமடி வலைத் தொழில் என்பது இந்தியாவில் மட்டுமல்ல இலங்கையிலும் நடைபெறுகின்ற ஒன்றுதான். இந்தியாவில் சாதாரண தொழிலாளர்கள் இழுவைமடிப் படகுகளை-றோலர்களை- வைத்திருக்கவில்லை. தமிழக அரசியல்வாதிகள், வர்த்தகப் புள்ளிகள் பலருமே இத்தகைய படகுகளை வைத்திருக்கிறார்கள். இந்திய மீனவர்கள் என்பதை விட மீனவரல்லாத இந்திய முதலாளிகளின் படகுகளே எல்லை தாண்டிய மீன்பிடியில் ஈடுபடுகின்றன என்பது எமது அரசியல்வாதிகள் அறியாததல்ல. அது போல இலங்கை முழுவதும், காங்கேசன்துறையில் இருந்து பருத்தித்துறை, முல்லைத்தீவு வரையும் பல இழுவைமடிப் படகுகள் ஆழ்கடலைத் துளாவி மீன்பிடித்தலில் ஈடுபடுகின்றன. இவற்றின் சொந்தக்காரர்கள் பலரும் வடக்குக் கிழக்குத் தமிழர்தான். இத்தகைய இழுவைமடி மீன்பிடியால் பாதிக்கப்படுவது ஏழை மீனவர்கள்தான்.




ஆக, இழுவை மீன்பிடிச் சட்டத்தைப் பயன்படுத்தி மீனவர்களைத் தண்டிக்கும் செயற்பாடுகளில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மட்டுமல்ல இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தவர்களே ஈடுபட மாட்டார்கள் என்பது நிச்சயமானது. பதிலாக நாயகக் கனவுகளை உயிர்ப்பிக்கும் ஸ்டன்ட் அரசியலுக்காக, காணாமல் போனோரின் உறவுகள் போல, இனி விவசாயிகளும், கடற்தொழிலாளர்களும் பயன்படுத்தப்படப் போகிறார்கள் என்பதைத்தான் நடந்து முடிந்தவைகள் கட்டியம் கூறுகின்றன. ■



தாமிரன்

# மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடிய போராட்ட வடிவங்கள் தேவை

தமிழ்த்தேசிய கூட்டமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட இரண்டு போராட்டங்கள் நடந்து முடிந்திருக்கின்றன. ஒன்று மீனவர்களின் போராட்டம் மற்றையது விவசாயிகளின் போராட்டம். கிட்டத்தட்ட இரண்டு போராட்டங்களுமே யாருக்கு எதிராக இந்தப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றனவோ அந்தத் தரப்புக்களுக்கு வலிக்காமல் மேற்கொள்ளப்பட்ட போராட்டங்கள்தான். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கட்சிகளிடம் செயற்றிறன் இல்லை என்பது நீண்ட காலமாக சுட்டிக்காட்டப்பட்டு வருகின்ற ஒன்று. அவைகள் கட்சி நலனுக்காகக் கூட இல்லை தம் நலன்களை முன்னிறுத்தியே செயற்பட்டு வருகின்றன என்பதை தொடர்ச்சியாக இக் கட்சிகளை அவதானித்து வருகின்றவர்கள் இலகுவில் கண்டடைந்து விடுவார்கள். இவர்கள் பெறுகின்ற வாக்குகள் கூட இவர்களுக்கு எதிரான வலுவான கட்சிகள் இல்லை என்பதுதான். நேர்மையும் செயற்றிறனும் உள்ள ஒரு கட்சி இக் கட்சிகளைப் புறக்கணித்து எழுமாக இருந்தால் இக்கட்சிகள் வலுவிழந்து போய்விடும் என்பது வெளிப்படை.

தமிழ் அரசியல் ஆய்வாளர்கள் சிலர் இருக்கின்ற கட்சிகளைப் பலப்படுத்துவோம் என்ற விதமாகப் பேசி வருகின்றனர். அவர்களின் ஒத்துழைப்புடன் இக் கட்சியிலிருக்கும் அதிருப்தியாளர்களைப் பிரித்தெடுத்து புதிய கட்சிகளை உருவாக்கும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அக் கட்சிகளும் கடைசியில் எவ்வாறு செயற்பட்டன என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டிய தேவையில்லை. தமிழ்மக்களிடம் மக்கள் மையமான கட்சிகள் இல்லை என்பதுதான் பெரும் துயரம். இந்நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மேற்கொண்ட இரண்டு போராட்டங்களும் ஊடகங்கள் சிலவற்றில் பெருப்பித்துக் காட்டப்பட்ட அளவுக்கு முக்கியத்துவம் மிக்கவையல்ல. இவற்றைவிடவும் மீனவர்களாலும் விவசாயிகளாலும் எவ்விதமான அரசியல் தலையீடுகளும் இல்லாது சுயமாக முன்னெடுக்கப்பட்ட போராட்டங்கள் வலுவானவை.

நடந்து முடிந்திருக்கின்ற இரண்டு போராட்டங்களும் யாருக்கு எதிரானது? என்ற கேள்வியை எழுப்புகின்ற போது அது அரசுக்கெதிரானதா? அல்லது இந்தியாவுக்கு எதிரானதா? என்ற குழப்பம் ஏற்படுகின்றது. மீனவர் பிரச்சினை வெறுமனே இலங்கை அரசுடன் சம்மந்தப்பட்டது மட்டுமல்ல. அது இந்திய அரசோடும் சம்மந்தப்பட்டது. ஆனால் போராட்டத்தில் இந்தியாவுக்கு எதிரான கோசங்களை முன்னெடுக்க வேண்டாம் எனப் போராட்டக்காரர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டதாகவும், கடற்றொழில் அமைச்சருக்கு எதிராகக் கோசங்களை முன்னெடுக்குமாறு வலியுறுத்தப்பட்டதாகவும் கருத்துக்கள் வெளியாகியிருக்கின்றன. மொத்தத்தில் இந்தப் போராட்டம் கடற்றொழில் அமைச்சருக்கு எதிரான போராட்டமாகச் சுருங்கியிருக்கின்றது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நடக்க இருக்கின்ற மாகாணசபைத் தேர்தலுக்கு ஒரு வாய்ப்பாக மீனவர்களின் போராட்டத்தைப் பயன்படுத்தியிருக்கின்றது என்பது வெளிப்படையாகின்றது.

> **“தமிழ்த்தேசியக் கட்சிகள் இந்த இடத்தில் இரண்டு நாடுகளினதும் தமிழ் மக்களின் ஒருமைப்பாட்டையும் குலைக்காத வகையிலான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டிய தேவை இருக்கின்றது. இந்தியாவின் மத்திய அரசுடன் அவர்கள் வேண்டுதல்களை விடுப்பதை விட தமிழ் நாட்டோடு பேச வேண்டிய தேவை இருக்கின்றது.”**

கடற்றொழில் அமைச்சரைப் பொறுத்தவரையில் அவர் வலுவான எந்தத் தீர்மானங்களையும் எடுக்கக் கூடிய அமைச்சர் இல்லை என்பதை அவரது கருத்துக்களும் செயற்பாடுகளும் வெளிப்படுத்துகின்றன. இந்திய மீனவர்களைப் பிடித்து வாருங்கள் என மீனவர்களிடம் கேட்டுக்கொள்ளும் அளவில்த்தான் இருக்கின்றார் என்பது பரிதாபத்துக்குரியது. மீனவர்கள்தான் பிடித்து இழுத்து வரவேண்டுமென்றால் வெட்டியாக ஒரு அமைச்சு என்னத்துக்கு? என்ற கேள்வி இருக்கின்றது. அரசுக்கு அழுத்தங்கொடுக்கத்தக்க இடத்தில் அவர் இல்லை என்பதுதான் உண்மை. கிட்டத்தட்ட தந்தை செல்வா ‘தமிழ்மக்களைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்’ என்று கூறியதற்குச் சமமானதுதான் அமைச்சரின் மேற்படிக்கூற்று.

மீனவர்கள் பிரச்சினை, இரு நாடுகளுடனும் சம்மந்தப்பட்ட பிரச்சினை. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இதில் இந்தியாவை விட்டுவிட்டு இலங்கை அரசையும் கடற்றொழில் அமைச்சரையும் மட்டும் முன்னிலைப்படுத்திப் போராட்டங்களை முன்னெடுப்பதென்பது கபடத்தனமானது. மீனவர் சங்கங்கள் இதில் தெளிவாக இருக்க வேண்டும். இந்தியாவையும் மீனவர்களின் பிரச்சினை தொடர்பில் கரிசனை கொள்ளத் தக்க வகையிலான இராஜதந்திர செயற்பாடுகளிலாவது ஈடுபட வேண்டும். சுப்பிரமணிய சுவாமியைச் சந்திப்பதும் கூடிக்கதைப்பதும் மட்டும் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுத் தராது. சுப்பிரமணிய சுவாமிகள் இந்த அரசின் நண்பர். குடும்ப நண்பர் என்று கூடச் சொல்லலாம். அப்படிப்பட்டவர் யார் சார்பாக நடந்து கொள்வார் என்ற குறைந்தபட்ச அறிதல் கூட இல்லாத நிலைதான் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிடம் இருக்கின்றது.

தமிழ்நாட்டு மீனவர்களையும் வடபகுதி மீனவர்களையும் மோதவிட்டு அரசியல் நடத்தும் உள்நோக்கம் இலங்கை இந்திய அரசுகளிடம் இருப்பதாகவே படுகின்றது. தமிழ்நாட்டுக்கு அண்மையாக இலங்கையின் வடபகுதி இருப்பது, இரு நாட்டுக்கும் அச்சுறுத்தலாக அமையும் என இரண்டு நாடுகளும் கருதுகின்றன போலும். ஆதலினால் இரண்டு தரப்புக்களின் உறவையும் சீர்குலைக்கும் நடவடிக்கையாகக்கூட இதனைக் கருதிக்கொள்ள இடமிருக்கின்றது. தமிழ்த்தேசியக் கட்சிகள் இந்த இடத்தில் இரண்டு நாடுகளினதும் தமிழ் மக்களின் ஒருமைப்பாட்டையும் குலைக்காத வகையிலான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டிய தேவை இருக்கின்றது. இந்தியாவின் மத்திய அரசுடன் அவர்கள் வேண்டுதல்களை விடுப்பதை விட தமிழ்நாட்டோடு பேச வேண்டிய தேவை இருக்கின்றது. இதனைத் தமிழ் கட்சிகள் எந்த அளவுக்கு சாத்தியப்படுத்தப் போகின்றன என்பது முக்கியமானது. இதையெல்லாம் விடுத்து மீனவர்களுக்காகப் போராடுகின்றோம் என்ற கண்துடைப்புப் போராட்டங்களால் எதையும் சாத்தியப்படுத்த முடியாது. இராஜதந்திரப் பொறிமுறையற்ற போராட்டங்கள் வெற்றியளிக்கும் என எதிர்பார்க்க முடியாது. ஜனநாயக ரீதியான போராட்டங்களின் மாற்று வடிவம் குறித்துச் சிந்திக்க வேண்டிய காலகட்டமிது. பழைய போராட்ட வடிவங்கள் இந்த நாட்டுக்கு இசைவாக்கமாகிவிட்டன. யாருமே காது கொடுத்து யாருடைய பிரச்சினைகளையும் கேட்கும் நிலையில் இல்லை. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குத் தூணாக இருக்கின்ற மீனவர்களும் விவசாயிகளும் அமைச்சர்களிடமும் அரசிடமும் இரந்து கேட்கும் நிலையை இந்த அரசு உருவாக்கியிருக்கின்றது.

இலங்கையைப் பொறுத்தவரையில் இனி வரும் காலங்கள் பொருளாதார ரீதியில் சரிவையே எதிர்கொள்ளத்தொடங்கும் என்பதற்கான அறிகுறிகள் தென்படத் தொடங்கியிருக்கின்றன. ஒரு விவசாய பொருளாதார நாடாக இருந்து கொண்டு அரிசியையும் ஏனைய தானியங்களையும் மரக்கறிகளையும் பிற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும் நிலை காலங்காலமாக வலுப்பெற்று வருகின்றது. இந்த நிலை தொடர்ந்தும் நீடிக்குமாக இருந்தால் அது இலங்கையின் சுய பொருளாதாரத்தில் நீண்டகாலப் பின்தங்கலை ஏற்படுத்தும் என்பது வெளிப்படை. இந்தப் பின்தங்கலை வெறும் சுற்றுலாத்துறையை விருத்தி செய்வதன் மூலம் இட்டு நிரப்ப முடியாது என்பதை ஆட்சியாளர்கள் புரிந்துகொள்ள வேண்டும். ■



சிக்மலிங்கம் றெஜினோல்ட்



# இப்படிச் செய்தால் விவசாயிகள் என்ன செய்வது?

அசேதன உரப்பாவனையைத் தவிர்த்து சேதனப் பசளையைப் பயன்படுத்த வேண்டும் என்று அரசாங்கம் எடுத்த திடீர் முடிவு விவசாயிகளை நிலைகுலையச் செய்துள்ளது. இது உற்பத்தியில் ஈடுபடும் விவசாயிகளின் நம்பிக்கையைத் தளர்வடையச் செய்ததுடன் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் ஆர்வத்தையும் குறைத்திருப்பதை அவதானிக்கலாம்.

இதனால் இலட்சக்கணக்கான விவசாயக் குடும்பங்களின் பொருளாதாரம் நிலைகுலைவதோடு சமூகப் பொருளாதாரமும் நாட்டின் பொருளாதாரமும் கீழிறங்கும் நிலையே ஏற்பட்டுள்ளது. அத்துடன் உணவு உற்பத்தியிலும் பாரிய பின்னடைவுண்டாகும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

அசேதனப் பசளைக்குப் பதிலாகச் சேதனப் பசளைப் பாவனையை (Natural fertilizer) யாரும் மறுப்பதற்கில்லை. இன்று உலகம் முழுவதும் இயற்கைப் பசளைப் பாவனையே வலியுறுத்தப்படுகிறது. அது அவசியமானதும் கூட. கூடவே இயற்கை உணவுக்கு (organic food) திரும்ப வேண்டும் என்ற கோரிக்கை பலமாகியுள்ளது. அதாவது நோயற்ற வாழ்க்கைக்குத் திரும்ப வேண்டும் என்று. உலகளாகிய ஆய்வுகளின்படி அநேகமான நோய்களுக்குக் காரணமும் ஆயுள்குறைவுக்குக் காரணமும் உணவு முறையில் உள்ள குறைபாடு என்று கண்டறியப்பட்டுள்ளது.

இதனால் ஒவ்வொரு நாடும் தமது மக்களைப் பாதுகாப்பதற்கு இயற்கை உணவை வலியுறுத்துகின்றன. இயற்கை உணவில் முக்கியமானது இயற்கை முறையிலான உணவுற்பத்தியாகும். இதனால்தான் இயற்கைப் பசளைப் பாவனை வலியுறுத்தப்படுகிறது.

இலங்கையும் தன்னுடைய குடிமக்களைப் பாதுகாக்கும் கரிசனையைக் கொண்டிருப்பது வரவேற்க வேண்டியதே. ஆனால் அதனைச் செய்வதற்கான நடைமுறைகள் கவனிக்கப்பட வேண்டியவை. நீண்ட காலமாக செயற்கை உரப்பாவனையில் மேற்கொள்ளப்பட்ட பயிர்ச்செய்கையை (உணவுப் பொருள் உற்பத்தியை) அதிரடியாக ஒரே நாளிலோ ஒரே போகத்திலோ மாற்றி விட முடியாது. அது எதிர்விளைவுகளையே உண்டாக்கும். அவ்வாறான ஒரு நிலையே தற்போது காணப்படுகிறது.

இயற்கைப் பசளையை உடனடியாக உருவாக்கி விட முடியாது. அதற்கான கால அவகாசம் வேண்டும். அந்தக் கால அவகாசத்தை வழங்கி, இயற்கைப் பசளையைத் தயாரிக்கும் முறைகளை விரிவான முறையில் அறிமுகப்படுத்த வேண்டும். ஏனெனில் இயற்கைப் பசளைப் பாவனையிலிருந்து மக்களை விலக வைத்ததே அரசாங்கத்தின் கொள்கையே. முப்பது ஆண்டுகளுக்கு முன்பிருந்தே செயற்கை உரப்பாவனைக்குத் தாராள இடமளித்து, விவசாயிகளையும் விவசாயத்துறையையும் பழக்கி விட்டு இப்பொழுது அதிரடியாகத் திடீரென மாற்று முடிவை அறிவித்தால் திணறல் தானே ஏற்படும். இதைப் புரிந்து கொள்வதொன்றும் சிரமமில்லை.

ஆகவேதான் இயற்கைப் பசளையை உற்பத்தி செய்யவும் அதைப் பயன்படுத்துவதற்கும் குறைந்தது ஒரு ஆண்டாவது தமக்கு வேண்டும் என்று விவசாயிகள் கூறுகின்றனர். அதுவரையில் வரையறுக்கப்பட்ட அளவிலான உரப்பாவனைக்கான சூழலைப் பேண வேண்டும். அது அவர்கள் தங்களைத் தயார்ப்படுத்திக் கொள்வதற்கானதாகும்.

> **“விவசாயமானது மண்ணையும் மழையையும் நம்பிச் செய்யப்படும் தொழிலாகும். மண்ணை வளப்படுத்துவது என்பது மண்ணுக்கு உணவூட்டுதலே. மண் என்பது தாயைப் போல கருணையுள்ளது. அது நமக்குத் தேவையானதைத் தரக் கூடிய ஆற்றலும் அன்பும் நிரம்பியது. மண் என்பது பிள்ளையைப் போன்றது. அதற்கு நாம் முறையாக நல்லுணவூட்டினால் அதே ஆற்றலுடன் நமக்கு நல் விளைவுகளைத் தரவல்லது.”**

ஏனெனில் விவசாயமானது மண்ணையும் மழையையும் நம்பிச் செய்யப்படும் தொழிலாகும். மண்ணை வளப்படுத்துவது என்பது மண்ணுக்கு உணவூட்டுதலே. மண் என்பது தாயைப் போல கருணையுள்ளது. அது நமக்குத் தேவையானதைத் தரக் கூடிய ஆற்றலும் அன்பும் நிரம்பியது. மண் என்பது பிள்ளையைப் போன்றது. அதற்கு நாம் முறையாக நல்லுணவூட்டினால் அதே ஆற்றலுடன் நமக்கு நல் விளைவுகளைத் தரவல்லது. என்பதால் மண்ணுக்கு நாம் உரமூட்டுதலுக்குப் பதிலாக உணவூட்ட வேண்டும். அந்த உணவு இயற்கையாக இருப்பது நல்லதே. ஆனால் அதற்கொரு தயார்க்காலம் வேண்டும்.

ஆகவேதான் நடைமுறைச் சாத்தியமான வகையில் படிப்படியாக சேதனப்பசளைப் பாவனையை ஊக்கப்படுத்தும் பொறிமுறையே பொருத்தமானது என்று கூறப்படுகிறது. அதுவே நடைமுறைச் சாத்தியமான வழிமுறையாகும். இல்லையெனில் நிச்சயமாக உணவுற்பத்தியில் வீழ்ச்சி ஏற்படும். பின்னர் அதை ஈடுசெய்வதற்கு வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யவேண்டிய நிலையே ஏற்படும். இது அரசாங்கத்தின் எதிர்பார்ப்புக்கு எதிர்மறையான விளைவையே உண்டாக்கும். அதாவது இது எமது மக்களுக்கும் நாட்டுக்கும் பாரிய பின்னடைவை உருவாக்கும். எமது நாடும் மக்களும் பெரும் பொருளாதார நெருக்கடிக்குள்ளாகியிருக்கும் சூழலில் இது இரட்டை நெருக்கடியை உண்டாக்கும்.

இது பெரும்போகச் செய்கைக் காலமாகும். இதன் போதே மூன்று மடங்கினர் விவசாயச் செய்கையில் ஈடுபடுகின்றனர். இந்தச் செய்கையில் பாதிப்பும் வீழ்ச்சியும் ஏற்படுமானால் அவர்கள் மீள முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டு விடுவர். பிறகு அதிலிருந்து விவசாயிகளால் உடனடியாக மீள முடியாது. பின்னர் அவர்களுக்கு நிவாரணமளிக்கும் நிலையே ஏற்படும்.

எமது நாட்டில் இன்று விவசாயச் செய்கையிலேயே அதிகமானோர் ஈடுபடுகின்றனர். இலங்கையே ஒரு விவசாயப் பொருளாதார நாடுதான். ஆனால் இதை மறுதலிக்கும் வகையில் விவசாயத்துறைக்குப் பதிலாக சுற்றுலாத்துறை போன்றவற்றை விரிவாக்குவதற்கான கரிசனைகளே கடந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்டன. இதனால் மலையகத்தில் தேயிலை உற்பத்தி கூடப் பெரும் வீழ்ச்சியைக் கண்டது. மட்டுமல்ல பதிலாக வேறு பெரிய தொழிற்துறைகளும் பெரிய அளவில் வளர்ச்சியடையவில்லை. அதிலும் வடக்குக் கிழக்கில் ஏற்பட்ட போரினால் பிற தொழில்துறைகளும் உற்பத்திக் கட்டமைப்புகளும் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளன. அதை மீளமைக்கும் நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.


முப்பது ஆண்டுகளுக்கு முன்பு யாழ்ப்பாணக் குடாநாட்டில் மட்டும் நூறு வரையான உற்பத்தி நிறுவனங்கள் இயங்கின. மில்க்வைற், அமுதன், லாலா போன்ற சவர்க்கார உற்பத்தி, ஆணித் தொழிற்சாலை, கண்ணாடித் தொழிற்சாலை, கைத்தறி மற்றும் மின்தறி ஆலைகள், அலுமினியத் தொழிற்சாலைகள், வாளி உற்பத்தி எனப் பல உற்பத்தி மையங்கள் இயங்கின. இவற்றில் பல நூற்றுக்கணக்கானோர் வேலை செய்தனர். இதை விட காங்கேசன் சீமெந்துக் கூட்டுத்தாபனம், ஆனையிறவு உப்புக் கூட்டுத்தாபனம், பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம் போன்றவற்றில் ஆயிரக் கணக்கானோர் பணிபுரிந்தனர். இன்று இவற்றில் ஒன்று கூட இல்லை. அப்படியென்றால் தொழிலுக்கு, வருவாய்க்கு, வாழ்வாதாரத்துக்கு எங்கே போவது? என்ன செய்வது?

இதனால் விவசாயத்தையே பெரும்பாலோனோர் தமது ஒரே வாழ்வாதாரமாகக் கொண்டிருக்கின்றனர். அண்மைய ஆண்டுகளில் சட்ட விரோதமாகவும் அத்துமீறலாகவும் மக்கள் காடுகளை அழித்து விவசாயச் செய்கையில் ஈடுபடுவதற்கான காரணங்களில் ஒன்று பிற தொழிற்துறைகள் இல்லாமையே.

எனவே பெரும்பாலானோர் நீர்ப்பாசன வாய்ப்பில்லாத நிலங்களில் கூட மழையை நம்பி மானாவாரிச் செய்கையில் ஈடுபடுகின்றனர். அவர்களுடைய தொழிலும் வருவாயும் வாழ்வும் இந்தப் பெரும்போகச் செய்கையிலேயே தங்கியிருப்பதால் அரசாங்கமானது நடைமுறை யதார்த்தை உணர்ந்து வரையறுக்கப்பட்ட அளவிலேனும் அசேதனப்பசளைக்கு இடமளித்து கட்டம் கட்டமாக சேதனப் பசளைப் பாவனைக்குச் செல்லும் வகையைச் செய்ய வேண்டும். அதுவே விவசாயிகளையும் உற்பத்தியையும் நாட்டின் பொருளாதாரத்தையும் பாதுகாக்கும். ஆகவே அரசாங்கம் தன்னுடைய தீர்மானத்தைப் பரிசீலனை செய்து விவசாயிகளையும் விவசாயத்துறையையும் வளப்படுத்த வேண்டும்.



மாற்றம் என்பது படிப்படியாக நிகழ்வதும் நிகழ்த்தப்படுவதுமாகும். திடீரெனத் திருப்பினால் அல்லது வளைத்தால் அது முறிவிலும் சிதைவிலுமே போய் முடியும். ■



புதுப்புனல் 14

# புதிதாய் வாசிப்போம் புதியதை யோசிப்போம்

## -வாசிப்பு மாத சிறப்பு


புலோலியூர் வேல்நந்தன்

வாசிப்பு மாதத்தைக் கடந்து கொண்டிருக்கின்றோம் அந்த வகையில் இவ் வாரம் தீம்புனலிலும் புதிதாய் வாசிப்போம் புதியதை யோசிப்போம் என்பதற்கு அமைய புதுப்புனலில் புதிய சில இலக்கியப் பிரதிகள் குறித்த பகிர்வை வழங்கலாம் என எண்ணுகிறேன். வாசிப்புப் பண்பாட்டைக் கட்டியெழுப்பும் பல முனைப்பு மிக்க செயற்பாடுகள் இந்த நெருக்கடியான கால கட்டத்திலும் முன்னெடுக்கப்படுவது கண்டு மனம் மகிழ்கிறது. அந்த மகிழ்வோடு இவ்வாரப் புதுப்புனலில் முதலில் அறிமுகம் காண்பது கொரோனா நெருக்கடி நிலை காரணமாக இன்னமும் வெளியீடு காணாமல் இருக்கின்ற வழக்கறிஞர் செல்லத்தம்பி சிறீக்கந்தராசா அவர்களால் இயற்றி எழுதப்பட்டுள்ள விறுவிறுப்பான 60 கவிதைகள் சிறுவருக்கான சிறுசிறு கவிதைகள் என்ற நூலாகும். கரிகணன் பதிப்பகத்தின் சிறந்த அச்சமைப்பு, வடிவமைப்பிலே வெளிவந்துள்ள இந்நூல் நூலாசிரியரது மூன்றாவது கவிதை நூல்என்பது குறிப்பிடத்தக்கது. பன்மொழிப் புலமை மிக்க நூலாசிரியர் அவர். சட்டமும் தமிழும், இனிக்காதா இலக்கணம் உட்பட பல நூல்களை முன்னரும் தந்தவர் தற்போது லண்டனில் வசிக்கிறார்.

அவர் தன்னுரையில் பல்வேறுபட்ட எடுத்துக் (-)காட்டுக்கள் வழி கவிதை ஒன்றுக்கான அடிப்படைகளைத் தெளிவாக விளக்கியுள்ளார். தன்னிடமும் ஆங்கில இலக்கியமும் இலக்கணமும் கற்க வந்த அஜந்தனுக்கு விளக்குவதற்காக எழுதியவையே இந்நூற் கவிதைகள் என்கிறார். இக் கவிநூலுக்கான ஒரு பருந்துப் பார்வையை மூத்த தமிழறிஞரும் பண்டிதருமான உமாமகேசுவரன் அவர்கள் தந்துள்ளார். அவர் தம் உரையில் வடமொழி நூல் வகைப்பாட்டின் வழி தேங்காய்ரக, கரும்புரக, வாழைப்பழரக என வகுத்து இந்நூல் தரும் சுவையை விளக்கியுள்ளதுடன் புலம்பெயர்ந்து இங்கிலாந்தில் வாழும் தமிழர் தம் மொழி, பண்பாடு, அழியாமல் காப்பதே இந்நூல் முயற்சியின் நோக்கம் என்கிறார். நூலைப் படித்து முடித்த போது அது சரியெனவே எண்ணத் தோன்றுகிறது. இந் நூல் அடிப்படையில் ஒரு சிறுவர் இலக்கியம் சார்ந்த நூலாகவே அமைகிறது. இங்குள்ள அறுபது கவிதைகளும் அவற்றின் பொருண்மை, மொழி, உத்தி முறை போன்ற பல விடயங்களால் சிறப்புடையனவாகவே விளங்குகின்றன. பதச் சோறாய் ஒரு சில கவிதைகளின் ஒரு சில வரிகளை மட்டும் எடுத்துக் காட்டலாம் என எண்ணுகிறேன்.

"ஆண்டுப் பிறப்புக்காய் இன்று விடுதலை
ஆடுவம் பாடுவம் அன்பர்களே..."

என்ற கவிதை ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை என்ற சோமசுந்தரப் புலவரின் கவிதையை வடிவ அடிப்படையில் ஞாபகமூட்டினாலும், புலம்பெயர் சூழல் ஆண்டுப் பிறப்புக்கு விடுதலை விடும் நிலை மாற்றத்தைச் சொல்வது சிறப்புக்குரியது. அது போல "தூறுது பார் மழை தூறுது பார்" என்ற கவிதையிலே "ஆடுது பார் மரம் ஆடுவது பார் எனத் தொடங்கிக் கூடுது பார், ஓடுதுபார், பாடுது பார்" என எதுகை ஓசையை அடுக்குச் சொல்லியிருப்பது சிறப்பு. இக் கவிதை கூட "ஏறுது பார் கொடி ஏறுது பார்" என்ற ஒரு காலத்தின் எங்கள் பாடலை ஞாபகமூட்டுவது தவிர்க்க முடியாததாகிறது. மழை, வெள்ளி, ஆதவன், என இயற்கையின் அழகியலாய் பல கவிதைகள் அரண் செய்ய பின்னர், காகம், முயல், மரங்கொத்தி என பறவைகளும் விலங்குகளும் கவிப்பொருளாகி சிறப்புப் பெறுகின்றன. அதே போல ஆங்கில மழலைப் பாடல்களைத் தழுவியும் பல பாடல்கள் தமிழில் தரப்பட்டுள்ளமையும் புலம்பெயர் சூழலில் தலைமுறை தாண்டித் தமிழை வளர்க்க பேருதவியாய் அமைகிறது. அந்த வகையில் "Rain Rain Go Away" என்ற பாடலைத் தழுவி "மழையே மழையே போய் விடு நீ மறுத்தோர் நாளில் வந்திடு நீ" என்ற பாடலும் "Jack And Jill went up The Hill" என்ற பாடலைத் தழுவி "யக்கும் சில்லும் மலை மேலே தண்ணீர் மொள்ளப் போனாரே" என்ற பாடலை இயற்றியுள்ளார். இதே வகை கொண்டதாகவே "லண்டன் பாலம் இடிகிறதே.." என்ற பாடலும் அமைகிறது.




இதேபோல ஐயன்னா ஒரு கூட்டெழுத்து, இவை தாம் தமிழின் நெடுங்கணக்கு, போன்ற கவிதைகளில் தமிழின் அடிப்படை இலக்கணச் சிந்தனைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளமையும் சிறப்புக்குரியது. அலை பேசியா? தொலைபேசியா? மணிக்கூடா? மணிக் கோடியா? என்ற சொல் ஆராய்ச்சிப் பாடல்கள் தமிழ் இன உணர்வை ஊட்டும் கவிதைகள் பின்னர் இறுதியாக உதிரிக் கவிதைகள் எனப் பல்வேறுபட்ட விறுவிறுப்பான சந்த ஓசைச் சிறப்பு மிக்க சிறுவர் கவிதைகள், சிறு சிறு கவிதைகள் இந் நூலை விறுவிறுப்போடு வாசிக்கத் தூண்டுகின்றன. புலம் பெயர் நாடுகளில் மூன்றாம் தலைமுறை மத்தியில் வளர்த்தெடுக்கப்பட வேண்டிய தமிழ்க் கல்விப் பாரம்பரியத்துக்கான ஒரு உசாத்துணை நூலாகக் கொள்ளத்தக்க சிறப்பு இந் நூலுக்கு உண்டு. இதனை இவ் வாசிப்பு மாதந்தனில் புதுப்புனலில் அறிமுகம் செய்வதையிட்டு அக மகிழ்கிறோம்.

புதுப்புனலில் அடுத்து அறிமுகம் காண்பது மாதகல் வாசி காசி. ஜீவலிங்கம் என்ற இயற்பெயரோடு 'யாழ்பாவாணன்' என்ற இலக்கியப் புனைபெயர் வழி நன்கு அறியப்பட்ட 'யாழ்பாவாணன் கவிதைகள்' என்ற கவிதைத் தொகுப்பாகும். இலத்திரனியல் கணணி, இணைய வெளிகளின் வழி அதிகம் அறியப்பட்ட ஒரு இலக்கியச் செயற்பாட்டாளராக யாழ் இலக்கியக் குவியத்தின் முக்கிய உறுப்பினராக இவர் விளங்குகிறார், யாழ்பாவாணன் கலைப்பணி மன்றம் என்ற அமைப்பின் ஊடாக இணைய வழியிலும் பல்வேறுபட்ட கவிதை சார் கலை இலக்கியச் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறார். தமிழ் அறிதலியம் அமைப்பின் உறுப்பினர்களில் ஒருவராகவும் விளங்குகிறார். நீண்ட காலமாய் கவிதைத் துறையில் இயங்கும் இவரது கன்னிக் கவிதைப் படைப்பாகவே இத் தொகுப்பு அமைந்துள்ளது.

இதனை இவரது இலக்கிய நண்பரான இனிய நந்தவனம் சஞ்சிகை ஆசிரியர் சந்திரசேகரன் அவர்கள் அழகிய வடிவமைப்பில் அச்சமைத்து வழங்கியுள்ளதுடன் கவிஞர் குறித்த பின் அட்டைக் குறிப்பையும் வழங்கியுள்ளார். வழமையான கவிதைத் தொகுதி கவிதைக்கான பயில் களமாகவும் அமைந்து வித்தியாசமான வாசிப்பு அனுபவத்தை தருகிறது. பெருமளவிற்கு மரபுக் கவிதைக்கான பயில்களமாகவே இத் தொகுப்பு அமைந்துள்ளது. கவிதையில் இன்னமும் தான், தாண்ட வேண்டிய படிகள் பல உண்டு என்பதை ஏற்றுக் கொள்ளும் இவர் இணைய வழியில் தமிழ் அறிஞர்களைக் கொண்டு மரபுக் கவிதைப்பட்டறைகளையும் நடத்தி வருகி றார். பல விகற்ப இன்னிசை வெண்பாவில் விநாயகர் காப்போடு கவிதைத் தொகுதி ஆரம்பிக்கிறது. பின்னர் ஒரு விகற்ப இரு விகற்ப குறள் வெண்பாக்கள், நேரிசை, இணைக்குறள், ஆசிரியப்பாக்கள் என மரபுக் கவிதையின் வடிவங்களை உள்வாங்கி அவற்றைக் காலத்துக்கு ஏற்ற புதிய பொருண் மையும் எளிமையும் கொண்டனவாய் அமைத்துள்ளார்.

"என்றும் பகலவன் வெண்ணிலா வானிலே / இன்றும் பிதா மாதா போன்று"

(ஒரு விகற்ப குறள் வெண்பா)

" மாசியில் இரவில் மாதகல் கடல் முரல் / சம்பில் தொட்டுமே / வலித் தூண்டல் வரை / கரையில் காத்து நின்றுவேண்டி / வீட்டில பொரியல் பால் சொதி /சுவைக் கப் பிட்டுடன் சுடச்சுட விழுங்கவே"

(இணைக்குறள் ஆசிரியப்பா)

இவற்றோடு, குறும்பாக்கள், துளிப்பாக்கள் (ஹைக்கூ) தந்துள்ளார். உரை நடையா, பா நடையா, போன்ற கவிதை குறித்த பல ஆய்வுகளையும் இத் தொகுதி கொண்டுள்ளது. மொத்தத்தில் ஒரு கவிதைத் தொகுதி என்பதை விட கவிதைக்கான பயில்கள ஆற்றுப்படைத் தொகுதியாக அமைந்து தமிழ்க் கவிதையிள் மரபு முதல் நவீனம் வரை பல்வேறுபட்ட கவிதை வடிவ அனுபவங்களை தரும் தொகுதியாக அமைந்து இத் தொகுதி சிறப்புப் பெறுகிறது. கவிஞரின் ஊர்ப்பற்று, இனப்பற்று - மொழிப்பற்று என்பனவும் கூட பல கவிதைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. யாழ்பாவாணன் வெளியீட்டக வெளியீடாக வெளிவந்துள்ள இத் தொகுப்பை புதுப்புனலில் அறிமுகம் செய்வதில் மகிழ்வடைகிறோம். கவிதை மீதான அவரது தேடலுக்கு வாழ்த்துக்கள்.

மீண்டும் அடுத்த வாரம் இன்னும் சில பிரதிகளின் குறித்த அறிமுகத்தோடு சந்திப்போம். ■

---

# மூலிகை இரசாயனப் பகுப்பாய்வுகளும் கொரோனாப் பெருந்தொற்றில் உன்னத கற்ப மூலிகைகளும்

டாக்டர், வெற்றிவேல் சக்திவேல்
B.S.M.S, P.G.Dip Pub Adm, M.Sc



இன்றைய உலக அரங்கில் மருத்துவ முக்கியத்துவம் வாய்ந்த இயற்கை உற்பத்திப் பொருட்கள் (Organic natural products of medicinal significance) புதுமையான இயற்கைப் பொருட்களின் இரசாயனவியல் (Novel natural product chemistry) இயற்கைப் பொருட்களில் உள்ள இரசாயனவியல் சார்ந்த முன்னேற்றங்கள் (Advances in Natural Product Chemistry), நுண்ணாய்வு மூலம் புதிய உயிரியல் சார் இனங்காணல் (identifying novel biological probes), உயிர்ப்புள்ள இயற்கைப் பொருட்களைப் பிரித்தெடுக்கும் (Isolation of active natural products) ஆய்வுகள் புராதன அறிவின் (Ancient knowledge) அறிவியல் சார் ஆய்வுகள், மூலிகைகளில் காணப்படும் நுண்ணங்கிகளுக்கு எதிரான தாவர இரசாயனங்களை (Phyto Chemicals) ஆய்வு செய்து வெளிக் கொண்டு வருதல் (Exploratory action), உயிரியல் சார் உயிர்ப்புள்ள நனோ துகள்களாக்கிய நிலையில் ஆற்றல் வளமுள்ள (Bio active potential through Nanosizing) மூலிகை இரசாயனப் பொருட்கள் என்ற புதிய தளங்களில் வைரசுகளுக்கெதிரான ஆய்வுகள் முன்நோக்கி விஞ்ஞான ரீதியாக முதன்மைப்படுத்தப்படுகின்றன. இந்த நிலையில் மூலிகை தொடர்பான சிந்தனைகளுக்கு வலுவூட்டுவது அவசியமானதாக அமைகின்றது.

நோயில்லா நெறி (Prevention of diseases) சித்த மருத்துவத்தில் முதன்மையான இயல்பாக (Salient feature of siddha medicine) காணப்படுகின்றது. சித்த மருத்துவமானது புராதன மருத்துவ நடைமுறைகளையும் (Ancient medical practices), ஆத்மிக ஒழுக்கங்களூடான நெறி (Spiritual discipline), இயற்கை வாழ்வியல் நெறிமுறைகளுக்கு அமைய வாழுதல் (Living according to the laws of nature) போன்ற அடிப்படைகளைத் தன்னகத்தே கொண்டு சிறப்பான மருத்துவமாக மிளிர்கின்றது, ஆரம்ப கால தமிழ் எழுத்துக்களில் (In the earliest Tamil writings) தமிழர்தம் மருத்துவ முறைகள் குறிப்பிடப்பட்டுள்ளதைக் காணலாம். திருக்குறளில் (Sacred Couplets) தமிழ் மருத்துவ சிந்தனைகள் ஆராயப்பட்டுள்ளதைக் காணலாம்.

சித்தர்கள் இறைச்சக்தி மிகுந்த சொற்களால் (Sacred words), சொற்களின் வலிமை மிகுந்த ஆற்றலால் (by the power of words) அவர்களது திரு உடலில் இருந்து வெளிப்படும் அதிர்வலைகளால் இறைசக்தி (Divine power) மிகுந்த சொற்களால் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரித்து நோயில்லா நெறியை உளரீதியான அணுகுமுறையைக் (Psychological approach) காணக்கூடியதாக உள்ளது. சித்தர்கள் அதி உயர் நோய் தீர்கும் முறைகளைப் (Supreme curatives) பயன்படுத்தியுள்ளார்கள்.

நெல்லிக் கனியை அதியமான் ஔவைக்கு வழங்கியது சிறப்பாகப் பேசப்படுகின்றது. நெல்லிக் கனியில் கரு நெல்லி சிறப்பானதாக சித்தமருத்துவத்தில் கூறப்பட்டுள்ளது. நெல்லிக் கனியில் விற்றமின் சி இருப்பதால் நோய் எதிர்ப்பு சக்தியை (Immune modulation) அதிகரிக்கும் பற்றீரியா, வைரசுகள் எமதுஉடலைத் தாக்காது காக்கும் வன்மை உடையது. மேலும் ஒட்சினெதிரி (Antioxidant) ஆக செயற்படுகின்றது. நெல்லிக்காய் லேகியம் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரித்து நுண் கிருமிகள் எமது உடலைத் தாக்காமல் பாதுகாப்பதுடன் கரு நெல்லியானது மரணத்தை வெல்லும் ஆற்றல் மிக்கதுடன் இளமையை ஏற்படுத்தும் வன்மை உடைய மூளை வன்மைப்படுத்தும் (Pro-cognitive and brain boosters)

"கவினிய நெல்லி அமிழ்து விளை தீங்கனி"
(சிறுபாணாற்றுப் படை /99-100)

"புன் காழ் நெல்லிப் பைங்காய் தின்றவர்" (அக நானூறு 54)

"சிறியிலை நெல்லித் தீங்கனி " (புறநானூறு 91)

"சுவைக் காய் நெல்லி"
(நற்றினை 271)

"நெல்லி அம்புளி மாந்தி" (குறுந்தொகை 201)

என இலக்கியங்களில் விதந்து பேசப்படும் நெல்லிக்காயை ஒரு மண்டலம் சாப்பிடலாம் Phy llanthus emblica அல்லது Emblica officianatio என்ற தாவரவியல் விஞ்ஞானப் பெயருடைய இத்தாவரம் Indian goose berry என்ற ஆங்கிலப் பெயரையும் அம்லா என்றும் அழைக்கப்படும் இத்தாவரம் அதி உன்னத பெறுமதி (Superior Value) உடையதாக காணப்படுகின்றது. அருட்கண் கொண்டு அருட்பார்வையுடைய சித்தர்கள் தமது உயிர் வளர்க்கும் உடல் வளர்க்கும் உபாயத்தைக் கூறுகின்றனர். மருந்து வன்மை (Ethno medical and pharmacological potentials) உடையது. மேலும் மருத்துவ போசனை ஊட்டச்சத்து பயனுடைய (Medicinal and nutritional purposes) அதனுடைய மூலக்கூற்றுச் செயற்பாடுகள் (Molecular Mechanisms) பற்றி மூலிகை மருத்துவ விஞ்ஞானிகள் (Herbal Scientist) ஆராய்கின்றனர்.

மூலிகை இரசாயன (Phyto chemical) பகுப்பாய்வில் Poly Phenols, (Gallic acid, ellagic acid), பல்வேறு தனின்கள், அமினோ அமிலங்கள், கனியுப்புக்கள், விற்றமின்கள் பிளேவினோயிட்டுகள் (rutin and quercetin) போன்றன காணப்படுகின்றன. நெல்லிக்காய் ஆனது என்பு வன்மை குறைவு (Osteo porosis), புற்று நோய் போன்றவற்றிற்கும் பயன்படும்.

யாழ் பல்கலைக்கழக சித்தமருத்துவப் பிரிவு தமது முதுதத்துவமாணி (M.Phil), கலாநிதி (Ph.D) ஆய்வுகளில் நோயாளர் சார் ஆய்வுகளிலும் (Clinical Research) பார்க்க முதலில் சித்த மருத்துவ நூல்கள், ஈழத்து சித்த மருத்துவ நூல்களில் உள்ள செழும் மருத்துவ புதையல்கள் தொடர்பான இலக்கிய ஆய்வு (Literary research) செய்யப்பட்டு ஆணப்படுத்தப்பட வேண்டும். ஆங்கில மருத்துவ மாணவர்களுக்கு உடலமைப்பியல் (Anatomy) இரண்டு வருடங்கள் கற்பிப்பது போல சித்த மருத்துவ மாணவர்களுக்கும் மேலைத்தேய பாடத் திட்டத்தை கற்பிப்பது பயனற்றது. தமிழ் மருத்துவ செழும் புதையல்களான சித்த மருத்துவ நூல்களை ஆழமாக கற்பிப்பது அவசியம் தேவைப்படுகின்றது.

(வளரும்.)

மூலிகை சுக வாழ்வு நிறுவனம்
கிளவ் வீதி, தெல்லிப்பளை

# சமூக கூட்டு மனநிலை பெண்களை அரசியலிலிருந்து புறந்தள்ளுகிறது




**சந்திரமதி போல்ராஜ்**
நான்காம் வருடம், ஊடகக் கற்கைகள் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

“மங்கையராய் பிறப்பதற்கே-
நல்ல மாதவம் செய்திட
வேண்டும் அம்மா”

என்ற கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் பாடல் பெண்களின் பிறப்பினைப் பெருமையாகவே இச் சமூகத்திற்கு எடுத்துக்காட்டுகிறது.

இலங்கையின் மொத்த சனத்தொகையில் ஆண்களை விட பெண்கள் ஒருபடி அதிகமாகக் காணப்படுகின்றனர். மேலும் தற்காலத்தில் பெண்கள் எல்லாத் துறையிலும் தடம் பதித்துத் தங்களது இருப்பினையும் நிலைநாட்டிக் கொண்டிருக்கின்றனர். பல சவால்களைத் தாண்டியும், தொழில் துறையிலும்,உயர்கல்விகளிலும் அதிக சதவீதம் இடம்பிடித்துள்ள பெண்கள் அவர்களின் வகிபங்கை அரசியலில் காட்டிக்கொள்வதற்கு முன்வருவது மிகச் சொற்பமான அளவிலேயே உள்ளது.

சட்டங்கள் செய்வதிலும், பட்டங்கள் ஆள்வதிலும் கொண்டிருக்கும் முனைப்பு அரசியலில் கொண்டிருப்பதில்லை. இதற்கான காரணங்கள் பல உண்டு. அதாவது தயக்கம், ஆர்வமின்மை, விமர்சனங்கள், விழிப்புணர்வின்மை, குடும்பப் பின்னணி போன்றன.

நமது நாட்டின் மொத்த சனத்தொகையில் 52 வீதமான வாக்காளர்கள் பெண்களாக இருந்த போதிலும் பாராளுமன்றத்தில் 10 வீதத்தையும் விட குறைவான அளவிலேயே பெண்களின் பங்கு இருக்கின்றது.

பெண் குரல்கள் முறையான அரசியலில் இருந்து விலகி இருக்கின்றன. நாடாளுமன்றத்திற்கு இடையேயான 193 சதவீத நாடுகளில் 182 ஆவது இடத்தில் இலங்கை உள்ளது.

இது உலகளாவிய தரவுத்தளமாகும். இது அவர்களின் தேசிய நாடாளுமன்றத்தில் பெண்களின் சதவீத பங்கால் நாடுகளை வரிசைப் படுத்துகிறது.

இவ்வாறான பெரிய ஏற்றத்தாழ்வுகளை நிவர்த்தி செய்வதற்காக முந்தைய இலங்கை அரசாங்கம் 2016 ஆம் ஆண்டில் பெண்கள் உள்ளூர் அரசாங்கத்திற்குள் நுழைய 25 சதவீதக் கட்டாய ஒதுக்கீட்டை அறிமுகப்படுத்தியது. 2016 திருத்தத்திற்கு முன்னர் உள்ளூர்ப் பிரதிநிதித்துவத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம் 2 சதவீதமாக இருந்தது.

இதேவேளை கடந்த பாராளுமன்றத்தேர்தலில் தமிழ், முஸ்லிம்கள் சார்பில் எந்த ஒரு பெண் வேட்பாளரும் வெற்றி பெறவில்லை என்பது இன்னும் துரதிஷ்டவசமானது.

இலங்கையில் முதன் முறையாக வாக்குரிமை வழங்கப்பட்ட போது பெண்களுக்கும் சேர்த்தே வழங்கப்பட்டது. அன்றே பெண்களுக்கு ஏன் வாக்குரிமை என்ற கேள்வியும் விமர்சனங்களும் எழத்தொடங்கியது. காலனித்துவ ஆட்சியில் அந்தத் தடைகளையும் மீறி பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.

மேலைத்தேய நாடுகளுடன் ஒப்பிடும்போது முதன் முதலில் இலங்கையிலேயே பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது. அத்துடன் உலகத்தில் முதலாவது பெண் பிரதமரை கொண்ட நாடு இலங்கை (ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க) மற்றும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட பெண் ஜனாதிபதியைக் கொண்டு (சந்திரிக்கா பண்டாரநாயக்கா) பெருமை சேர்த்த அந்தக் கால கட்டத்துடன் இன்றைய காலகட்டத்தில் இலங்கையில் பெண்கள் அரசியலில் பங்கு வகிப்பது அரிதாகவே உள்ளது.

இதனடிப்படையில் அரசியலில் பெண்களின் நிலை தொடர்பில் மலையகத்தின் பெண் விடுதலைச் சிந்தனை அமைப்பு செயலாளர் மோகனதர்சினி கருத்துத் தெரிவிக்கையில், அரசியலில் பெண்களின் நிலை சமூகத்தில் பெண்களின் நிலையிலிருந்தே தீர்மானிக்கப்படுகிறது. இன்றும் சமூகத்தில் நிலவக்கூடிய பால்நிலை சமத்துவமின்மையே பெண்களின் அரசியல் நுழைவிற்குப் பெரும் தடையாக உள்ளது.

பெண் என்பவள் நல்ல தாயாக மனைவியாக சகோதரியாக மட்டுமே வாழவேண்டும் என இச் சமூகம் அவர்களின் எல்லையை வரையறுக்கின்றது.

பெண்களுக்கு வீட்டைப் பராமரிப்பது, சமைப்பது மற்றும் குழந்தைகளை வளர்ப்பதைத் தவிர வேறு எதுவும் தெரியாது; தெரிந்துவிடக் கூடாது என்று ஓர் சமூக நிலைப்பாடு இன்றும் உள்ளது. இவ்வாறான கருத்துக்களை உடைத்து புதிய சமூக மாற்றத்திற்காகப் புதிய சிந்தனையுடன் அரசியலில் நுழையும் பெண்களும் உண்டு.

தமது சமூக, பண்பாடுகளைத் தாண்டி தமது உரிமைக்காகப் போராடும் பெண்களுக்குரிய முக்கியத்துவம் அரசியலில் வழங்கப்படுவதில்லை. ஒரு பெண் அரசியலில் ஈடுபடும் போது அதற்கான அங்கீகாரத்தை மக்களும் சமூகமும் குறித்த அரசியல் கட்சிகளுமே வழங்குவதில்லை.

உள்ளூராட்சித் தேர்தலில் பெண் பிரதிநிதிகளுக்கு 25 சதவீத ஒதுக்கீடு வழங்கப்பட்ட போதிலும் தனது கட்சிக்கான பெண் வேட்பாளர்களை உள்வாங்குவதில் அனைத்துக் கட்சிகளும் சிக்கலை எதிர்கொண்டது. காரணம் எந்தப் பெண் பிரதிநிதிகளும் அரசியலில் ஈடுபட ஆர்வம் காட்டவில்லை. இதற்கு பல காரணங்கள் உள்ளன.

அரசியலைப் பொறுத்தவரையில் ஓர் ஆண் சார்ந்த விமர்சனங்கள் அவருடைய அரசியல் செயல்பாடுகளை மையப்படுத்தியதாகவே பேசப்படுகின்றன. ஆனால் அரசியலில் ஈடுபடும் ஓர் பெண் சார்ந்த விமர்சனங்கள் அவருடைய குடும்பம், ஆடை, நடத்தை, கருத்துக்கள் என அவருடைய தனிப்பட்ட விடயங்களும் விமர்சிக்கப் படுகின்றன. இதனால் மன உளைச்சலுக்கு ஆளாகும் பெண்கள் அரசியலை விட்டு விலகிச் செல்லக் கூடிய நிலை உருவாகின்றது.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் பெண் வேட்பாளர்களாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கட்சிக்கு ஆதரவாக செயற்பட்ட அம்பிகா சற்குணநாதன், நளினி ரத்னராஜா போன்ற பெண் வேட்பாளர்களுக்கு கட்சியில் இடம் கொடுக்க வேண்டாம் என, குறித்த கட்சியின் வேட்பாளர்களே கருத்து தெரிவித்தனர். அது மட்டுமன்றி குறித்த பெண் வேட்பாளர்களின் தனிப்பட்ட விடயங்கள் மற்றும் நடத்தை தொடர்பாகவும் பிரபலமான ஊடகங்களும் தவறான கருத்துக் களைப் பரப்பின.

இவற்றிற்கு அப்பால் ஒரு கட்சியில் உறுப்பினராகச் செயற்படக்கூடிய பெண்கள் ஒரு விடயம் சார்ந்த தமது சொந்தக் கருத்துக்களை அல்லது எதிரான கருத்துக்களைத் தெரிவிக்க முடியாத நிலையே உள்ளது. மேலும் கட்சி சார்ந்து மட்டுமே செயற்பட முடியும். முடிவு எடுப்பதற்கான எவ்வித அதிகாரமும் பெண்களுக்கு வழங்கப்படாத ஜனநாயகத் தன்மை அற்ற ஆணாதிக்க நிலையிலேயே அரசியலில் பெண்களின் நிலை உள்ளது.

சமூகத்தில் நிலவும் பால்நிலை சமத்துவம் இன்மையை உடைத்து சிந்தனைகளை மாற்றி, பெண்கள் சுதந்திரமாக செயல்படக் கூடிய நிலையை உருவாக்குவதே அரசியலில் பெண்கள் நுழைவிற்கான அடித்தளமாக அமையும் என கருத்துத் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் சனத்தொகையில் 52 வீதத்துக்கும் அதிகமானோர் பெண்கள். அதுமட்டுமன்றி இலங்கையின் வாக்காளர்களில் 56 வீதத்தினர் பெண்கள். பல்கலைக்கழக மாணவர்களில் 60 வீதமானோர் பெண்கள். உள்ளூராட்சி சேவையில் உள்ள அரசாங்க ஊழியர்களில் 59.7 வீதத்தினர் பெண்கள். நாட்டுக்குப் பிரதான பெரும் வருமானத்தை ஈட்டித் தரும் பெரும் தொழிற்படையாகப் பெண்கள் இருக்கிறார்கள். மத்திய கிழக்குப் பணிப்பெண்களாகவும், தோட்டத்துறைப் பெண்களாகவும், சுதந்திர வர்த்தக வலய பெண்களாகவும் இன்னும் பற்பல துறைகளின் மூலம் தங்களை அதிகாரம் செலுத்தும் ஆண்களுக்காகவும் சேர்த்து உழைத்துத் தருபவர்கள் பெண்கள். எனினும் இலங்கையில் அரசியலைப் பொறுத்தவரையில் பெண்களை அவர்களின் ஆளுமைகளை புறக் கணிக்கும் மனோபாவமே இன்னும் தொடர்கின்றது.

அரசியல் என்றால் அது ஆண்களுக்கு மட்டும்தான் என்ற மனநிலை இன்று மக்கள் மத்தியில் அதுவும் பெண்கள் மத்தியில் இருப்பதும் பெண்கள் தொடர்பான சமூக மட்ட பிற்போக்குத்தனமான பார்வைகள், விமர்சனங்களும், ஊழல் மோசடிப் பேர்வழிகள் நிறைந்ததுமான அரசியலுமே பெண்கள் அரசியலில் சாதிப்பதற்குப் பெரும் தடைக்கல்லாகவுள்ளன. ■

**“கட்சியில் உறுப்பினராக செயற்படக் கூடிய பெண்கள் ஒரு விடயம் சார்ந்த தமது சொந்தக் கருத்துக்களை அல்லது எதிரான கருத்துக்களை தெரிவிக்க முடியாத நிலையே உள்ளது. மேலும் கட்சி சார்ந்து மட்டுமே செயற்பட முடியும். முடிவு எடுப்பதற்கான எவ்வித அதிகாரமும் பெண்களுக்கு வழங்கப்படாத ஜனநாயகத்தன்மை அற்ற ஆணாதிக்க நிலையிலேயே அரசியலில் பெண்களின் நிலை உள்ளது.”**



# என்ன உலகமடா பரமானந்தா? 26

● தமிழ்க்கவி

மனிசர் படுகிற பாட்டில. உனக்கு இதுக்கெல்லாம் விளக்கம் தேவைப்படுது. ங... என்னடா கடன் கடன் எண்ணுறாய் கடன் வாங்கிறண்டாப்போல அது அவ்வளவு லேசான காரியமோ... வங்கியில கடன் வாங்கினவனுக்குத் தெரியும் அதெவ்வளவு கயிட்டடெண்டு.

சும்மாவேடா பிணைகாறரத் தேடுற அளவில கிழிஞ்சுபோம் கண்டியோ... நீ சொல்லுறாய் உந்த மீள் குடியேற்றம் நடந்த காலத்தை கடன் தருகினயாம் எண்டு எழுதிக்குடுத்தன். என்ன கேட்டான் தெரியுமோ முதல் வங்கியில ஐநூறு ரூவாக்கட்டி புத்தகம் எடெண்டான். எடுத்ததுதான். ஆயிரம்பேர் எடுத்திருப்பாங்கள் கடன் ஆருக்கெண்டு கேக்கேல்ல. முறையா ஆவணமுள்ள காணி அசையாச் சொத்து இருக்கோணுமாம். அப்பிடி இல்ல ஆயிரத்துக்கு மேல மாயச்சம்பளம் எடுக்கிற ரெண்டு பேர் பிணை வைக்கோணுமாம். அ... அது எங்கட சீமாட்டி சிறிமா இருந்த காலம் பக்கத்தில் வயல்காறன் சாட்சி சொன்னா கடன். பின்ன ஒருத்தருக்கொருதர் மாறி மாறி கையெழுத்தப் போட்டிட்டா கை மேல கம்மாரிசு. பிறகு எடுத்த கடன சனம் கட்டினதேச்சைக், விவசாயக்கடனெல்லாம் தள்ளுபடி செய்தவா. அப்பிடி இருந்தும் சனம் அவாவ தள்ளுபடி செய்தது தான் கெட்டித்தனமான வேலை.

நான் இப்ப முன்னையப்போல வங்கிவழிய கடனுக்கு போய்த் தூங்கிறதில்லை. என்னத்துக்கு? என்னத்துக்கெண்டு கேக்கிறன் அதெல்லாந் தொழில் செய்ய நெக்கிறவங்களுக்குத்தான் கண்டியோ நானெங்கடா... வயலயும் குத்தகைக்கு விட்டிட்டன். அங்கின வேலரிட்ட ஒரு பத்தாயிரம் வாங்கினன். சுப்பிரமணியிட்ட பதினைஞ்சு.. எல்லாம் குத்தகைக்காசை வாங்கித் தாறண்டுதான். சொன்னாப்போல சுந்தரத்திட்டயும் கனக்க இல்லை ஒரு அஞ்சாயிரம் வாங்கினனான். என்ன உவள காசிருந்தா நான் விதைச்சிருக்கலாமோ... எட அறிவுக் கொழுந்து. ஆரடா போய் சேத்தில நிக்கிற. ந்தா காத்தால தம்பிராசற்ற கடையடியில போய் குந்தினா நாலு ஊரில் புதினங்களை

**பாக்கியம் பொறுமைசாலி போயிட்டாள் பாத்தியோ! அவளை வாய்திறக்க நான் விடயில்ல. விட்டிருந்தா கதை பிழைச்சுப் போம். கடன் வாங்கிறதும் ஒரு கலை தான். உலகத்தில கயிட்டத்திலதான் கடன் வாங்கிறம் எண்டு நீ நெச்சியோ அதுதான் பெரிய மடத்தனம். பின்ன தேவைக்குத்தான் கடன் வாங்கினம் எண்டு நெச்சியோ அது ஆகப் பெரிய முட்டாள்தனம். கடன் கடனுக்காகத்தான் வாங்கிறதடா.**

வாறவை போறவையோடு இருந்து அலசிப்போட்டு மத்தியானம் வீட்டபோனா மனிசி காச்சி வைச்ச சோத்தை அங்கின குளிச்சு முழுகித் திண்டுபோட்டு ஒருகண் நித்திரை கொண்டிட்டு நாலுமணிக்கு ஒரு பிளேன்ரியக் குடிச்சிட்டு திரும்பவும்ள கடையடிக்கு வந்தா பொழுது போகுது. அதுக்கேன்ரா வயல் விதைக்கோணும்... என்னடா அப்ப என்னெண்டு கடனக் கட்டப்போறியோவே... இப்ப நான் உன்னட்ட சொன்னது மட்டுந்தான் கடனெண்டா பரவாயில்லை. அது தொகைக்கடன் தம்பீ. தம்பிராசற்ற கடைக்கும் ஒரு ஆயிரம் ரூவாக் கணக்கு கிடக்கு, செல்லத்துரை பெண்சாதிக்கும் சீட்டுக்காசு நாலு தவணை கட்டேல்ல. இனி மீன்காரனுக்கு பால்காரனுக்கு மரக்கறிக்கடைக்கு எண்டு சின்னச் சின்னக் கடனுகள் கிடக்குத்தான். என்ன... சில்லறைக் கடன்காரரர் கண்டநேரமும் கேப்பாங்கள். பெரிய கடன்காரரர் அப்பிடியில்லைக் கண்டியோ அவை நெல்ல வெட்டக்குள்ளதான் கேப்பாங்கள். அப்பைக்கயும் தெரியாதே ‘முகத்துக்கஞ்சி வேசையாடினா குலத்துக்கீனம்’ எண்டு சொல்லுவினம். இந்தக் கடன கேட்டு வாறவைய அளைய வளையக் கட்டி கதையச் சொல்லியோ காப்போத்தில் கள்ளை வாங்கிப் பருக்கியோ சமாளிக்கத் தெரியாட்டி என்னத்துக்கடா துணிஞ்சு கடன் வாங்க வேணும்.



பொறடா பொறு பாக்கியமக்கா வாறா... மனிசி கடனக்கேட்டுத்தான் வருது போல இப்ப பார் என்ர கெட்டித் தனத்தை. “பிள்ளை, உந்தக் கேத்தில அடுப்பில வை பாக்கியம் வருது. அவள் பாவியும் ஓய்வொழிச்சல் இல்லாமத்தான் பாடு படுறாள் . களைச்சுப் போய் வாறாள். உந்தக் கதிரைய எடுத்துப் போடடி... வா வா பாக்கியம் என்ன... நல்லாக் கொட்டுண்டு போனாய் சாப்பாட்டக் கவனி பிள்ளை. இப்பதான் ஊர் பேர் தெரியாத நோயளெல்லாம் வருதே.. அது சரி எங்க உந்த வெய்யிலுக்கால வெளிக் கிட்டிட்டாய்... எடி இஞ்சயென்ன வாயப் பாக்கிறா பாக்கியத்துக்கு அந்தக் கப்பல் பழத்தில ரெண்டக் குடன் தின்னட்டும். ஆஆங... தேத்தண்ணி ஊத்தினா என்ன. அவள் தின்பாள் வாழைப் பழத்தைக் குடு. ஆத்தே இந்த வெயிலுக்க அவளும்... மெய்யே ராசம்மா காசு தந்திட்டாளே...என்ர காசுக்கு அவள் யோசியாள் அது வெள்ளைக்காறன்ர காசுதான். செல்லர் கொஞ்சம் காயுதாறண்டவர். பின்னேரம் இல்ல... விடிய வந்த உடன, நான் கொண்டருவன் நீ அலைய வேண்டாம். என்ர ராசாத்தி அவளெண்டநாடி கேட்ட உடன தந்தவள். நாங்கள் அதை நினைக்க வேணும். குடி பாக்கியம் தேத்தண்ணியக் குடி எடி அந்த துவாயக் குடடி பார் அவளுக்கு வேர்க்கிது சரி பிள்ளை நான் பின்னேரம் அல்லது காத்தாலைக்கு ஓடி வந்திருவன் நீ யோசியாதை...”

பாக்கியம் பொறுமைசாலி போயிட்டாள் பாத்தியோ! அவளை வாய்திறக்க நான் விடயில்ல. விட்டிருந்தா கதை பிழைச்சுப்போம். கடன் வாங்கிறதும் ஒரு கலைதான். உலகத்தில கயிட்டத்திலதான் கடன் வாங்கிறம் எண்டு நீ நெச்சியோ அதுதான் பெரிய மடத்தனம். பின்ன தேவைக்குத்தான் கடன் வாங்கினம் எண்டு நெச்சியோ அது ஆகப் பெரிய முட்டாள்தனம். கடன் கடனுக்காகத்தான் வாங்கிறதடா. ஆரோ ஒருத்தர் குடுக்கினம் எண்டா நாங்கள் வாங்க வேணும். ‘ஆத்தில போற தண்ணி அண்ணை குடி தம்பி குடி:’ எண்டு அனுபவிக்க வேணும். அதுதான் மரியாதை. பார்! நாலு வரியத்துக்கு சுரேசின்ர தம்பி ஒரு எட்டுலெச்சம் கடன் வாங்கி வீட்டைக்கட்டினான். ரெண்டு வரியம் பெரிய ஆடம்பரமா கல்வீட்டில் இருந்திச்சினம். ஆச்சா இப்ப தவணைக்காசு கட்டேல்லயெண்டு வீட்ட வங்கிக்காறன் புடுங்கிட்டான். பட்டுச்சேலை கட்டிற கனவில மிதக்க கோவணமும் பறி போன மாதிரி பட்டகயிட்டமெல்லாம் போச்சே. பின்ன வங்கியள் என்ன நாட்டை அவிவிருத்தி செய்யவே கடன் குடுக்கினம். எல்லா சுத்துமாத்தடா வட்டி வட்டிக்கு மேல வட்டி எவ்வளவத்தான் கட்டினாலும் வட்டிதான் கழியும். முதல்ல ஒரு சொட்டுத்தானும் கழியாது. எனக்குந்தப் பயமில்ல என்ர வீட்டையும் புடுங்கேலாது நான் வாங்கின காசையும் புடுங்கேலாது.

இதென்ன புதுக்கதையடா கடனில்லாக்கஞ்சி கால்வயிறடா. முழு வயிறு சாப்பிட வேணுமெண்டா கடன் வாங்கத்தான் வேணும். எடஎடஎட நீ சொல்லுறது எனக்கும் தெரியும் கடனில்லாம கால்வயிறு குடிச்சா காணுமெண்ணப் போறாய். . வாழ்க்கைய வாழ வேணுமடா. இல்ல தெரியாமத்தான் கேக்கிறன் இப்ப எந்த அரசாங்கந்தான் கடனில்லாம இருக்கு. ங... எட அம்மேரிக்காவான அம்மேரிக்காவே கடனிலதான் நிக்குதாம். எல்லாம் விரலுக்கேத்த வீக்கம். என்னவோ சொல்லு வினமே மிளகு போறடந் தெரியாது கடுகு போறடம் கண்டு பிடிச்சிருவினம்.

திரும்பிற பக்கமெல்லாம் அங்க கடன். இஞ்ச கடனெண்டு யோசிச்சா நாலா பக்கத்தாலயும் கடன் கடனெண்டு பல யோசினையளும் வந்து உலைச்சா எப்பிடி நித்திரை வருது எண்டு யோசிக்கிறியோ... அதுக்கும் ஒரு சுலபமான வழி. இப்ப நீ சொன்னமாதிரி வேலருக்கு பத்து சுப்பிரமணிக்கு பயினைஞ்சு, சுத்தரத்திட்ட அஞ்சு. இனி மளிகைக்கடன். பால்கடன் தம்பிராசற்ற கடன் எண்டு பல பக்கத்தாலும்’ கடனில யோசிக்கிறனெண்டு தானே நெக்கிறாய். பேப் பொடியா நான் எல்லாக்கடனையும் ஒண்டாக்கிப் போட்டு ஒரே கவலையா வச்சிட்டன் எப்பிடியெண்டு கேக்கிறியே... எல்லாற்ற கடன் தொகையையும் கூட்டினாச்சு மொத்தம், அம்பத் திரண்டாயிரத்து நாநுத்தி அறுவது ரூவா கடன் இருக்கு. ஒரே கவலை. பேரெல்லாத்தையும் பெரிய ரேசராப்போட்டு அழி! அப்பிடியே கடன் தொகையையும் ஒருநாளைக்கு அழிக்கிறதுதானே. சும்மா விடு. ■



## இடிபாடுகளையே மீண்டும் கொங்கிரீட்டாக்கலாம்!

சிமெண்ட் மணல் கலவை தான் கட்டடங்களுக்கு அடிப்படை. ஆனால், இரண்டுமே சுற்றுச்சூழல் கேட்டுக்கு வழிவகுப்பவை. இதற்கு மாற்று வழி ஒன்றை டோக்கியோ பல்கலைக் கழக விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர். இடிக்கப்படும் கட்டடங்களின் இடிபாடுகளை மீண்டும் அரைத்து கொங்கிரீட்டாக ஆக்கி பயன்படுத்த முடியும் என்பதை அவர்கள் நிரூபித்துள்ளனர்.

அதுமட்டுமல்ல, அவர்களது மறுசுழற்சிக் கலவைக்குத் தேவையான காபனீரொட்சைட்டு காற்று மாசிலிருந்தே எடுத்துக்கொள்ள முடியும் எனவும் அவர்கள் காட்டி உள்ளனர். சிமெண்ட் தயாரிக்கவும், அதை தொலைதூரத்திற்கு எடுத்துச் செல்லவும் நிறைய மாசுபாடு ஏற்படுகிறது. உலக மாசுபாட்டில் சிமெண்ட் மற்றும் இதர கட்டுமான மாசுகளின் பங்கு 7 சதவீதம். எனவே, டோக்கியோ விஞ்ஞானிகளின் மறுசுழற்சி முறைக்கு இப்போதே பாராட்டுக்கள் கிடைத்துள்ளன.

இருந்தாலும், கட்டட இடிபாட்டுத் துகள்களை மீண்டும் கொங்கிரீட் கலவையாக, கட்டிகளாக மாற்றினால் அவற்றின் பலம், தாங்கும் சக்தி, அசல் சிமெண்ட் கலவை அளவுக்கு இருக்காது. எனவே தான், அதை சிறிய வீடுகளுக்கு மட்டுமே இப்போதைக்கு பயன்படுத்தலாம். அப்படியே பார்த்தாலும், ஒரு ஆண்டுக்கு ஒரு நகரில் இடிக்கப்படும் ஆயிரக் கணக்கான கட்டடங்களின் இடிபாடுகளைக் குப்பையில் கொட்டாமல், நேரடியாக சிறிய வீடுகள் கட்டும் திட்டங்களுக்குப் பயன்படுத்தலாம் என்பதும் ஒரு நல்ல செய்தி தானே. ■

New Luxii Pharmacy




அனைத்து வகையான மருந்துப்பொருள்களையும் பெற்றுக்கொள்ள

நீயூ லக்ஷி மருந்தகம்

Main Street, Malusanthy, Nelliady

077 222 2034

வேதநாயகம் தபேந்திரன்



# பருவ மழையும் உருவமடையும்

பருவமழை உருவ நடையை பூமிப் பெண் மீது ஆரம்பித்து விட்டது. மரநடுகை தொடர்பான ஆர்வங்கள் பலரிடம் துளிர்க்க ஆரம்பித்து விடும் காலம் இது.

ஐக்கியநாடுகள் சபை யூன் 05 ஆம் திகதியைத்தான் சர்வதேச சுற்றுச்சூழல் தினமாகப் பிரகடனம் செய்துள்ளது.

ஐரோப்பிய, அமெரிக்கக் கண்ட நாடுகளில் பனிக்கட்டி கொட்டும் குளிர்காலம் முடிந்து மரநடுகைக்கு உகந்த கோடை காலத்தினைக் கருத்தில் கொண்டு மரநடுகையைத் தீர்மானித்தார்கள்.

ஆனால் எமது நாட்டிற்கு மழை பொழியும் ஐப்பசி, கார்த்திகை மாதங்களே மரநடுகைக்கு உகந்த காலம்.

எமது மண்ணில் எந்த விதமான வறட்சியையும் தாங்கி வளரக் கூடிய பனை மரங்களை வளர்க்கும் ஆர்வமும் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. பனம் விதைகளை நடும் செயல்கள் அமைப்பு சார்ந்ததாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஆனி, ஆடி, ஆவணி மாதங்களில் விழும் பனம் பழங்களைச் சேகரித்து வைத்து நடுகை செய்து கொள்கின்றார்கள். பனங்கொட்டை முளைத்து வரும் போது அவற்றைப் பராமரித்துக் கொள்ளும் நடைமுறைகள் இல்லையென்று சொல்லக் கூடிய நிலைமைதான் உள்ளது.

இதனால் பனை வடலிகள் பறட்டை பற்றி வளர்ச்சி குன்றிய நிலையில் உள்ளதைப் பரவலாகக் காண முடிகிறது.

“பிள்ளையைக் கட்டி வளர்
வடலியை வெட்டி வளர் ” என்பது எமது முன்னோர் எமக்குச் சொல்லித் தந்த ஒரு பொன்மொழி. அதாவது பிள்ளையை அதாவது தென்னம்பிள்ளையின் ஓலைகளை வெட்டக் கூடாது. கட்டி வளர்க்க வேண்டும். ஓலையை வெட்டினால் தென்னம்பிள்ளையின் வளர்ச்சி மூச்சுக் குறைந்து வளர்ச்சி குன்றி விடும். தென்னை மரத்தின் அடி சிறுத்து விடும். பாளை தள்ளிய மரங்களில் ஓலை வெட்டினால் தேங்காய்கள் காய்க்கும் வீதமும் குறைந்து விடும்.

பனை வடலியின் ஓலைகளை வெட்டித் தான் வளர்க்க வேண்டும். அப்போது தான் வடலி வைரம் பற்றி உயர்ந்து வளரும். வடலி ஓலைகளை வெட்டா விட்டால் பனை பறட்டை பற்றி வளர்ச்சி குன்றி விடும்.

எந்தவொரு வறட்சியிலும் உயிர் வாழ்ந்து தனது வேர்களைச் செங்குத்தாகப் பூமிக்குக் கீழாக விட்டு தண்ணீரைத் தரைக்கு மேலாகக் கொண்டு வரும் வல்லமை பனை மரத்திற்கு உண்டு.

**“எந்த நிலத்தில் எப்படியான மரங்களை நடலாம். எப்படி நடல் வேண்டும். எப்படிப் பராமரிக்க வேண்டும். அதன் பயன்களை எப்படி எப்படி எடுக்கலாம். அவற்றை எப்படி எப்படி பயன்படுத்தலாம். காசாக்கலாம். சூழலுக்கு அவற்றால் தீங்கு ஏற்படாமல் எப்படி வளர்ப்பது என்பவை போன்ற விடயங்கள் மர நடுகையின் போது முக்கியமாகக் கவனிக்க வேண்டும்.”**

அதனால் எமது முன்னோர்கள் கற்பக தருவாம் பனை வளம் பெருக்கி பயன்பெற்று வாழ்ந்தார்கள்.

1990 ஆம் ஆண்டு தீவக மக்கள் பெரும்பாலானோர் யாழ்ப்பாணம் நோக்கி இடம் பெயர்ந்தார்கள். இடம் பெயராமல் நயினாதீவு, எழுவைதீவு, அனலைதீவு, நெடுந்தீவு போன்ற தீவுகளில் அகப்பட்டவர்களது உயிர்களைப் பனாட்டும் புழுக்கொடியலும் தான் காப்பாற்றியது.

பஞ்சம் பார்த்து மக்களைக் காத்த வரலாறு பனாட்டுக்கும் புழுக்கொடியலுக்கும் உள்ளது.

ஆனால் இன்று அவற்றை உற்பத்தியாக்கி வளம் பெருக்கும் தன்மை எம் மக்களிடம் குறைந்து போய் விட்டது. நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரம் கடந்த 30 வருடங்களில் மலையளவு உயர்ந்து விட்டது.



காணிகளின் எல்லைப் பிரச்சினைகள் காரணமாக உயிர் வேலிகளை அழிப்பது என்பது சர்வசாதாரணமாக எல்லா இடங்களிலும் நடக்கிறது. வசதி படைத்தோர் காணி வாங்கியவுடன் செய்யும் முதல் வேலை வேலியை அழித்து மதில் கட்டுவது அல்லது கொங்கிறீற் தூண் வேலி போடுவது.

பக்கத்துக் காணிக்காரன் எல்லைப் பிரச்சினைக்கு வரக் கூடாது. எல்லை அரக்கிக் காணி பிடிக்கக் கூடாது. அதற்காகவே நான் மதில் கட்டுகிறேன். தூண் போடுகிறேன் என்கிறார்கள்.



நிழல் தந்த,கதிகால் தந்த, ஆடுமாடு வளர்க்க இலைகுழை தந்த, தூது வளை, முசுட்டை, மொசு மொசுக்கை போன்றவை தந்த, சருகுகுள் மூலமாக இயற்கை உரம் தந்த உயிர் வேலி தந்த பயன்களைப் பற்றி இப்போது பணக்காரருக்கு அக்கறையில்லை.

பருவம் தப்பிய மழை, காலம் மாறிய காற்று, கடும் வெய்யில் எனக் காலநிலை மாற்றம் வேகமாக நிகழ்கிறது.

மரம் வளர்த்தல் திட்டங்கள் உயிர்ப்புடன் நிகழ்வதற்காக எந்த செயற்திட்டங்களும் சரியாக முன்னெடுக்கப்படவில்லை.

மரம் வளர்ப்புத் திட்டம் என்ற பெயரில் மரங்கள் நாட்டப்பட்டு, திட்டம் முடிந்தவுடன் நட்ட மரங்களின் கூடுகள் விறகுக்குப் போய் விடும். மரங்கள் வீதிகளில் அலையும் ஆடு மாடுகளுக்கு உணவாகப் போய் விடும்.

எந்த நிலத்தில் எப்படியான மரங்களை நடலாம். எப்படி நடல் வேண்டும். எப்படிப் பராமரிக்க வேண்டும். அதன் பயன்களை எப்படி எப்படிப் எடுக்கலாம். அவற்றை எப்படி எப்படி பயன்படுத்தலாம். காசாக்கலாம். சூழலுக்கு அவற்றால் தீங்கு ஏற்படாமல் எப்படி வளர்ப்பது என்பவை போன்ற விடயங்கள் மர நடுகையின் போது முக்கியமாகக் கவனிக்க வேண்டும்.

உயிர் வேலிகளை அழித்து மதில்களைக் கட்டுவது, கொங்கிறீற் தூண்களை அமைத்து முள்ளுக்கம்பி வேலிகளை இடுவது என்பவை தாராளமாக நிகழ்வதைக் கட்டுப்படுத்த வேண்டும். உள்ளூராட்சி சபைகளிடம் இதற்கான அனுமதியைப் பெறுவது கடினத் தன்மையான ஒன்றாக இல்லை.

உயிர் வேலிகளை அழித்து இவற்றை உருவாக்குபவர்கள் வருடாந்தம் பெரிய தொகைப் பணத்தைச் சுற்றாடல் வரியாகக் கட்ட வேண்டுமென்ற அரசாங்க நடைமுறை வந்தால் மட்டுமே எஞ்சியுள்ள வேலிகளைப் பாதுகாக்க முடியும்.

வளர்ச்சி அடைந்த நாடுகள் பல தமது சுற்றாடலைப் பாதுகாப்பதற்காக இத்தகைய வரி முறைகளைக் கையாண்டு வெற்றி பெற்றிருக்கின்றன.

அரசாங்க நடைமுறைகள் வெறும் பேப்பர் நடைமுறைகளாக எமது நாட்டில் இருப்பதனால்தான் சூழல் நாளுக்கு நாள் மாசடைகிறது. அரசாங்கம் மாறினாலும் நாட்டின் அபிவிருத்திக்கான திட்டங்களை வகுப்போர் மாறாமல் இருக்க வேண்டுமென்ற நடைமுறை எமது நாட்டில் இல்லை. எல்லாமே வேரோடு மாறிவிடும். இந்தியாவில் திட்டக் குழு ஒன்றின் நிபுணர்கள் குழு மூலமாக நாட்டின் பொருளாதாரம் உறுதியான முறையில் வளர்ச்சி அடைந்து வருகின்றது.

ஒரே நாளில் பல காலநிலைகளை அனுபவித்து வாழக் கூடிய ஆசியாவின் சொர்க்கமாகிய எமது நாட்டின் சூழலைப் பாதுகாப்பது எம் யாவரினதும் கடமை. ■

# பதஞ்சலி யோக சூத்திரத் தொடர்

## (அக)பயணத் தடைகளை வெல்லும் ஓம் எனும் பிரணவ மந்திரம்

'ஈசுவரன் காலத்தால் கட்டுப்படாதவராகையால் புராதன குருமார்களுக்கும் குரு அவர்' - யோக சூத்திரம் - 1.26

'துன்பம், செயல்கள், அதன் பலன்கள், ஆசைகள் இவற்றால் தீண்டப்படாத ஒரு விசேட புருசன் ஈசுவரன் எனப்படுகிறார்.' -யோக சூத்திரம் 1.24

மேலே கூறிய தன்மைகளை அடையும் மானிடன் கூட இறைத்தன்மை அடைந்தவனாகிறான். உயிர்களிடம் விதையளவாகவுள்ள எல்லாம் அறியும் தன்மை இறைவனிடம் எல்லையற்றதாக உள்ளது, அவரது சொல் வடிவமே 'ஓம்' எனும் மந்திரம் என்கிறார் பதஞ்சலி முனிவர். ஓம் என்ற மந்திரத்தை ஜெபம் செய்வது இறைவனைத் தியானிப்பதற்கு ஈடானது.

'(ஓம் என்ற சொல்லை) மீண்டும் மீண்டும் உச்சரிப்பதும், அதன் பொருளை பக்தியுடன் நினைந்து தியானிப்பதுமே வழி' - யோக சூத்திரம் 1.28

சக்தி வாய்ந்த அதிர்வுகளுடன் கூடிய மந்திரங்கள், மனதின் கருவியாகி எம்மைச் சாதாரண உணர்வுநிலையில் இருந்து தன்னை உணரும் உயர் உணர்வுநிலைக்கு அல்லது தியானநிலைக்கு அழைத்துச் செல்லும் வாகனமாகத் தொழிற்படுகின்றன. மந்திரம் என்பதன் பொருளும் இதுவே. பிரபஞ்சத்தில் உள்ள சகல துணிக்கைகளும் அதிர்ந்து கொண்டு இருக்கின்றன. ஆனால் நமது புலன்களினால் உணர முடிவதில்லை. படைப்பின் பொது

ஒரு குருவிடம் மந்திர தீட்சை எடுத்துக் கொண்டு, உருத்திராட்ச மாலை உதவியுடன் மந்திர உச்சாடனம் செய்யலாம். தீட்சையின் போது குருவிடமிருந்து ஆன்மீக சக்தி நம்மிடம் கடத்தப்படும் செயற்பாடு நடைபெறுகிறது. தீட்சையின்றிக் கூட நமக்குத் தெரிந்த மந்திரங்களில் பயிற்சியைச் செய்யலாம்.

பயன்கள்: மந்திரங்களின் ஒலியும் அதிர்வும் உடலெங்கும் தடையற்ற சக்தியோட்டத்தையும் மூளையிலுள்ள வேதியல் பொருட்களின் சீராக்கலுக்கும் வழி வகுக்கிறது. மனஅழுத்தத்தைத் தரக்கூடிய சுரப்புகளைத் தடுத்து, என்டோபினின் (Endorphins) சுரப்புக்கு வழி சமைக்கிறது. இது மனஅழுத்தத்திற்கு ஈடுகொடுக்கும் சக்தியையும் வலி மனஅமைதி நிலையில் மூளையில் உருவாகும் அல்பா, காமா, டெல்டா அலைகள், மந்திர பயிற்சியில் அவதானிக்கப்பட்டுள்ளது. நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கிறது. இரத்த அழுத்தம் குறைகிறது. இதயத் துடிப்பு சீராகிறது. பயம், பதட்டத்தைக் குறைக்க முடிகிறது எம்முள் கேட்கும் எதிர்மறைக் குரல்கள் மறை வதால், நேர்மறை எண்ணங்களுக்கு இடம் கிடைக்கி றது.

மனதை என்றும் சமநிலையில் வைத்திருப்பது ஆன்மீக வளர்ச்சிக்கு முக்கியமானது. சகலரோடும் நட்புறவு. துன்பப்படுபவர்களின் மேல் கருணை. பிறர் மகிழ்வில் நாமும் மகிழ்வது. வீண் விவாதம், பிறருக்கு துன்பம்



இயற்கைப் பெருந்திரளின் (பிரகிருதி) சமநிலையில் ஏற்பட்ட இடையூறு காரணமாக ஏற்பட்ட பெருவெடிப்பின் அதிர்வே ஓம். ஆழ்ந்த தியான அனுபவங்களில் கேட்பதும் இந்த ஓம் என்ற நாதமே. 'ஓம் நமசிவாய', 'ஓம் கிரியா பாபாஜி நம ஓம்' போன்ற பல மந்திரங்களுக்கும் அடிப்படையாக இருப்பதுவும் ஓம்.

ஓம் எனும் மந்திரத்தின் பொருளுணர்ந்து ஓதுதல் சிறந்த நன்மையளிக்கும். மண்டூக்கிய உபநிடதத்தில் மேலதிக விளக்கம் கிடைக்கிறது. ஓம் ஓதப்படும் போது எழும் ஒலி வடிவங்களான அ,உ,ம் நனவு, கனவு, தூக்கம் என்ற 3 நிலைகளைக் குறிக்க, ஓதி முடிய வரும் நான்காவது ஒலியற்ற நிலை விழிப்புணர்வு, துரியம், தூங்காமல் தூங்குதல் எனப் பலபெயர்களில் அறியப்படும் நிலையைக் குறிக்கிறது. அடிவயிற்றில் இருந்து அ வும், நெஞ்சுப் பகுதியில் இருந்து உ வும், தலைப்பகுதியில் ம் என்ற எழுத்தின் ஒலியும் எழும்பும் படியாக ஓம் எனும் மந்திரம் ஓதப்பட வேண்டும். ஆரம்பகால சாதகர்கள் சத்தமாக ஓதலாம். யோக சாதகத்தில் அனுபவம் வர, மனதினுள் சத்தமின்றி மந்திர உச்சாடனத்துடன் பொருளையும் சிந்திப்பது அதிக பலனைத் தரும்.

தரும் காரியங்களைத் தவிர்ப்பதன் மூலமும் நம் மனதை தூய்மையாகவும் சமநிலையுடனும் வைத்திருக்கலாம்.

ஓம் என்ற மந்திரத்தால் மனதை ஒருநிலைப்படுத்தித் தியான அனுபவங்களைப் பெறுவது போலவே, கிரியா பாபாஜி போன்ற ஒரு மகாசித்தரை காட்சியாகவோ, மனதாலோ தியானிப்பதன் மூலமும், ஒளிரும் சுடர் போன்ற ஒன்றைத் தியானிப்பதன் மூலமும், அன்பு, அகிம்சை போன்ற கருத்துகளைக் கூட மனம் ஒருநிலைப்பட்ட தியானநிலையில் சிந்திப்பதன் மூலமும் மன ஒருமைப்பாடு சாத்தியமாவதோடு, தியானிக்கும் பொருளைப் பளிங்கு போல் பிரதிபலித்தலும் அதன் மீது ஆதிக்கமும் ஏற்படுகிறது. எந்தப் பொருளோடும் தியானித்து சமாதி அனுபவம் பெற முடிகிறது. ஆன்மீக நூல்களை நாம் படித்து அறிந்து கொள்ளலாம். ஆனால் மெய்யுணர்வு ஏற்படாது. அனுபவ ஞானமே உண்மையான ஆன்மீகம். தர்க்க அறிவாலோ, புலனறிவாலோ கடவுளைக் காண முடியாது. அறிவின் எல்லைகளைக் கடந்தும் செல்லலாம் என்பதை சித்தர்களின் ஆற்றலும் வாழ்வும் நமக்கு உணர்த்துகிறது. யோக சாதனையால் இவ்வாற்றல் சாத்தியமாகிறது.


திருமந்திரப் பாடலொன்றில்,

அறிவு அறிவு என்று அங்கு அரற்றும் உலகம்
அறிவு அறியாமை யாரும் அறியார்
அறிவு அறியாமை கடந்து அறிவானால்
அறிவு அறியாமை அழகிய வாறே.
- திருமந்திரம்- 2362

புலன்வழி பெறும் அறிவை உண்மையில் எமது தன்முனைப்பால், அறியாமையால் முழுஅறிவு என்று எண்ணிக்கொண்டு இருக்கிறோம். இந்த அறிவின் அறியாமையைத் தாண்டிய பேரறிவு ஒன்று உள்ளது. யோக, ஞானத்தால் இதை உணர்ந்தால் (தன்னை உணர்ந்தால்) சீவன், சிவமாகியிருக்கலாம்.

**முரளீதரன் நவரத்தினம்**
MSC in Yoga (அண்ணாமலைப் பல்கலைக்கழக கனடா வளாகம்)

# மொழிபெயர்ப்பின் முக்கியத்துவமும், வருங்கால சந்ததியினரின் நிலையும்




அம்பலவாணர் துரைசிங்கம்

**மொழி என்றால் என்ன?**

ஒரு நாட்டில் வாழும் மக்களினால் பேச்சு அல்லது எழுத்து மூலம் ஒருவரோடொருவர் தொடர்பாடல் மேற்கொள்வதற்கு உதவுவது, மொழி எனப்படும். உலகில் வாழும் மக்களினால் பல்வேறுபட்ட மொழிகள் உபயோகிக்கப்படுவதனால் மக்களிடையில் புரிந்துணர்வு மற்றும் பரஸ்பர நம்பிக்கையினை வளர்ப்பதற்கும், விஞ்ஞான தொழில்நுட்பம் வேகமாக முன்னேறி வருவதனால் அவற்றின் அனுகூலங்களை யாவரும் பெற்றுக்கொள்வதற்கும் மொழிபெயர்ப்பு இன்றியமையாததாகும். மொழிபெயர்ப்பு ஆங்கிலமொழியில் "Translation" என அழைக்கப்படும்.

What is Translation? The definition is rendering the meaning of a text into another language in the way that the author intends the text.

**மொழிபெயர்ப்பு என்றால் என்ன?**

மொழிபெயர்ப்பின் வரைவிலக்கணமாக ஒரு விடயத்தின் அர்த்தத்தினை, படைப்பாளியின் கருத்து மற்றும் நோக்கத்திற்கிணங்க விளங்க வேறொரு மொழியில் பெயர்ப்பது எனக் கருதப்படும்.

மஹாகவி சி.சுப்பிரமணிய பாரதியின் "பிறநாட்டு நல்லறிஞர் சாஸ்திரங்கள் தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்" என்ற கூற்று அவரின் தூர நோக்கினையும், மொழிபெயர்ப்பின் அவசியத்தையும் உணர்த்தி நிற்கின்றது.

மொழிபெயர்ப்பினைப் பொறுத்தவரையில் படைப்பாளி, மொழிபெயர்ப்பாளர் என இருவர் சம்பந்தப்படுகின்றனர். இவர்களுக்கிடையிலான வேறுபாட்டினை நோக்குவோமானால் ஒரு படைப்பாளிக்குக் கட்டுக்கடங்காத சுதந்திரம் உண்டு.

அவர் தன் படைப்பை எப்படி வேண்டுமானாலும் எழுதலாம். எந்தவிதமான கட்டுப்பாடும் இல்லை. ஆனால் மொழிபெயர்ப்பாளரின் நிலை அவ்வாறில்லை. அவர் தனது கற்பனையினை இதில் புகுத்த முடியாது. திருமணமான பெண்போல் வகுக்கப்பட்ட கடமைகளோடு செயலாற்ற வேண்டும். படைப்பாளரின் கருத்துக்களில் எதையும் மாற்றாமல் அதே சமயம் சரியான மொழியில் வாசிப்பவர்களுக்குச் சென்றடையும் முறையில் செயற்பட வேண்டும்.

மொழிபெயர்ப்பாளர் இரு மொழித் தேர்ச்சி உடையவராகவும், அம்மொழிகளுக்குரிய கலாசாரங்களையும் அறிந்தவராகவும், மற்றும் சம்பந்தப்பட்ட விடயம் தொடர்பில் அறிவு உள்ளவராகவும் இருத்தல் சாலச்சிறந்தது. உதாரணமாக விஞ்ஞானம் தொடர்பில் கல்வி கற்ற ஒருவர் கலை தொடர்பான விடயம் ஒன்றினை மொழிபெயர்ப்புச்செய்ய முனையும் போது மிகுந்த சிரமங்களை எதிர்நோக்க நேரிடும்.

மொழிபெயர்ப்பானது தொடர்பாடல், இன்னோர் கலாசாரத்தை அறிமுகப்படுத்தல் அல்லது அறிந்து கொள்ளல், வேறொரு மொழியினைக் கற்பது தொடர்பான நுட்பங்கள் மற்றும் ஒருவரின் தனிப்பட்ட ரசனை தொடர்பில் முக்கிய பங்காற்றுவதுடன், விஞ்ஞானம், தொழில் நுட்ப, நிறுவன, சமூக பொருளாதார, அரசியல், இலக்கியம், தத்துவம் தொடர்பான விடயங்களிலும் பங்காற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஒரு மொழியின் தொழிற்படுகையினை நோக்கும்போது மொழியானது ஆக்கபூர்வமான படைப்பு, தகவலை வழங்கும் படைப்பு (creative/ informative), விடயத்தின் ரசனைகளை வெளிப்படுத்துகின்ற (expressive) ஒருவரின் செயற்பாடுகளை மாற்றக்கூடிய அல்லது தூண்டக்கூடிய படைப்பு (operative) என்ற விடயங்களைப் பரிமாற்றம் செய்வதற்கு உபயோகப்படுத்தப்படுகின்றமை கண்கூடு.

ஆக்கபூர்வமான/ தகவல் வழங்கும் படைப்புக்களாக உசாத்துணைகள், அறிக்கைகள், உரையாற்றுகைகள், இயக்குதல் தொடர்பான வழிமுறைகள், சுற்றுலாக் கையேடுகள், உத்தியோகபூர்வ உரைகள், விமர்சனங்கள் உள்ளடங்கலாம்.

விடயத்தின் ரசனைகளை வெளிப்படுத்துகின்ற படைப்புக்களாக கவிதைகள், நாவல்கள், சிறுகதைகள், நாடகங்கள், சுயசரிதைகள் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

ஒருவரின் சிந்தனைகள் மற்றும் செயற்பாடுகளை மாற்றுவது தொடர்பாக (operative) விளம்பரங்கள், தேர்தல் உரைகள், சமய பிரசாரங்கள் உள்ளடக்கப்படலாம். அதாவது செவிமடுப்பவர்களை/வாசிப்பவர்களை அதற்கிணங்க, செயற்படும்படி தூண்டுதல் தொடர்பானது.

சில விடயங்கள் கலப்புள்ளவையாக (Hybrid) அமையலாம். ஒரு சுயசரிதையானது தகவலை வழங்குவதுடன் வாசிப்பவரை சில விடயங்கள் தொடர்பில் தூண்டுவதாகவும் அமையலாம். அதேபோன்று சமய பிரசாரங்கள் ஒரு சமயம் தொடர்பான தகவலுடன் செவிமடுப்பவரை குறிப்பிட்ட சில செயற்பாடுகளைப் பின்பற்றும் படி தூண்டுபவையாக அமையலாம்.

எனவே மொழிபெயர்ப்பாளர் மொழிபெயர்க்கப்படும் விடயம் தொடர்பில் போதுமான அறிவு, அவ்விடயம் தொடர்பான கலாசாரம் மற்றும் மொழிபெயர்ப்பினை வாசித்துப் பயன்பெறுபவர்கள், (Readership) தொடர்பிலும் கவனத்திற் கொள்ளல் இன்றியமையாதது.

(தொடரும்)

# 13 ஆவது திருத்தம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கஜேந்திரகுமார் அதனை மறை முகமாக இந்திய வெளியுறவுச் செயலாளரின் சந்திப்பின் போதும் கூறியிருந்தார். ஒற்றையாட்சிக்குட்பட்ட எந்தப் பொறிமுறையையும் இந்தியா அரசியல் தீர்வாக சிபார்சு செய்யக் கூடாது எனக் கூறியிருக்கின்றார். ஆனால் தேர்தல் நலன்களுக்காக முன்னர் பகிஸ்கரித்த முன்னணி தற்போது மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட முன்வந்துள்ளது.

பொதுமக்கள் மத்தியிலும் இது தொடர்பாக இரண்டு பக்க ஆதரவுக் கருத்துக்களும் உள்ளன. சாதாரண மக்கள் அனுபவத்தின் அடிப்படையிலேயே பொது முடிவுக்கு வருபவர்களாக இருப்பதனால் ஆரம்பப்புள்ளியாகக் கூட இருக்க மாட்டாது என்பதே பெரும்பான்மையோரின் கருத்தாக உள்ளது. வரதராஜப்பெருமாள் முதலமைச்சராகப் பதவி வகித்த வடக்கு - கிழக்கு இணைந்த மாகாணசபை, பிள்ளையான் முதலமைச்சராக பதவி வகித்த கிழக்கு மாகாணசபை, விக்கினேஸ்வரனின் வடக்கு மாகாணசபை என்பவற்றின் அனுபவத்தைக் கொண்டே இம்முடிவுக்கு வந்துள்ளனர் எனினும் கணிசமானோரிடம் ஆரம்பப்புள்ளியாகக் கொண்டு முன்னேறலாம் என்ற கருத்தும் உள்ளது.

13 ஆவது திருத்தம் பற்றி தமிழ்த்தரப்பில் போதிய ஆய்வுகளோ, விவாதங்களோ புலமை மட்டத்தில் நடந்தது எனக் கூறமுடியாது. கலாநிதி குருபரன் இது பற்றி ஆழமான கட்டுரைகளை எழுதியிருக்கின்றார். இக்கட்டுரையாளரும் “13 ஆவது திருத்தமும் தமிழ் மக்களும்” என்ற தலைப்பில் நூல் ஒன்றை வெளியிட்டிருக்கின்றார். சிங்களத்தரப்பில் பலர் ஆய்வு செய்திருக்கின்றனர். அவர்களில் பலருடைய ஆய்வுக்கட்டுரைகள் தமிழிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

உண்மையில் 13 ஆவது திருத்தம் பற்றி தெளிவான புரிதல் வேண்டுமாயின் முதலில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு எவ்வாறு இருக்க வேண்டும் என்ற வரைபடத்தினை உருவாக்கி அந்த வரைபடம் 13 ஆவது திருத்தச் சட்டத்துடன் பொருந்துகின்றதா? என்பதை ஆய்வு செய்து பார்க்க வேண்டும்.

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு என்பது கோட்பாட்டு அடிப்படையில் தமிழ் மக்களை ஒரு தேசமாக அங்கீகரித்தல், தமிழ் மக்களின் இறைமையை அங்கீகரித்தல், தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தல் , சுயநிர்ணயத்தை நடைமுறைப்படுத்தக்கூடிய ஆட்சிப் பொறிமுறையை உருவாக்கல் என நான்கு பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும். அதே வேளை அரசியல் யாப்பு சட்டவாக்க வடிவத்தில் கூட்டிருப்பை பேணக்கூடிய வடக்கு -கிழக்கு இணைப்பு ,சுயநிர்ணயமுடைய சுயாட்சி அதிகாரங்கள், மத்திய அரசில் தேசமாக பங்குபற்றுவதற்குரிய பொறிமுறை, சுயாட்சி அதிகாரங்களுக்கான பாதுகாப்பு என்பவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும். இவை தவிர அந்த அரசியல் தீர்வு தமிழ் மக்களின் பங்களிப்புடன் உருவாக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும். இவை பற்றி முன்னரும் பல தடவை இக்கட்டுரையாளரினால் கூறப்பட்டுள்ளது.

13 ஆவது திருத்தம் தமிழ் மக்களை ஒரு தேசமாக அங்கீகரிக்கவில்லை. அதன் ஆட்சி அதிகாரமான இறைமையையும் அங்கீகரிக்கவில்லை. தமிழ் மக்கள் தங்கள் தலைவிதியைத் தாங்களே நிர்ணயிக்கக் கூடிய சுயநிர்ணய உரிமையையும் அங்கீகரிக்கவில்லை. ஒரு நாட்டிற்குள் தேசமாக இருப்பதற்கான ஆட்சிப் பொறிமுறை சுயநிர்ணயமுடைய  சமஸ்டியே! அந்த சமஸ்டி ஆட்சி முறை அங்கீகரிக்கப்படவில்லை. எனவே கோட்பாட்டு அடிப்படையில் 13 ஆவது திருத்தத்தை அரசியல் தீர்வின் ஆரம்பப்புள்ளியாகக் கூட கொள்ள முடியாது.

தவிர யாப்பு வடிவத்திலும் தமிழ் மக்களின் கூட்டிருப்பையும் , கூட்டடையாளத்தையும் பேணக்கூடிய வடக்கு - கிழக்கு இணைப்பு ஏற்க்கப்படவில்லை. தற்காலிகமாக இணைக்கப்பட்ட வடக்கு - கிழக்கு தற்போது நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் பிரிக்கப்பட்டுள்ளது. சுயநிர்ணயமுடைய சுயாட்சி அதிகாரங்கள் எதுவும் 13 ஆவது திருத்தத்தில் இல்லை. மாகாணசபை நிரலில் உள்ள விடயங்களில் கூட சுயாதீனமாக மாகாணசபை சட்டங்களை இயற்ற முடியாது. மத்திய அரசின் பிரதிநிதியாக உள்ள ஆளுநர் சம்மதமளித்தால் மட்டும் சட்டங்களை இயற்ற முடியும். அதிலும் கூட பல விடயங்களில் நியதிச்சட்டங்களை உருவாக்குவதற்கு பாராளுமன்றம் சட்டங்களை இயற்றிக் கொடுக்க வேண்டும்.

மாகாண நிறைவேற்று அதிகாரம் மக்களினால் தெரிவு செய்யப்பட்ட முதலமைச்சர் தலைமையிலான மாகாண அமைச்சரவையிடம் இல்லை. மாறாக மத்திய அரசின் பிரதிநிதியான ஆளுநரிடமே உள்ளது. மாகாண அமைச்சரவை ஆளுநருக்கு நிர்வாகக் கடமைகளில் உதவி புரிவதற்காக மட்டும் அமைக்கப்பட்டுள்ளது.

கடந்த கால மாகாணசபை அனுபவங்கள் சுயாதீன அதிகாரங்கள் எதுவுமில்லை என்பதையே வெளிக்காட்டின. வரதராஜப்பெருமாள் போக்குவரத்து, வீதிகள் தொடர்பாக மாகாணசபை நிரலில் உள்ள விடயங்களில் சட்டமியற்ற முனைந்த போதும் அனுமதி வழங்கப்படவில்லை. பிள்ளையான் ஒரு பியோனை நியமிக்கும் அதிகாரம் கூட தனக்கு இருக்கவில்லை என ஒப்பாரி வைத்திருந்தார். விக்கினேஸ்வரன் முதலமைச்சர் நிதியத்திற்கான சட்டத்தை உருவாக்க முயன்ற போதும் அது ஏற்றுக் கொள்ளப்படவில்லை. மாகாண பொலிஸ் துறை இதுவரை உருவாக்கப்படவில்லை.

நீதித்துறை அதிகாரப்பகிர்வுக்கு உள்ளாக்கப்படவேயில்லை. நாடு முழுவதற்குமான பொதுவான நீதித்துறையே மாகாணங்களிலும் நடைமுறையில் உள்ளது. மாகாண மேல்நீதிமன்றம் உருவாக்கப்பட்டாலும் அதன் அதிகாரம் மத்திய நீதித்துறையிடமே உள்ளது. இத்தனைக்கும் அமெரிக்கா, சுவிஸ்லாந்து போன்ற நாடுகளில் நீதித்துறை அதிகாரப்பகிர்வுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசில் தமிழ் மக்கள் ஒரு தேசமாக பங்குபற்றுவதற்குரிய பொறிமுறை உருவாக்கப்படவில்லை. சுவிஸ்லாந்தின் இதற்கான பொறி முறை வலுவாக உள்ளது. இது உருவாக்கப்படாததினால் மத்திய அரசு சிங்கள பௌத்த அரசசராகவே உள்ளது. மத்திய அரசை சிங்கள பௌத்த அரசாக வைத்துக்  கொண்டு எந்த அதிகாரப்பகிர்வை வழங்கினாலும் அது ஒரு போதும் நடைமுறைக்கு வரப் போவதில்லை. மாகாணசபை முறை, முறையாக செயற்படாமைக்கு இதுவும் ஒரு காரணமாகும்.

அதிகாரங்களுக்கான பாதுகாப்பை பொறுத்தவரை தொடர் துயரமே எஞ்சியுள்ளது. ஏற்கனவே வரலாற்று ரீதியாக தமிழர் நலன் காக்கவென யாப்பில் இருந்த ஏற்பாடுகளை வெட்டிக் குறைப்பது அல்லது கணக்கில் எடுக்காமல் விடுவது என்ற போக்கே பின்பற்றப்பட்டது. சோல்பரி யாப்பின் 29 ஆவது பிரிவு தொடக்கம் வடக்கு கிழக்கு இணைப்பு ஊடாக 16 ஆவது யாப்புத்திருத்தத்தின் தமிழ் மொழி அரசகரும மொழி வரை இதுவே நடந்தது. 13 ஆவது திருத்தத்திலும் வெட்டிக் குறைத்தல், கணக்கக் கெடுக்காமல் விடல் என்கின்ற இரண்டு அணுகு முறைகளும் ஒருங்கே பின்பற்றப்பட்டன கொள்கை உருவாக்கம் என்ற பெயரிலும், பாராளுமன்றச் சட்டம் என்ற பெயரிலும் மாகாணசபை நிரலிலுள்ள பல அதிகாரங்கள் பிடுங்கப்பட்டன. சில அதிகாரங்கள் சூட்சுமமாகப் பிடுங்கப்பட்டன. மாவட்ட வைத்தியசாலைகளை மத்திய அரசு பொறுப்பேற்றல், மாகாண பாடசாலைகளை தரமுயர்த்தி தேசியப்பாடசாலைகள் என்ற வகையில் பிடுங்குதல் என்பதெல்லாம் சூட்சுமமாக நடந்தேறின.

மாகாணசபை முறையே ஒரு எலும்புக்கூடு தற்போதைய நிலையோ செல்லரித்த எலும்புக்கூடு. இதனைத் தான் தமிழ் மக்களின் கைகளில் கட்டி விட இந்தியா முனைகின்றது.

13 ஆவது திருத்த உருவாக்கச் செயற்பாட்டில் தமிழ் மக்கள் பங்கேற்கவில்லை. இந்தியா பலவந்தமாகத் தமிழ் மக்களின் சார்பில் பங்கேற்றது. எனவே அதற்கான பொறுப்பு இந்தியாவிற்கு தான் உள்ளது. ஆனால் இந்தியா நம்பிக்கைப் பொறுப்புடன் செயற்படவில்லை. மேற்கூறிய அதிகாரங்கள் பிடுங்கப்பட்ட போது இந்தியா பாராமுகமாக இருந்தது. தற்போது மட்டும் தமிழ் மக்களை ஒருங்கிணைந்து குரல் கொடுங்கள் என்று கூறி நழுவப் பார்க்கின்றது. தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வாக இல்லாத ஒன்றிற்காகப் பொறுப்புடமை தமிழ் மக்களுக்கு இல்லாது எப்படி ஒருங்கிணைந்து குரல் கொடுக்க முடியும்?

13 ஆவது திருத்தத்திற்காக தமிழ் மக்கள் ஒருங்கிணைந்து குரல் கொடுப்பது அவசியம் அற்றது. அதனை இந்தியா பார்த்துக் கொள்ளட்டும். உண்மையான அரசியல் தீர்விற்காக மட்டும் தமிழ் மக்கள் ஒருங்கிணைந்து குரல் கொடுக்க வேண்டும். இதற்காக மாகாணசபை முறையை நிராகரிக்க வேண்டும் என்றும் கூற வரவில்லை. அது ஏற்கனவே யாப்பில் உள்ள விடயம். அதனை நடைமுறைக்கு கொண்டு வருவதை அதனை உருவாக்கிய இலங்கை அரசும், இந்திய அரசும் தான் பார்த்துக் கொள்ள வேண்டும்.

அரசியல் தீர்விற்கான தமிழ் மக்களின் அரசியல் பயணத்தை 13 ஆவது திருத்தத்துடன் முடக்க ஒரு போதும் அனுமதிக்கக்கூடாது. ■

# இலங்கையில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிநாட்டாரின் ஆதிக்கம் இலங்கையில் தோன்றுவதற்கு முன்னான மன்னர் காலத்து வரலாறுகள் இலங்கையில் தமிழர்களின் தொன்று தொட்ட ஆதிக்கத்தினையும் தனித்துவமான நிர்வாக அலகுகளை ஆட்சி செய்துவந்ததன் சிறப்புக்களையும் அந்நிய நாட்டுப் படைகளுடனும் சிங்களப்படைகளுடன் போரிட்டதன் வரலாறுகளையும் மற்றும் இலங்கையின் முழுப் பகுதியினையும் தமிழ் மன்னர்கள் ஆட்சிக்குட்படுத்தி வைத்திருந்த வீரதீரத்தினையும் புலப்படுத்துவதற்குப் போதுமான ஆதாரங்கள் வரலாற்றில் கண்டுகொள்ளக் கூடியதாக இருந்திருக்கின்றன. இருந்தும் வரலாற்றுக் கால நீட்சியில் அத்தகைய வரலாறுகளை தமிழினம் இழந்து நிற்பதற்கு என்ன காரணம் இருக்க முடியும் என்பதனை சரியான ஆய்வுகளுடன் சிந்திக்க வேண்டியுள்ளது. ஒருவகையில் பார்த்தால் இலங்கையின் பூர்வீக அந்தஸ்தினை சிங்களப் பெரும்பான்மையினர் தமக்குரியதாக மாற்றியமைக்கும் நோக்கத்துடன் தீவிரமாகச் செயற்பட்டு அழிப்பதற்கு முயற்சித்து வந்துள்ளனர் என்பதனைப் புரிந்து கொள்ளும் அதேவேளை தமிழர்கள் தமது பூர்வீக வரலாற்றினை முழுமையாக ஆவணப்படுத்தத் தவறியிருக்கின்றனர்.  இன்றுவரை இந்த இரண்டு விடயங்களும் நிகழ்ந்தேறித்தான் வருகின்றன. இலங்கையின் பலபாகங்களிலும் இருக்கும் தொன்மைச் சின்னங்கள் பலதும் சிங்கள வரலாறுகளைக் கூறும் சான் றுகளாக மாற்றப்பட்டுள்ளன, அதேவேளை மாற்றப்பட் டுக் கொண்டும் வருகின்றன. அவ்வாறு மாற்றப்படுவ தனை எதிர்த்து தமிழ் மக்கள் மேற்கொள்ளும் போராட் டங்கள் போதியளவு வலுக் கொண்டதாக இல்லாமல் இருப்பது இலங்கையின் வரலாற்றுத் தொன்மை திரி படைவதற்கான வாய்ப்புக்களை அதிகப்படுத்துவதாக அமைந்துவிடுகின்றது. ஒரு இனத்தின் தொடர்ச்சியினையும் புவியியல் சார்ந்த இருப்பின் நீட்சியினையும் ஆதாரப்படுத்துவதற்குரிய சான்றுகளை அந்த இனம் இழக்கும் நிலையில் இருக்குமானால் அந்தப் புவித்தொடரில் தனது வரலாற்று ஆதிக்கத் தொடர்ச்சியினைத் தக்க வைப்பதற்கு இயலாத நிலைக்கே சென்று சேரும். இதுவேதான் இலங்கையைப் பொறுத்தவரையில் தமிழர்களைச் சூழ்ந்து கொண்டிருக்கும் ஆபத்து வலயமுமாகும். குறித்த ஒரு இனம் அத்தகைய ஆபத்து வலயத்துக்குள் அகப்பட்டுக் கொண்டிருப்பதற்கு அது கொண்டிருக்கும் இயலாமை, போராட்ட உணர்வின் உறுதித்தன்மையின்மை, எப்போதும் குழுமையச் சிந்தனை கொண்டு செயற்படுதல், பிறிதொருவரின் முயற்சியிலும் உயர்ச்சியிலும் பொறாமைகொண்டு இயங்குதல், எதிலும் தன்னுடைய முக்கியத்துவம் மற்றும் ஆதிக்கம் மட்டும் இருக்க வேண்டும் என்று எண்ணுதல், முழுமையாக ஒன்றுதிரண்டு போராட்டத்தில் ஈடுபடாமல் பிறிதொரு தொகுதியினர் வெறும் பார்வையாளர்களாக மட்டும் இருப்பதற்கு முயற்சித்தல் அல்லது விரும்புதல் போன்ற காரணிகளின் முதன்மையினைக் குறிப்பிடலாம். இது ஒவ்வொரு இனவரலாற்றுத் தொடர்ச்சியிலும் காணப்படக் கூடிய ஒன்றாகிலும் இலங்கையில் தமிழ் இனத்தினைப் பொறுத்தவரையில் மிகவும் மேன்நிலையில் இருக்கும் ஒன்று. இதுவே தொடர்ந்து நீடிக்கும் என்றால் கால நீட்சியில் இலங்கையில் தமிழர்கள் நீண்டகால வாழ்தல் தொடர்ச்சிக்குரியவர்கள் என்ற உண்மை, அவர்களுக்கென்றொரு தனித்துவமான வாழ்க்கைமுறை இருந்ததென்றோ,  வாழ்ந்தார்கள் என்றோ சொல்லக் கூடிய ஆதாரச் சான்றுகள் இல்லாமல் ஆக்கப்படுவதோடு, இலங்கைக்கு உரித்துடைய பூர்வீகக் குடிகள் இல்லை என்ற முத்திரையும் குத்தப்படுவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் நடந்துவிடும்.

ஒரு காலத்தில் இலங்கையின் பெரும்பான்மைப் பிரதேசங்களில் தமிழர்கள் செறிந்து வாழ்திருக்கின்றனர் அதற்கான ஆதாரங்களும் வரலாற்றில் கண்டடையக் கூடியதாக இருக்கின்றது. மன்னர் ஆட்சிக்காலத்தில் இலங்கைத் தமிழ் மன்னர்கள் இலங்கையின் முழுப்பிரதேசத்தினையும் தமது ஆட்சிக்கு உட்படுத்தி வைத்திருந்ததோடு, இலங்கையில் பல்வேறு பிரதேசங்களிலும் தன்னிறைவோடு மக்களை வாழ வைத்திருக்கின்றனர். அத்தகைய இனம் இன்று வடக்குக் கிழக்கிற்கு மட்டும் உரித்துடையவர்கள் என்று ஒரு சுருக்க வலயத்துக்குள் கொண்டுவந்து நிறுத்தப்பட்டிருக்கின்றார்கள். அதிலும் கிழக்கில் முஸ்லீம்கள் தனித்த அதிகார அலகினைக் கேட்கும் நிலையில் இலங்கையின் ஒன்பது மாகாணங்களில் வடக்குப்பகுதியான ஒரே ஒரு மாகாணம் மட்டும் தமிழர்களுக்குரியது என்ற குறுக்க நிலைக்கு வந்திருக்கின்றது. அதிலும் பூரணமான அதிகாரம் வழங்கப்படாத பகுதியாக வடக்குப் பகுதி கட்டமைக்கப்பட்டிருக்கும் நிலையில் தமிழ் தாயகம் என்று அப்பகுதியைச் சொல்ல முடியாத அளவிற்கு  பெரும்பான்மை சிங்கள ஆட்சியதிகாரமே  நிலை பெற்றுக் காணப்படுகின்றது.

ஒரு நாட்டில் அதிக வல்லமையோடு இருந்த இனம் நலிவுற்று அதிகாரமற்ற பிறரிடம் இருந்து அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு இறைஞ்சிக் கொண்டிருக்கும் இனமாக உருமாற்றம் பெற்றிருக்கின்றதென்றால் கால நீட்சியில் பல்வேறு மாறுதல்கள், பல்வேறு அசைவியக்கங்கள் நிகழ்ந்திருக்கின்றன என்பதனைப் புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

இலங்கையில் சிங்கள அரசியல் வரலாற்றுக்கும் தமிழ் அரசியல் வரலாற்றுக்கும் காலவயது ஒத்த தன்மையுடையவையே. காலனித்துவ ஆட்சித் தரப்பினருக்கு எதிராகத் அல்லது தொடர்ச்சியான போராட்டங்களில் இரு தரப்பினரும்  செயற்பட்டு வந்துள்ளர். காலனித்துவத்தின் ஆதிக்கத்திலிருந்து இலங்கை விடுபட்டதனைத் தொடர்ந்து வந்த காலங்கள் மிகவும் முக்கியமானவை, அக்காலத்தினைத் தொடர்ந்துதான் இரு தரப்பு அரசியலும் தீவிரமாக முட்டிமோதத் தொடங்கியது. ஒன்றுபட்டுச் செயற்பட்டுவந்த இருதரப்பு அரசியல் தலைமைகளும் தனிவழியோடத் தொடங்கின.

ஒருவகையில் குறிப்பிட்டால் இலங்கையின மக்களின் ஒட்டுமொத்தப் பிரச்சினையாக இருந்துவந்த காலனித்துவ அதிகாரத்துக்கு எதிராகப் போராடவேண்டிய தேவையின் நிமிர்த்தம் திரண்டிருந்த கூட்டுணர்வு பின்வந்த காலங்களில் அதிகார மேலாதிக்க எண்ணத்தின் மனோநிலைக்கு உட்பட்டு, பெரும்பான்மையினத் தலைவர்களால் திட்டமிட்டு உடைக்கப்படத் தொடங்கியது. இது இலங்கையின் அரசியல் வரலாற்றில் மிகப்பெரிய தாக்குவிசையினை ஏற்படுத்த வழிகோலியது. இதனால் இனங்களுக்கிடையில் முரண்பாடுகள் வலுப்பெற்றதோடு சிறுபான்மையினம் தங்களுடைய உரிமையினைத் தக்க வைப்பதற்கான பாதுகாப்பு உத்திகளை மேற் கொள்ள வேண்டிய கட்டாயத்துக்குள் தள்ளப்பட்டது.  ஏறத்தாழ அறுபத்தி மூன்று ஆண்டுகளாக பல்வேறு வழிமுறைகளிலும் தமது போராட்டத்தினை முன்னெடுத்து வந்த தமிழ்ச் சிறுபான்மையினர் தமது இருப்பையும், அரசியல் உரிமையினையும் உறுதிப்படுத்த முடியாத நிலையிலேயே இருந்து வருகின்றனர். இது பல்வேறு காரணிகளின் பாற்பட்டது.

(தொடரும்)




## உங்கள் அறிவுக்கொரு சவால்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | 3 | |
| | | | | | 4 |
| 5 | | 6 | | | |
| | | | | 7 | |
| 8 | | | | | |
| | 9 | | | 10 | |

முழுப்பெயர்:- ............
தரம்:- ............
கற்கும் பாடசாலை:- ............
விலாசம்:- ............
தொலைபேசி இலக்கம்:- ............

**இடமிருந்து வலம்**

1. பிரபஞ்சத்தில் முடிவற்ற பிரதேசம் (04)
4. நேரம் (மாறியுள்ளது) (02)
5. நினைவு (04)
7. வெற்றி (02)
8. நகரம் (குழம்பியுள்ளது) (05)
9. பூமியின் ஒத்தசொல் (02)
10. சிறைபிடிக்கப்பட்டவர் (02)

**மேலிருந்து கீழ்**

1. மெய்ஞ்ஞானத்தின் எதிர் (05)
2. பெண்களின் குண இயல்புகளில் ஒன்று (04)
3. ஜல்லிக்கட்டு (02)
4. புலி (03)
6. இராமாயணத்தை தமிழில் எழுதியவர் (04)
7. வீட்டு உரிமையாளரால் குடியிருப்பாளரால் வழங்கப்படுவது (03)

**மேலே உள்ள குறுக்கெழுத்து அட்டவணையை சரியாக நிரப்பி 28.10.2021 இற்கு முன் அனுப்புங்கள். ரூபா 500ஐ பரிசாகப் பெறுங்கள்.**

## விடுகதைகள்

01. உடம்பில்லா ஒருவன் 10 சட்டை அணிந்திருப்பான் அவன் யார்?
வெங்காயம்

02. யாரும் ஏற முடியாத மரம் கிளைகள் இல்லாத மரம் அது என்ன?
வாழை மரம்

03. ஆயிரம் அறைகள் கொண்ட பிரமாண்டமான மிட்டாய் கடை. அது என்ன?
தேன்கூடு

04. அடித்தாலும் உதைத்தாலும் அழமாட்டான். அவன் யார்?
பந்து



## வீண் பெருமை

ஓர் அடர்ந்த காட்டில் வீண்பெருமை பேசும் எருமை ஒன்று வாழ்ந்தது. ஒரு நாள் அது குதிரை ஒன்றைக் கண்டது. "நான் வீரமானவன். உனக்குக் கொம்பு இல்லை. எனக்குக் கூர்மையான கொம்புகள் உண்டு. எனது பலம் வாய்ந்த கொம்புகளால் சிங்கம் ஒன்றைக் குத்திக் கொன்றேன்" என்று கூறியது. "நீ பயப்படாதே. உன்னை நான் கொல்லமாட்டேன். உன் எதிரிகளிடமிருந்து காப்பாற்றுவேன். என்னைத் தொடர்ந்து என் பின்னே வா" என்றும் எருமை கூறியது. குதிரையும் மௌனமாக அதன் பின் சென்றது. சிறிது தூரம் சென்றதும் சிங்கத்தின் கர்ஜனை கேட்டது. எருமையும் குதிரையும் ஓடத் தொடங்கின. குதிரை வேகமாக ஓடிச் சென்று பாதுகாப்பான இடத்தை அடைந்தது. அங்கே எருமையும் வந்தது. அந்தக் குதிரை எருமையிடம் "நீ சிங்கத்தைக் கொன்று விட்டாயா?" எனக் கேட்டது. "என்னை மன்னித்து விடு. இனி நான் வீண் பெருமை கொள்ள மாட்டேன்" எனக் குதிரை கூறியது.

**ஜெ.லிவியானா**
தரம் - 05
யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்



## சகோதர பாசம்

தந்தை போல் அன்பு காட்ட
ஒரு அண்ணனும்
தாய் போல் அரவணைக்க
ஒரு அக்காலும்
இருக்கும் வரை எந்தவகையிலும்
நாங்கள் தோற்றுப் போவதில்லை.

**கி.கிருஷன்**
யா/ஹாட்லிக் கல்லூரி
தரம் - 8A

## உங்கள் அறிவை சரி பாருங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 தி | ங் | 2 க | ள் | | |
| ல | 3 வி | லி | | | 4 க |
| 5 க | டி | கா | ர | 6 ம் | ட |
| 7 ம் | ய | ல | 8 வ | 9 கு | லை |
| | ல் | 10 ம் | ன | ம | |
| 11 பா | தை | | 12 ம் | ட | ம |

கடந்த வார குறுக்கெழுத்துப் போட்டியில் பரிசை வெல்பவர்
**செல்வன் கி.கிருஷன்**
தரம் - 08
யா/ஹாட்லிக் கல்லூரி

### பாராட்டு பெறுபவர்கள்

**உ.நிலானுஜன்**
தரம் - 10
யா/இந்துக் கல்லூரி

**ஶ்ரீ.சருண்**
தரம் - 06
யா/குடத்தனை க.றோ.க.த.க.பா

**மு.அபிஷன்**
தரம் - 06
யா/தொண்டமனாறு வீரகத்திப் பிள்ளை ம.வி

**கு.லக்ஷனா**
தரம் - 10
யா/வட. இந்து மகளிர் கல்லூரி

**ம.தேனுஜா**
தரம் - 10
யா/குடத்தனை அ.த.க.பா

**சு.டன்சிகா**
தரம் - 09
யா/மானிப்பாய் பெண்கள் கல்லூரி





**சிறுவர் பகுதிக்கான உங்கள் சொந்த ஆக்கங்களை எங்களுக்கு உடனே அனுப்பி வையுங்கள்**

**தீம்புனல்**
கனகசபை கட்டடத் தொகுதி
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 2564

## சுரங்கத்தில் புதையல் வேட்டை நடத்திய ரோபோக்கள்!

அமெரிக்காவின் இராணுவ ஆராய்ச்சி அமைப்பான 'தார்ப்பா'வின் ரோபோ சவால் போட்டியில், ரூ.150 கோடி முதல் பரிசை ஒரு அணி வென்றுள்ளது. சில ஆண்டுகளுக்கு முன் அறிவிக்கப்பட்ட போட்டி இது.

தரைக்கு அடியில் சுரங்கம் போன்ற சூழல்களில் பலவிதமான சவால்களை எதிர்கொள்ளும் திறன் கொண்ட ஒரு ரோபோவைத் தயாரிப்பது தான் போட்டியின் சாரம். இதில் 'டீம் செரிபெரஸ்' என்ற அணி முதல் பரிசைத் தட்டிச் சென்றது.

மனிதர்கள் உருவாக்கிய சுரங்கம், தரையடி ரயில் நிலைய அமைப்பு, இயற்கைக் குகைகள் போன்றவற்றில் சரளமாகச் சென்று வரவும், சில ஆபத்தான சூழல்களில் காப்பாற்றுதல் போன்ற சவால்களும் இந்தப் போட்டியில் இடம் பெற்றன.

பல நாடுகளிலிருந்தும் இராணுவ ஆராய்ச்சி அமைப்புகள் இதில் தனியாகவும் கூட்டாகவும் கலந்துகொண்டன. வெற்றி பெற்ற செரிபெரஸ் அணியில் ஐந்து நாடுகளைச் சேர்ந்த ஆய்வுக் குழுவினர் வடிவமைத்த ரோபோக்கள் போட்டியிட்டன. ஆம், இந்த அணி நான்கு கால் ரோபோக்கள் மற்றும் சிறிய டிரோன்கள் கலந்த அணியைப் போட்டியில் இறக்கியிருந்தது.

டிரோன்களையும் சேர்த்திருந்ததால்தான், தார்ப்பாவின் குகைகளுக்குள் மறைத்து வைத்திருந்த 40 பொருட்களில், 23 பொருட்களை செரிபெரசின் ரோபோக்கள் சரியாகக் கண்டுபிடித்துத் தந்தன. இப்போட்டியில் கலந்துகொண்ட அணியினர் உருவாக்கிய ரோபோ புதுமைகள் விரைவில் சந்தைக்கு வரும். சாதாரணமாக நினைத்து விடவேண்டாம். இதேபோல 2009 இல் தார்ப்பா நடத்திய ரோபோக் கார் போட்டியினால்தான் இப்போது, தானோட்டி வாகனங்கள் சாலைக்கு வந்திருக்கின்றன!




இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 23.10.2021 அன்று ஜெயஸ்ரீ அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.